
கல்கி
KALKI
8-4-1963
30 காசு



கல்கி

பொருளடக்கம்

சோபகிருது, சித்திரை 15உ ★ ஏப்ரல், 28உ 1963



படவிளக்கம் 24ம் பக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 22 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 39

ஏகோபித்த எதிர்ப்புத் தேவை

'ஹிந்தி மொழி பேசாத பிரதேச மக்கள் விரும்பும் வரை ஆங்கிலமே ஆட்சி மொழியாக இருக்கவேண்டும்; ஹிந்தியை ஆட்சிமொழியாக்கும் விஷயத்தை ஹிந்தி பேசாதவர்களின் விருப்பத்துக்கே விடவேண்டும்' என்று மூன்றாண்டுகளுக்கு முன் பிரதமரவர்கள் வாக்குறுதி அளித்தார். ஹிந்தி பேசுபவர்கள் ஏனைய மக்களைவிட விசேஷ சௌகரியங்கள் பெறக்கூடாது என்ற நியாயமான கருத்தை யொட்டி அவர் இவ்வாறு வாக்குறுதி கொடுத்தார். இப்போது வந்துள்ள ஆட்சி மொழி மசோதாவில் பிரதமரின் வாக்குறுதி காற்றுவாக்கில் பறந்து விட்டது. இது நம்பிக்கைத் துரோகத்துக்குச் சமானமாகும்.

என்றாலும் டில்லியிலுள்ள நமது தமிழக மந்திரிகள், 'ஆட்சி மொழி மசோதா பிரதமரின் வாக்கை நிறைவேற்றி விட்டது' என்று கூறி நம்மை 'ஆமாம் பூசாரி' போடச் சொல்கிறார்கள். ஹிந்தி பேசாத பகுதியிலுள்ள பல பிரமுகர்கள், "எப்படியும் ஒரு நாள் ஹிந்தி ஆட்சிப்பீடத்தில் ஏறித்தானே ஆகவேண்டும்?" என்று ஹிந்திக்கு ஓர் இன்றியமையாமையைக் கற்பித்து வருகிறார்கள். அப்படி ஒப்புக் கொண்டால் இப்போதே பூர்வாங்க வேலைகள் என்ற பெயரில் ஒவ்வொரு துறையிலும் ஹிந்தியைத் திணிக்கும் கைங்கரியம் ஆரம்பமாகிவிடும்.

அரசியல் நிர்ணயச் சட்டத்தில் ஹிந்தியை 1965 லிருந்து ஆட்சி மொழியாக்குவதாக ஷரத்து இருப்பதைக் காரணம் காட்டுவதில் பொருளில்லை. சட்டம் என்பது சரித்திரத்துக்கும், யதார்த்த நிலைக்கும் வழிவிட்டே ஆகவேண்டும்.

ராஜாஜி கோருவதுபோல், ஹிந்தியை ஆட்சிமொழியாக்கும் அரசியல் நிர்ணயச் சட்டத்தின் ஷரத்தையே ரத்து செய்ய வேண்டும். ஆட்சியாளர்கள் அரசியல் நிர்ணயச் சட்டத்தை எத்தனையோ தடவை மாற்றி யிருக்கிறார்கள். அதைப் போலவே ஆங்கிலத்தின் இன்றைய அந்தஸ்து மாறாதிருக்குமாறு சட்டத் திருத்தம் செய்தாலொழிய ஹிந்தி பேசாதவர்களுக்கு நீதி அளித்ததாக ஆகாது.

ஹிந்திக்காரர்களின் ஏகாதிபத்தியத்தி லிருந்து மற்றவர்களைக் காப்பாற்ற வேண்டுமானால் அரசியல் நிர்ணய சட்டத் திருத்தத்தைச் சர்க்கார் செய்தேயாக வேண்டும். ஹிந்தி வெறியர்கள் எவ்வளவு மூர்க்கமாக இருக்கிறார்கள் என்பது சமீபத்திய லோக சபை நடவடிக்கைகளிலிருந்து தெளிவாகி விட்டது. இனியும் அவர்களுக்குப் பிடி கொடுப்பது ஆபத்து.

நிர்வாகத்திலும், நீதித் துறையிலும், பப்ளிக் சர்விஸ் பரீட்சைகளிலும் ஹிந்திக்கு இடமளிப்பதால் விரும்பத்தகாத பல விளைவுகள் நேரிடும். யாருக்கும் புரியாத 'அதிகார பூர்வமான ஹிந்தி'யில் மொழிபெயர்ப்புகள் செய்வதில் காலமும், நம்முடைய வரிப் பணமும் விரயமாவதோடு இது நில்லாது. நாட்டின் ஒற்றுமையும், கட்டுப்பாடும் சிதைவுறும். குழப்பம் தலைவிரித்தாடும். ஹிந்தி பேசும் பகுதி, ஹிந்தி பேசாத பகுதி என்று நாடு துண்டுபடும். இதையெல்லாம் ஆட்சியாளர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆட்சி மொழி விஷயத்தைப் பாராளுமன்றத்தின் 'பெரும்பான்மை'யினரைக் கொண்டு நிர்ணயிப்பது அதர்மமாகும். ஹிந்தி பேசுபவர்கள் அது ஆட்சி மொழியாவதால் சாதகம் முழுவதையும் பெறப் போகிறார்கள்; நாம் பாதகம் முழுவதையும் பெறப்

போகிறோம். எனவே பிரதமர் முன்பு கூறியது போல் இந்தப் பிரச்னையை ஹிந்தி பேசாத மக்களுடைய விருப்பத்தின் மீதுதான் தீர்க்க வேண்டும். ராஜ்ய சட்டசபைகள் எல்லாவற்றிலும் கட்சிக் கட்டுப்பாடுகளின்றி ஆட்சிமொழி விஷயத்தை விவாதித்து, அவற்றில் ஒவ்வொன்றிலும் மிகவும் கணிசமான மெஜாரிட்டியினர் ஹிந்திக்கு மாற வேண்டுமென விரும்பும் வரையில் ஆங்கிலத்தின் இன்றைய அந்தஸ்தைக் குறைக்கக் கூடாது. இதற்குப் பிரதமர் கொடுத்த வாக்குறுதியின்படி பழைய, புதிய அட்டர்னி-ஜெனரல்களைக்கொண்டு சரியான ஒரு மசோதா இயற்ற வேண்டும்.

ஹிந்தி பேசாத பகுதியிலுள்ள எல்லாக் கட்சிகளும் தங்களுடைய இதர வேற்றுமைகளையும், கட்சிக் கட்டுப்பாடுகளையும் மறந்து ஆட்சிமொழி மசோதாவைத் தீவிரமாக எதிர்க்க வேண்டும். இல்லாவிடில் நாம் எல்லோரும் பாரத நாட்டில் கீழ்த்தரக் குடிகளாகி விடுவோம்! தாங்கலாகாது!


நிரந்தர நெருக்கடியா?


நேரு அவர்கள் நியூயார்க் டைம்ஸ் நிருபருக்கு அளித்துள்ள பேட்டியில், 'சீனா இப்போதைக்கு இந்தியாவை மீண்டும் தாக்கும் என நான் எண்ணவில்லை' என்றும், 'சீன இந்தியப் பிரச்னை ஒரு பனிப் போராகி விட்டது' என்றும் கூறியிருக்கிறார்.

பனிப் போர் என்றால் நீண்ட காலத்துக்குக் குமுறல் நீடித்து வரும். இந்நிலையில் 'நெருக்கடி நிலை'யை மக்கள் பேரில் ஒரு பனிப் போராக நீடிப்பது அநியாயாகும். யுத்தம் என்று தீவிரமாக நடைபெறும் போதுதான் மக்கள் தங்கள் உரிமைகளைத் தியாகம் செய்ய வேண்டும் என்று கோரலாம். நிரந்தரமான குமுறலுக்காக மக்கள் நிரந்தரமாகத் தங்கள் சுதந்திரங்களைப் பறி கொடுத்து நிற்க வேண்டும் என்பது சரியாகாது.

நாம் இழந்த பகுதிகளில் ஓர் அங்குலத்தைக் கூட இன்னும் மீளப் பெறவில்லை; சீனாவின் யுத்த நிறுத்தத்தை நஷ்டப்பட்ட நாமும் ஏற்று மானமின்றி நிற்கிறோம். இப்போது பிரதமர் அப்பகுதிகளை மீட்பது பற்றிப் பேசவில்லை. 'இப்போதைக்கு மீண்டும் யுத்தம் கிடையாது' என்கிறார். அப்படியானால் அவர் 'சீனா கவர்ந்த பகுதிகளை நாம் நிச்சயமாக இழந்தாகி விட்டது' என்று வெளிப்படையாகச் சொல்ல வேண்டும். மக்மாஹன் கோட்டை இப்போது நாம் 'கோட்டை' விட்டு, சூ-யென்-லாய் போடும் கோட்டை ஒப்புக் கொள்

பாலத்தின் அடியில் வெடி !





கிறோம் என்று மக்களிடம் மனம் விட்டுக் கூற வேண்டும். அதன் பின் தமது சாந்த சமாதானத் திருப்பணிகளைத் தொடங்க வேண்டும்.

'யுத்தம் கிடையாது; ஆனல் நெருக்கடி நிலைமை நீடிக்கும்' என்பது ஒன்றுக்கொன்று முரணுகும். நெருக்கடிக் கால அதிகாரங்களைக் கொண்டு செய்யப்பட்டுள்ள தங்கக் கட்டுப்பாடு முதலிய சட்டங்கள் நிரந்தரமாகச் செல்லுபடியாகுமா என்பதைச் சட்ட நிபுணர்கள் ஆராய இது ஒரு தருணமாகும்.

என்ன சேதி?

சுதந்திரக் கட்சியின் வெற்றி

குஜராத் ராஜ்யத்தில் கோதாரத் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகரை விடச் சுதந்திரக் கட்சி அபேட்சகர் 14,000 வோட்டுக்கள் அதிகம் பெற்று வெற்றி பெற்றிருக்கிறார் என்ற செய்தியைக் கேட்டுக் காங்கிரஸ் ஆட்சியை எதிர்க்கும் எல்லாக் கட்சியினரும் பெரும் மகிழ்ச்சி அடைவார்கள். சென்ற தடவை சுதந்திரக் கட்சி 4000 வோட் வித்தியாசத்தில் வென்றது; இம்முறை தீவிர காங்கிரஸ் போட்டியிருந்தும் வித்தியாசம் பெருகியுள்ளது. இதிலிருந்து ஆளும் கட்சியினிடம் மக்கள் எவ்வளவு அதிருப்தி அடைந்திருக்கின்றனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. தமிழ் நாட்டு மக்கள் குஜராத் மக்களுக்குப் பின் தங்கி விடமாட்டார்கள் என்று நம்புகிறோம்.

அம்ரோஹா தொகுதி

ஆசாரிய கிருபளானி தேர்தலுக்கு நிற்கும் அம்ரோஹாவில் மந்திரி ஹபீஸ் முகம்மத் இப்ராஹிம் அவர்களைக் காங்கிரஸ் அபேட்சகராக நிறுத்தியிருக்கிறார்கள்.

அம்ரோஹா தொகுதியில் சுமார் நாற்பது சத விகிதம் வாக்காளர்கள் முஸ்லிம்களாக இருப்பதால் ஒரு முஸ்லிமைக் காங்கிரஸ் அபேட்சகராக நிறுத்தியிருக்கிறார்கள். அதிலும் பதவியி லிருக்கும் ஒரு நபரை நிறுத்தியிருக்கிறார்கள். காங்கிரஸ் சாதி சமய உணர்ச்சியைத் தூண்டுவதோடு அதிகார பலத்தையும் உபயோகப்படுத்தி வெற்றி பெறப் பார்க்கிறது என்பதற்கு இதைவிட அத்தாட்சி வேண்டுமா?



போகிற போக்கில்..

சிட்டுக்குருவி

போன ஜன்மத்தில் திரு மொரார்ஜி பாக்தாத் நகர வியாபாரியாகப் பிறந்திருக்க வேண்டும். இந்த வியாபாரிகள் ஒட்டகங்களின் முதுகில் பெரும் பாரத்தை ஏற்றி வைத்து விட்டுக் கடைசியில் ஒரு வைக்கோல் புரியை அவற்றிலிருந்து எடுத்துப் போட்டு அந்த ஒட்டகங்களை ஏமாற்றுவார்கள். அதே போல 'வரிச் சலுகை' என்று திரு மொரார்ஜி இன்று மக்களை ஏய்க்கிறார். 275 கோடி ரூபாய்க்குப் புது வரிகளைப் போட்டுவிட்டு இப்போது 16 கோடிக்குச் 'சலுகை' தந்திருக்கிறார்.

மண்ணெண்ணெய் வரி மக்களை வதைப்பது என்று நாடு முழுவதுமே அழுதது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பல அங்கத்தினர்களும் இந்தக் குற்றச்சாட்டில் கலந்து கொண்டார்கள். இறுதியில் என்ன ஆயிற்று? மட்டரக எண்ணெய்க்கு இனிப் பாதி வரியாம்! உயர் ரகத்துக்கு 20 சதவிகிதம் என்று அறிவிக்கிறார். இந்தச் சலுகை யாருடைய மனத்தையும் குளிரச் செய்யாது என்பது திண்ணம்.

ஃ ஃ ஃ

கட்டாய சேமிப்பிலிருந்து சிலருக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஐந்து ரூபாய்க்குக் குறைவாக நிலவரி செலுத்துபவர்களுக்கும் சின்ன உத்தியோகஸ்தர்களுக்கும் கட்டாய சேமிப்புக் கிடையாதாம். இந்தச் சலுகையையும் 'மனக் கஷ்டத்துடன்' தான் திரு தேசாய் செய்திருக்கிறார். 'சுண்டைக்காய் கால் பணம் சுமை கூலி முக்கால் பணம்' என்பது போல் இந்தக் கட்டாய சேமிப்புத் திட்டம் அமுலாகப் போகிறது. இந்தச் சேமிப்பு மூலம் கிடைக்கும் வருமானத்தையும் இதற்காக ஆகும் செலவையும் அடுத்த ஆண்டில் நாம் காண்போம். மக்களின் சேமிப்பினால் உண்டான வரவைவிட அந்தச் சேமிப்பை ஈட்ட சர்க்காருக்கு ஏற்பட்ட செலவு அதிகமாகிறதா இல்லையா என்று பாருங்கள்!



'வரிச் சலுகைகள்' போலவே தங்கம் பற்றியும் திரு தேசாய் திருவாய் மலர்ந்தருளியிருப்பது குறிப்பிடத் தக்கது. 14 காரட் தங்கத்தையும் குறைத்தாக வேண்டும் என்று கர்ஜித்திருக்கிறார். என்ன காரணத்தாலோ திரு மொரார்ஜிக்குத் தங்கத்தின் மீது அத்தனை கோபம் இருக்கிறது!


சார்லஸ் டிக்கன்ஸ் என்ற பிரபல பிரிட்டிஷ் நாவலாசிரியருக்குச் சாரட்டு வண்டியைக் கண்டால் கோபம் வருமாம். காரணம் பால்ய வயதில் அவர் காசு பணம் இல்லாமல் கால் கடுக்க நடந்து போய்க் கொண்டிருக்கும்போது அந்த வண்டிகள் அவரை ஏற்றிக் கொள்ள மறுத்தனவாம்.


சார்லஸ் டிக்கன்ஸ் போல் மொரார்ஜிக்குத் தங்கம் ஆத்திரத்தை ஏற்படுத்த ஏதாவது காரணம் இருக்கும் போலும்! அவரது வாழ்க்கைச் சரிதத்தை எழுதுகிறவர்கள் இந்த ஆத்திரத்துக்கு அர்த்தம் சொல்ல வேண்டும்!

ஃ ஃ ஃ

ஹிந்தி பற்றி நேருஜி அவர்கள் 1959-ல் வாக்குறுதி கொடுத்தபோது பலர் சந்தோஷப்பட்டு 'வெற்றி—வெற்றி' என்றார்கள். ஆனால் இதற்கு மூல காரணமாக இருந்த ஒருவர் மட்டும் அப்படி ஒன்றும் சந்தோஷப்படவில்லை. நீள அறிக்கைகள் தந்து தம் மகிழ்ச்சியைத் தெரிவிக்கவில்லை. ''நடக்கட்டும், பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்று இருந்தாரோ என்னவோ?

இன்று நேருஜியின் வாக்குறுதி காற்றில் பறந்துவிட்டது. 1975 வரைதான் ஆங்கிலம் இருக்கும். பிறகு அது ஒழித்துக் கட்டப்படும் என்னும் ரீதியில் தீர்மானம் வந்திருக்கிறது. சந்தோஷப்பட்டவர்கள் எல்லாம் 'மோசம் போனோம்' என்கிறார்கள். பொறுத்திருந்து சந்தோஷப்படுவோம் என்ற ராஜாஜி பழையபடியும் போர்க் கொடியை உயர்த்தியிருக்கிறார்.





முதல் மூவர்

3

ராஜாஜி-சோமு

கடலோசையைக் கேட்டு அதை நோக்கி வினவுவார் போலே பொய்கையார் எம்பெருமானுடைய திருமேனிச் சிறப்பை விளக்குகிறார்.

மாலும் கருங்கடலே!
என்னோற்றாய்

[மாலும்—மதிமயக்கப் பரவசத்திலே கூப்பாடு போடும். என் நோற்றாய்—நீ என்ன தவம் செய்தாய்.]

மிக மிஞ்சிய ஆனந்த மயக்கிலே சத்தமிடும் கடல் ஏதோ பெரிய தவத்தைச் செய்திருக்கிறது. அதனால்தான் அந்த ஆனந்தப் பேறு அதற்குக் கிட்டியுள்ளது. எத்தகைய பேறு அது?

வையகம் உண்டு
ஆலின் இலைத்துயின்ற
ஆழியான்

[வையகம் உண்டு—உலகை உண்டு அடக்கி. ஆலின் இலைத்துயின்ற—ஆலிலையிலே பள்ளி கொண்ட, ஆழியான் – சக்கராயுதத்தைத் தரித்த திருமால்.]

உலகை உண்டவனும், ஆலிலையிலே பள்ளி கொண்டவனுமாகிய எம்பெருமான் துயில்வது அந்தக் கடலிலே தான் அல்லவா! சதா அவனுடைய திருமேனியை ஆலிங்கனம் செய்து கொண்டே இருக்கும் பாக்கியம் அல்லவா கடலுக்குக் கிடைத்திருக்கிறது! இந்தப் பாக்கியத்திற்காகக் கடல் எத்தகைய தவம் செய்திருக்க வேண்டும்!

—கோலக்
கருமேனிச் செங்கண்மால்
கண்படையுள் என்றும்
திருமேனி நீதீண்டப்
பெற்று.

[கோலக் கருமேனி—அழகு பொருந்திய கரிய மேனி. செங்கண்மால்—செவ்வரிபடர்ந்த கண்களையுடைய விஷ்ணுமூர்த்தி. கண்படையுள்—பள்ளி கொண்ட இடத்தில், என்றும்—இடைவிடு இல்லாமல் எப்போதும். திருமேனி தீண்டப் பெற்று - அவனுடைய திருமேனியை ஸ்பரிசித்துக் கொண்டே இருக்கும் பாக்கியத்தைப் பெற்று.]

மாலும் கருங்கடலே
என்னோற்றாய்

[மாலும் கருங்கடலே—மயங்குகிற கடலே. அதாவது திருமாலின் திருமேனியைத் தொட்டுக் கொண்டே இருக்கும் பாக்யத்தைப் பெற்று. அந்தப் பரவசத்திலே கூத்தாடுகிற கடலே. என் நோற்றாய்—என்ன நோன்பைச் செய்தாயோ!]

மாலும் கருங்கடலே
என்னோற்றாய். வையகமுண்டு
ஆலி னிலைத்துயின்ற
ஆழியான்—கோலக்
கருமேனிச் செங்கண்மால்
கண்படையுள் என்றும்
திருமேனி நீதீண்டப்
பெற்று.

இந்தப் பாக்கியத்தை நான் பெறவில்லையே என்று கடலைக் கண்டு அன்புப் பொறாமையில் பாடுகிறார் ஆழ்வார். பாட்டில் பக்தியுடன் அருங் கற்பனையும், ஒப்பற்ற கவியமும் சேர்ந்து மிளிர்கின்றன!

கவியரசர் கண்ட கவிதை



''எந்தன் குழந்தை இதயத்தில்
இலகும் உலகம் சென்றே நான்
பந்தம் இல்லா அமைதியினில்
படிய நினைப்பேன்; அவ்வுலகில்
விந்தைத் தாரகை வாய்பேசும்
விரைந்து வானம் இறங்கிவரும்
முந்தும் மழைதன் வில் வளைத்து
முற்றத் திறங்கி விளையாடும்!''

இந்தப் பாடலைப் படித்ததும் இது ஒரு மொழிபெயர்ப்பு என்று நம்மால் நம்ப முடிகிறதா? இல்லை. தமிழ்க் கவிஞர் ஒருவர் தமிழிலேயே சிந்தித்துத் தமிழ் மரபோடு ஒட்டித் தமிழிலேயே யாத்துத் தந்த அரியதொரு பாடல் என்றே சொல்லத் தோன்றுகிறதல்லவா? இதுவே அந்த மொழிபெயர்ப்பு நூலின் அற்புத வெற்றியாகும்!

ஆம்; மேலே காண்கிற பாடல் ஒரு மொழிபெயர்ப்பு! வங்கக் கவியரசர் ரவீந்திரநாதரின் பாடலை இத்தனை சுகமாக மொழிபெயர்த்துத் தருகிறார் பேராசிரியர் அ. சீநிவாசராகவன் அவர்கள்!

பேராசிரியர் சீநிவாசராகவனைத் தமிழுலகம் நன்கு அறியும். கவிதையின் உயிர்த் துடிப்பைத் தாம் உணர்ந்ததோடு, பல்லாயிரக் கணக்கான மாணவர்களுக்கு நாள்தோறும் எடுத்து உணர்த்தி வருகிற பேராசிரியர் அவர்! அதோடு கவிதையின் சிறப்பியல்புகளையெல்லாம் பொது மேடைகளிலும் பத்திரிகைகளின் வாயிலாகவும் தெள்ளிய தமிழிலே விளக்கி வருபவர். குருதேவரின் குரலை அதே ஓசையோடு 'கல்கி' வாசகர்களுக்கு ஒலி பரப்பியவர்! ஆங்கில இலக்கியத்துடன் தமிழ் இலக்கியத்தையும் ஆழ்ந்து கற்று, ஒப்பற்ற தமிழ்க் காதலோடு அரும்பணி ஆற்றி வருகிற இலக்கியப் பேரறிஞர்! சிறந்த கவிஞர்! 'நாணல்' என்ற புனை பெயரில் பல நெஞ்சுவைப் பாடல்களை இயற்றி நமது உள்ளங்களைக் கவர்ந்தவர். இப்படிப் பல வகையிலும் ஆற்றலும் தகுதியும் நிரம்பிய பேராசிரியர் சீநிவாசராகவன் அவர்கள் ரவீந்திரரின் 120 பாடல்களைத் தமிழில் மொழிபெயர்த்துக் 'கவியரசர் கண்ட கவிதை' என்று மகுடம் சூட்டி, அழகானதொரு நூலாக நமக்கு வழங்கியிருக்கிறார்.


தாகூரின் பாடல்களிலே பொதுவாக மனித மனத்தின் ஆசாபாசச் சலனங்களுக்கு மத்தியிலே இறைவனை நோக்கிக் கரங்களை நீட்டும் ஆன்ம நாட்டத்தைக் காணுகிறோம். வடிவங்களைக் கடந்த பரம் பொருளை, நம்மைச் சுற்றி நின்று காட்சி தரும் கோடிக்கணக்கான வடிவங்களிலே கண்டு வழிபடுகிற உள்ளம், தாகூரின் உள்ளம்! அந்த உள்ளத்தோடு இரண்டறக் கலந்து அந்த உள்ளத்தின் உணர்ச்சிகளையும், அவற்றின் ஒலிகளையும், அப்படியே தமிழ்ச் சிமிழுக்குள்ளே பிடித்துத் தருகிறது அ. சீ. ரா.வின் மொழிபெயர்ப்பு!

வாழ்வைக் கண்டு அஞ்சி ஓடாமல், துறவு பூணாமல், உலக வாழ்விலே இணைந்து, அதனுள்ளேயே சத்திய ஒளியைக் காணும் சித்தாந்தமே தாகூரின் சித்தாந்தம். அதை அதன் பூரண வடிவிலேயே காணுகிறோம் இந்த மொழிபெயர்ப்பில்.

''கவியரசர் கண்ட கவிதை'' என்ற இந்த அரிய நூல் இருபதாம் நூற்றாண்டு மொழிபெயர்ப்பு இலக்கியத்திலே ஒரு சரித்திரப் பெருஞ் சாதனையாகும். பேராசிரியர் அ. சீ. ரா. அவர்கள் இன்றையத் தமிழ் உலகுக்கு எழுதித் தந்த ஒரு மகத்தான நன்கொடைச் சாசனம் இந்த நூல்!

விலைமதிப்பற்ற வங்கக்கவியரசரின் இலக்கியச் செல்வத்தைத் தங்கத் தமிழிலே பொதிந்து ஆறு ரூபாய்க்குக் கொடுக்க முன் வந்த மாக்மில்லன் கம்பெனியார் தமிழ்மக்களின் பாராட்டுக்குரியவர்கள். — மீ. ப. சோ.

காரைக்குடி கம்பர் விழாவில் 'கவியரசர் கண்ட கவிதை' நூலை நீதிபதி கைலாசம் அவர்கள் வெளியிடுவதை மேலே படத்தில் காணலாம். நீதிபதிக்கு அருகில் நூலாசிரியர் ஸ்ரீ அ. சீ. ரா.



சிக்கிம்


அழகென்னும் தத்துவத்தையே சாமர்த்தியமாகக் கட்டிப் பிடித்து வைத்து அதற்கு அலங்காரமும் செய்வித்தாற் போல அவளுக்கு ஆடை ஆபரணங்கள் அணிவித்திருந்தார்கள்.

இலேசான நீலம் படர்ந்த வெண் பட்டாடையை இடையோடு ஒட்டினாற் போல் இருபத்திரண்டு காரட் தங்கத்தில் செய்த கனமான ஒட்டியாணம் இறுகப் பற்றியிருந்தது. வழுவழுப்பான கரங்களை வளைத்துக் கொண்டிருக்கிற பெருமிதத்துடன் சிறப்பான வேலைப்பாடு அமைந்த சொர்ணக் காப்புக்கள் குலுங்கின. கேச அலங்காரத்தைத் தங்கத்தாலான கொண்டை ஊசிகள் பூர்த்தி செய்தன. ஸிக்கிம் நாட்டின் தலைசிறந்த கலைஞனால் தயாரிக்கப்பட்ட காதணிகள் வேறு. வெள்ளி இழைகள் பின்னி ஓடும் பளபளப்பான செருப்புக்கள் பாதங்களைப் பற்றியிருந்தன. இவ்வளவுடன் இடையிலிருந்து தொங்கிய சிறிய கத்தியும் சேர்ந்து அந்த அமெரிக்க நாட்டு அழகியின் தோற்றத்தை அடியோடு மாற்றித்தான் விட்டன.

பதின்மூன்று பணிப் பெண்கள் உடன்வர மணப் பெண் ஊர்வலம் மெல்ல மெல்லச் சென்று, அரச குடும்பத்தினர் புத்தபிரானைத் தொழுவதற்கெனப் பிரத்தியேகமாக அமைந்திருந்த அந்த ஆலயத்தை அடைந்தது.

அங்கே, பலவித வாத்திய ஒலிகளும் வாழ்த்தொலிகளும் விண்ணை நிறைத்தன. கொம்புகளை









இடது பக்கம் மேலே: ஸிக்கிம் நாட்டுப் பெண்ணின் கழுத்தை முத்தும் பவழமும் அலங்கரிக்கின்றன.

நடுவில்: இது போன்ற பயங்கர வேஷங்களை அடிக்கடி பார்த்து வந்தால் மக்களுக்குச் சாவைப் பற்றிய பயம் நீங்கும் என்று லாமாக்கள் நம்புகிறார்கள்.

கீழே: ஸிக்கிமில் உள்ள 'நாட்டு கணவாய்ச் சாலை' வழியாக இந்தியாவுக்கும் திபெத்துக்கும் இடையில் செழித்து வந்த வியாபாரம் சீனர்களால் தடுக்கப்பட்டுள்ளது.

ஸிக்கிம் தேசத்துக் குழந்தைகள் இளைஞரையும் தலைநகர் காங்டோக்கிலுள்ள ஆலயத்தையும் இப்பக்கத்தில் காண்கிறீர்கள். கோயிலெதிரில் கொடிகளில் குறிக்கப்பட்டுள்ள பிரார்த்தனைகளைக் காற்று இறைவனிடம் ஏற்றுச் செல்லுமாம்.

நடுவில்: திருமணக் கோலத்தில் ஸிக்கிம் மஹாராஜகுமார். அமெரிக்கப் பெண்ணை அவர் மணந்து கொண்டதற்கு ஸிக்கிமில் எதிர்ப்பு இல்லாமல் போகவில்லை. ஆனால் பதினைந்து மாதங்களுக்குள் ஏழு முறை அவரை அமெரிக்காவுக்கு இழுக்கடித்த காதலின் சக்தி எதிர்ப்புகளை வெற்றி கண்டதுடன் திருமண ஊர்வலத்தில் மணப்பெண் குதிரையில் ஏறி வர வேண்டுமென்ற சம்பிரதாயத்தைக் கூட மாற்றி காரில்வர அனுமதித்து விட்டது! மஹாராஜகுமாரின் முதல் மனைவி இறந்து ஆறு வருஷங்களாகின்றன. மூன்று குழந்தைகளும் உண்டு.

ஊதினர், முரசங்களை அதிரச் செய்தனர், சங்குகளை முழக்கினர்.

இறைவனுக்கும், தான் கணவனாக வரித்துள்ள மஹாராஜ்குமாருக்கும் பட்டுச் சால்வைகளைப் பக்தியும் அன்பும் கலந்த காணிக்கையாகச் சமர்ப்பித்தாள் மிஸ். ஹோப்குக். மகாராஜ்குமார் நம்கையால் அமர்ந்திருந்த மேடைக்குச் சற்றுத் தாழ்வாகவே அவளையும் உட்கார வைத்தார்கள். சரிகை ஆடை அணிந்து சொர்ண மயமாகத் தகதகக்கும் தன் கணவனுக்குத் தன் உறவினருள் ஒருவர் மலர் மாலை அணிவிப்பதை ஓரக் கண்களால் பார்த்து மகிழ்ந்து புன்னகை உதிர்த்தாள் ஹோப். தான் வைத்த நம்பிக்கை எதுவும் வீண்போக வில்லை என்பதனைக் கண்டாள், அரச குமாரியாகி விட்ட அந்த அமெரிக்க நங்கை. திருமண வைபவத்தையொட்டி உலகின் பலபாகங்களிலிருந்தும் வந்திருந்த பல தேசத்துப் பிரதிநிதிகளுக்கும் சம்பிரதாய முறையில் தேநீர் வழங்கப்பட்டது. அத்துடன் திருமணச் சடங்குகள் முடிவுற்றன என்றாலும் மக்களின் குதூகலத்துக்கும் கேளிக்கை கொண்டாட்டங்களுக்கும் கேட்கவா வேண்டும்? நான்கு நாட்களுக்கு அந்த நாடே அமர்க்களப்பட்டது.

ஆனால் அந்த மலை நாட்டு மகாஜனங்கள் புத்தாடைகள் உடுத்தி வீதிகளிலே தாளம் தப்பாமல் களிநடனம் புரிந்த அதே நேரத்தில் சீனச் சிப்பாய்களும் எல்லைப்புறத்தில் காலகதி பிசகாமல் அணிவகுப்புக்களை நடத்திக் கொண்டிருந்தார்கள். இங்கே அதிர்வேட்டுக்களின் ஓசை இடி முழக்கம்போல் கேட்ட போது அங்கே துப்பாக்கிப் பயிற்சியில் தோட்டாக்களைத் தீர்த்துக் கட்டிக் கொண்டிருந்தார்கள் சீனர்கள்.

இதனை யெல்லாம் சிக்கிம் மகாராஜ்குமார் நம்கையால் சிறிதும் மறக்க வில்லை. 'தேன் நிலவுக்கு எங்கே போவதாய் உத்தேசம்?' என்று பத்திரிகை நிருபர்கள் கேட்ட போது 'சீனத்தொல்லை வீட்டு வாசலில் காத்திருக்கும் போது தேன் நிலவுக்கு நேரமேது?' என்றார் அவர். அது மட்டுமா? திருமணம் முடிந்த இருபத்தைந்தாம் நாளே அவர் புது தில்லியில் இருந்தார். ஜனாதிபதி ராதாகிருஷ்ணனைச் சந்தித்ததுடன் தமது நாட்டின் எல்லைப்புறத்தில் பெருவாரியான சீனத் துருப்புக்கள் வந்து குவிந்திருப்பது பற்றி மத்திய சர்க்கார் பாதுகாப்பு மந்திரி சபையில் உயர்தர அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தார். சிக்கிம் மக்கள் அமைதியை இழக்காமல் எந்த இக்கட்டான நிலைமையையும் எதிர்கொள்ளும் தைரியத்துடன் இருக்கிறார்கள். ஆனால் சீனர்கள் சிக்கிமில் அடியெடுத்து வைத்தால் அது மூன்றாவது உலக யுத்தமாகவே உருவெடுக்கும் என்று எச்சரித்தும் உள்ளார்.

உலகப் படத்தைப் பார்க்கும்போது மிளகத்தனை சிறிதாகத் தோன்றினாலும், மோட்டார் காரில் ஏறி நாட்டின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்கு இரண்டே மணி நேரத்தில் சென்று விடலாமென்றாலும் இப்பிரதேசம் இந்தியாவையும் ஜனநாயக உலகையும் பொறுத்த மட்டில் மிகமிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பகுதியாகும். ஏனெனில் திபெத்திலிருந்து இந்தியாவுக்குச் சிரமமின்றிச் சுலபமாக வர நேர்முகமானதும் நீளக் குறைவானதுமான பாதை சிக்கிம் நாட்டின் ஊடாகத்தான் அமைந்துள்ளது. இந்த 'நாட்டு கணவாய் சாலை' வழியாகக் காலம் காலமாகத் திபெத்துக்கும் இந்தியாவுக்கும் இடையே வர்த்தகம் நடைபெற்று வந்திருக்கிறது. எண்ணெயும் தானியங்களும் கழுதைகளின் மீது ஏற்றிக் கொண்டு செல்வார்கள். இப்படி எத்தனையோ வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் வாழ்வளித்து வந்த நாட்டு கணவாய் சாலையில் இன்று வியாபாரப் போக்குவரத்து அடியோடு நின்று போனது பல்லாயிரக்கணக்கானோரைத் துயரில் ஆழ்த்தியுள்ளது. திபெத்தைக் கைப்பற்றிய கம்யூனிஸ்ட் சீனர்கள் முதல் காரியமாக இந்தப் பாதையில் முட்டுக்கட்டை போட்டார்கள்.

இந்தியா மீது சீனா படையெடுக்கத் துணிந்தால் அதற்கு மிகவும் சௌகரியமான பாதை இதுதான் என்று அமெரிக்காவில் உள்ள இந்திய ஸ்தானிகர் பி. கே. நேரு அவர்களால் வர்ணிக்கப்பட்ட இப்பாதையைச் சீனர்கள் தங்கள் துர்நோக்கங்களுக்குப் பயன்படுத்த முடியாமல் இன்று இடையில் நின்று தடுப்பவர்கள் இந்தக் குட்டித் தேசத்தில் வாழும் ஒரு லட்சத்து அறுபத்தையாயிரம் மக்கள். நாட்டின் ஜனத்தொகையே இவ்வளவுதானென்றால் அவர்களில் போர்ப் பயிற்சி பெற்றவர்கள் எத்தனை பேர்கள் இருக்க முடியும்? அவர்கள்தான் அலை அலையாக வரக் கூடிய சீன அரக்கர்களை எத்தனை நாட்கள் தாக்குப் பிடிக்க முடியும்?

அதனால்தான் அவர்களுடைய நாட்டை அன்னியரின் படையெடுப்பிலிருந்து பாதுகாக்கும் பொறுப்பை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலிருந்து இந்தியாவின் கடமையாக இருந்து வந்திருக்கிறது இப்பணி. அத்துடன் இணைந்த விஷயமாகிய அயல் நாட்டுக் கொள்கையையும் நாம் சிக்கிமுக்கு வகுத்துத் தருகிறோம். மற்ற எல்லா விஷயங்களிலும் அவர்களுக்குச் சுய நிர்ணய உரிமை பரிபூரணமாய் உண்டு.

அரசியல் நிர்ணயச் சட்டம் இல்லாவிடினும் அரசியல் கட்சிகளும் பாராளுமன்றமும் உள்ளன. எனினும், பத்திரிகைகளில் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது என்பார்களே அது போல் இங்கேயும் அரசரது தீர்ப்பே முடிவானது. சிக்கிம் மக்களின் கோரிக்கைக்கு இணங்கி அவர்களுடைய நாட்டின் முன்னேற்றத் திட்டங்களுக்காகப் பல கோடி ரூபாய்களைக் கொடுத்து உதவி வருகிறோம் நாம். தபால் தந்தி போக்குவரத்துக்களையும் பாரத அரசாங்கமே கவனித்துக் கொள்கிறது. இந்த நிர்வாக விஷயங்களைக் கவனிக்கவும் உள்நாட்டில் அமைதி நிலவ அரசருக்கு ஆலோசனைகள் கூறவும் ஒரு திவானை நியமித்தும் இருக்கிறது. இந்தியப் பட்டாளத்தினரும் எதற்கும் சித்தமாய்க் காத்திருக்கின்றனர்.

நாட்டின் பாதுகாப்பை இந்தியாவின் பொறுப்பில் விட்டுவிட்டதால் சிக்கிம் நாட்டினரின் பராக்கிரமத்தைக் குறைவாக மதிப்பிட்டு விடலாகாது. அந்நாட்டில் கர்ண பரம்பரையாக வந்துள்ள கதைகளுள் ஒன்று, கைபொம்க என்ற அரசனைப்பற்றியது. அவன்

சென்னை

பிளாசா - மேகலா

முருகன் - ஜெயராஜ்

(சைதாப்பேட்டை)

மற்றும்

தென்னகமெங்கும்



சரோடி பிரதர்ஸ்

கலை அரசி

விஞ்ஞான அற்புதங்களை விளக்கும் ஒரு புதுமைச்சித்திரம்

டைரக்ஷன்

A. காசிலிங்கம்

வசனம்: ரவீந்தர் · இசை: K.V. மகாதேவன்...

ஒளிப்பதிவு: சுப்பிரமணியம் கலை: பொன்னுசாமி

எடிடிங்: கோலப்பன்...

WORLD NEGATIVE RIGHTS CONTROLLED BY

ராதாகிருஷ்ணா பிலிம்ஸ் (பி) லிமிடெட்

ஆலப்புழை

சேர்மன்

க. துரைசாமி ரெட்டியார்

விநியோகஸ்தர்கள்: சென்னை நகரம்: எம்ஜியார் பிக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை-14 வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு (சித்தூர், பாண்டி உட்பட): எம்ஜியார் பிக்சர்ஸ் பிரைவேட் லிட்., சென்னை-14 * கோயமுத்தூர், நீலகிரி: சந்திரபிரபா பிக்சர்ஸ், கோயமுத்தூர்-1 * கேரள ராஜ்யம், கன்யாகுமரி, செங்கோட்டை: ராதாகிருஷ்ணா பிலிம்ஸ் பிரைவேட் லிமிடெட், ஆலப்புழை * மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி: லியார் பிலிம்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை * சேலம்: வீராசாமி பிக்சர்ஸ், சேலம் மைசூர்: மார்ஸ் & மூவிஸ், பெங்களூர் * சிலோன்: சிலோன் தியேட்டர்ஸ், சிலோன் தென் ஆப்பிரிக்கா: திருத்தாண்டவம் & கோ., சென்னை-1 * வட இந்தியா: ராதாகிருஷ்ணா பிலிம்ஸ் பிரைவேட் லிட்., சென்னை-17 * பர்மா: கிஷோர் N. ஜோஷி, சென்னை

நடந்து வந்தாலே பூமி அதிருமாம். மரங்களைப் பிடுங்கி ஆயுதமாக உபயோகிப்பானாம். குன்றுகள் இவன் கைபட்டுச் சுக்குநூறாக உடையுமாம். இதனைக் கதை என்று ஒதுக்கி விடுவதானாலும் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட அமைதிக்கு முன்னர் அடிக்கடி அண்டை நாடுகளுடன் சண்டை போட்டு வைரமேறிய பரம்பரையினர்தான் இவர்கள். இன்று ஸிக்கிமில் வாழும் மக்களில் பெரும்பான்மையோர் — எழுபத்தைந்து சதவிதம் — பக்கத்துத் தேசமான நேபாளத்திலிருந்து வந்தவர்களே. நேபாள கூர்க்காக்களின் வீரத்தைப் பற்றி நாம் கொஞ்சமாகவா கேள்விப்பட்டிருக்கிறோம்?

இரண்டு வருஷங்களுக்குமுன் கொண்டு வரப்பட்ட பிரஜா உரிமை சம்பந்தமான ஒரு சட்டத்தில், பெரும்பான்மையினரான நேபாளிகளை ஐம்பது வருஷங்களுக்கு முன்பிருந்தே ஸிக்கிமில் வாழ்வோர் என்றும் அதன் பிறகு ஸிக்கிமில் குடியேறினோர் என்றும் பாகுபாடு செய்து பின்னவருக்குப் பிரஜா உரிமை இல்லாமல் செய்யப்பட்டிருந்தது. இதற்குப் பலமான எதிர்ப்பு இருந்தது. அது முதல் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சட்டசபையைக் கலைத்து விட்டு மகாராஜ் குமார் பொறுக்கி எடுக்கப்பட்ட ஆலோசகர்களின் உதவியுடன் ஆட்சி நடத்தி வருகிறார்.

செம்புதான் ஸிக்கிமின் முக்கியமான இயற்கை வளமாகும். ஸிக்கிம் என்பதற்கே அரிசி விளையும் ஊர் என்பது அர்த்தம். அத்துடன் ஏலக்காயும் ஆப்பிளும் கோதுமையும் பார்லியும் ஏராளமாய் விளைகின்றன. ஆரஞ்சு அறுவடையின் போது கூடை கூடையாகப் பழங்களைப் பறித்துப் போட்டுக் கொண்டே 'எத்தனை விதமான பழங்களைச் சுவைத்துத்தான் என்ன? அத்தனையையும்விட அதிகமாய் இனிக்கும் ஒரு கன்னிக் கனிக்காகக் காத்திருக்கிறேன்' என்று பொருள்பட இளைஞர்கள் உல்லாசமாய் நாடோடிப் பாடல்களைப் பாடுவார்கள்.

இந்த எளிய மக்களின் பெரும்பான்மையினர் ஹிந்துக்களே என்றாலும் பௌத்த மதமே தேசிய மதமாக விளங்குகிறது.

நாட்டின் மகாராஜாவுக்கு எழுபது வயது ஆகிறது. மகனிடம் ராஜ்யப் பொறுப்பை ஒப்படைத்து விட்டு ஆவி வடிவங்களுடன் உரையாடுவதிலும் மலைச் சிகரங்களை ஓவியமாகத் தீட்டுவதிலும் ஈடுபட்டுள்ளார்.


உலகிலேயே மிக உயரமான மலைச் சிகரங்களுள் மூன்றாவது ஸ்தானத்தைப் பெற்றுள்ள 'கஞ்சென்ஜுங்கா' ஸிக்கிமில்தான் உள்ளது. அதன் உச்சியை எட்டிப் பிடிக்க 1955ல் ஒரு பிரிட்டிஷ் குழு அனுமதி கோரியபோது 'இறைவனின் இருப்பிடமாகிய அதன் உச்சியில் கால் வைப்பதில்லை என்று உறுதியளித்தால்தான் உங்களை மலை ஏற அனுமதிக்க முடியும்' என்று கூறி விட்டார் மகாராஜா டாஷிநம்கையால். அதன்படி உச்சிக்கு ஐந்தடி கீழேயே வெற்றிக் கொடியை நாட்டி விட்டுத் திரும்பினர் பிரிட்டிஷ் மலை ஏறும் நிபுணர்கள்.


தலைநகர் காங்டோக்கில் பல அடுக்கு மாடி வீடுகள் உண்டு. ஒவ்வொரு மாடி எதிரிலும் வீதியும் உண்டு. சற்று நிதானித்து யோசித்தால் வளைந்து வளைந்து சாலை உயரச் செல்கையில் இது எளிதில் சாத்தியமாகக் கூடும் என்பது புரியும்.

இதுதான் ஸிக்கிம். நாலாபுறமும் வேறு வேறு நாடுகளால் சூழப்பட்ட போதிலும் (ஏப்ரல் 14உ கல்கி இதழில் வெளியான தேசப் படத்தைப் பார்க்க) புராதனமான தன் கலாசாரத்தையும் சம்பிரதாய முறைகளையும் இழக்காமல் தனக்கென உள்ள ஒரு தனித் தன்மையைக் காப்பாற்றிக் கொள்ளத் திட சித்தத்துடன் முயன்று வரும் சிறு நாடு. பாரத தேசத்தின் உதவியோடு பல துறைகளிலும் முன்னேறுவதற்கு ஊக்கத்துடன் உழைத்துவரும் தேசம். ஆனால் அவையெல்லாம் கைகூட நாட்டில் அமைதி நிலவ வேண்டும். அவ்வாறு அமைதி நிலவினால்தான் ஸிக்கிம் நாட்டின் சரித்திரத்தைத் தாம் எடுத்துக் கூறத் தமது அருமை மனைவியை விட்டு அதனை எழுதச் செய்ய வேண்டும் என்ற மகாராஜ் குமார் தம்கையாலின் அபிலாஷையும் ஈடேறும்.

எவ்வளவுதான் சக்தி மிகுந்த நாடானாலும் பக்கத்தில் உள்ள சிறிய தேசத்தின் அலுவல்களில் காரணமின்றித் தலையிட்டுத் துன்பம் தராமல் அதனையும் வாழ விட்டுத் தானும் வாழ முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்தியா விளங்கி வருகிறது. ஆனால் அதே பெருந்தன்மையான நோக்கத்துடன் ஸிக்கிமிடம் செஞ்சீனா நடந்து கொள்ளுமா?

சீனாவின் சமீப காலத்திய வரலாறு அவ்விதம் நம்ப நமக்கு இடமளிக்கவில்லையே?





தாய், சேய் இருவரும் மிக நலமாயுள்ளனர்...

கல்ஸானு-டி யின் நற்பயனே. கருவுற்றிருக்கையில் தாயிடம் கால்சியம் மிகையாகச் செலவாகி க
றெது. தாயிடமிருந்துதான் குழந்தையின் எலும்புகள், நகங்கள் இவற்றின் வளர்ச்சிக்கான கால்சி
போய்ச் சேருகிறது...அதனால் அவளிடத்தில் கால்சியம் பற்றாக்குறை ஏற்படுகிறது. அவளுக்கும் அ
குழந்தைக்கும் வேண்டிய கால்சியத்தைச் சரிக்கட்டி வைக்க, இந்தப் புத்திசாலியான அன்னை வைட்
மின் நிறைப்புறச் சேர்ந்த கால்சியம் கொண்ட கல்ஸானு-டியை உட்கொண்டு வந்தாள். கால்சி
பற்றாக் குறை யை நிவர்த்திக்க கல்ஸானு-டி முற்றிலும் சரியான மருந்தென வருடக்கண
கான சோத னைகளிலும் நிரூபணமாகி ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. கல்ஸானு-டியிலு
தாய், சேய் இருவரும் மிக நலமாயுள்ளனர்.




கல்ஸானு-டி

வைட்டமின் தீவிரச் சேர்க்கையுடைய கால்சியம

கர்ப்பிணிகள், குழந்தையை அரவணைக்கும் அன்னைகள் மற்றும் வளரு
குழந்தைகள் இவர்களுக்கு ஏற்றது

GR.80.59 TAM.



வாக்கு சாதுர்யம்

சுப்புடு

தமிழனின் வாக்கு சாதுர்யத்துக்குப் பல சான்றுகள் உள. ஆனால் என்னுடைய அனுபவத்தில் நடந்த ஒரு சம்பவம் மறக்க முடியாதது.

அப்போதுதான் நான் பர்மாவிலிருந்து என் சகோதரன் கல்யாணத்துக்காக வந்திருந்தேன். மண்ணடியிலிருந்த என் மாமா மகா சிக்கனப் பேர்வழி. பழைய மாம்பலத்தில் கல்யாணம் ஏற்பாடாகியிருந்தது. கல்யாண தட்டுமுட்டுச் சாமான்களை ஒரு ஜட்காவில் ஏற்றி அதற்கிடையில் என்னையும் புகுத்தி மாம்பலம் அனுப்பி விட்டார் என் மாமா. முன்னால் மற்றொரு ஜட்கா வண்டியில் பெட்டி படுக்கைகள் சென்றன.

பர்மாவிலே குதிரை வண்டிகள் நன்றாக இருக்கும். சிறிய வீடு மாதிரியே கட்டி அதில் குஷன் மெத்தைகள் போட்டு வைத்திருப்பார்கள். ஆகவே மெட்ராஸ் ஜட்கா கோணிக்கடியில் ஈரப் புல்லைச் செருகிய ஆசனம் எனக்கு மிகுந்த வேதனையைத் தந்தது. மெள்ளப் பேச்சை ஆரம்பித்து, பர்மா வண்டிகளின் உயர்வைப் பற்றிப் புகழ்ந்தேன். ''ரங்கூனில் 'காலிகாடி' என்றால் வெகு நேர்த்தியாக இருக்கும். பஞ்சு மெத்தை போட்டு ஆடாமல் அசங்காமல் போகும். நீங்கள் ஏன் அம்மாதிரி சௌகரியங்கள் செய்து பிரயாணத்தை நேர்த்தியாக்கக் கூடாது?'' என்று கேட்டேன்.

''இன்னா பஞ்சு மெத்தை போட்டா இன்னா ஸார்! நம்ம ஜட்கா புல்லு மெத்தை மாதிரி வர்மா? இதனோடை ஸோக்கு அத்லே வர்மா?''

திடீரென்று குதிரை மக்கர் பண்ணிற்று. சாட்டையால் சுரீரென்று சேர்ந்தாற்போல் நாலு அடி வைத்தான் ஜட்காவாலா.

''ஐயோ அப்பனே! இந்த மாதிரி அடிக்கலாமா? ரங்கூன்லே அடிக்கவே மாட்டான். குதிரையோட பேசுவான்; நயத்திலேயே ஓட்டுவான்.''

''நம்ம குத்ரை போக்கிரி குத்ரை ஸார். தெரிஞ்சுக்கினே மக்கர் பண்ணுது. புத்ஸாலி குத்ரை ஒச்சாத்தான் போவும். மணி ஆயிடுச்சு. காலேலே கட்னேன் இல்லே? ஊட்டு காபகம் வந்திடுச்சு.''

''காலையில் கட்டினதா? ரங்கூனில் ஆறு மணி நேரத்துக்கு மேல் கட்ட மாட்டார்கள். அப்புறம் ஆறு பேராக விழுந்து அதற்கு மசாஜ் செய்வார்கள்.''

''குருதைக்கு மஸாஜா? விடிஞ்சுது போங்க.''

மறுபடியும் வண்டி மாம்பலத்தை நோக்கி ஊர்ந்து கொண்டிருந்தது. ரங்கூனைப் பற்றியும் அந்த நகரின் நாகரிக வளர்ச்சியைப் பற்றியும் பர்மிய நாட்டின் நீர் வளம் நில வளத்தைப் பற்றியும், குறிப்பாக அந்த ஊர் வாகனங்களைப் பற்றியும் நான் வானளாவப் புகழ்ந்து கொண்டே வந்தேன். ஜட்காக்காரர் எல்லாவற்றுக்கும் சால்ஜாப்புச் சொல்லிக்கொண்டே வந்தார்.

மாம்பலம் உஸ்மான் ரோடு திருப்பத்தில் ஒரு பெரிய பங்களாவிலிருந்து கேட்டைத் தாண்டி ஒரு பெரிய ராஜபாளையம் நாய் விர்ரென்று ஓடிச் சாடி வந்து மறுபடியும் உள்ளே சென்று விட்டது. நாய் நல்ல உயரம்; பயங்கர சொரூபம். எனக்கே உடல் சிலிர்த்து விட்டது பயத்தினால். 'நல்ல வேளை! நம்மைப் பிடுங்காமல் விட்டதே' என்று வண்டியினுள் நன்றாகத் தலையை இழுத்துப் பதுங்கிக் கொண்டேன்.

இதுவரை மௌனமாயிருந்த முன் வண்டிக்காரர், ''அண்ணே! நாயைப் பாத்தியா சிங்கம் மாதிரி. அடேயப்பா!'' என்றார்.

''போடா சோமாறி! இது என்னடா—நாயி? ரங்கூன்லே பாக்கணும் ஒண்ணொண்ணு யானை ஸைஸ் இருக்கும். பெரிய நாயைக் கண்டுட்டான்'' என்று என் வண்டிக்காரன் போட்டானே ஒரு பெரும் போடு!

நான் வாயடைத்துப் போனேன்.

ஸ்ரீ ஸ்வாதித் திருநாள்

ஸ்வாதி நட்சத்திரத்தில் இழியும் மழை நீர், நத்தையின் வயிற்றில் நல்முத்தாகப் பரிணமிக்கும் என்பார்கள். இந்தத்தோஷமற்ற நட்சத்திரத்தில்தான் நாத உலகுக்கு ஒரு நல்முத்தாகத் திருவிதாங்கூர் மன்னர்குடியில் தோன்றும்போதே புகழுடன் தோன்றினார் ஸ்வாதித் திருநாள். கர்ப்ப ஸ்ரீமான் — கருவிலே திரு உடையவர் — என்ற சொற்றொடர் அவருக்குப் பலவிதங்களிலும் பொருந்தியிருந்தது. அப்போது ஆட்சி செலுத்தி வந்த மகாராணி லக்ஷ்மிபாய்க்கு எப்போது ஒரு பிள்ளைக் குழந்தை பிறக்கும் என்று கேரள நாடு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது பட்டத்துக்கு என்றே பிறந்தார் ஸ்வாதித் திருநாள். கேரள நாட்டில் அரசுரிமை பிள்ளை வழி செல்லாமல் சகோதரியின் மகன் வழியே 'மருமக்கள் தாயமாக'ச் செல்லும். பிள்ளைக் குழந்தை பிறக்காதபோது பெண் அரசு செலுத்துவாள். இதன்படிதான் லக்ஷ்மிபாய் ஆட்சி நடத்திக் கொண்டிருந்தாள். ஸ்ரீ அனந்த பத்மநாப ஸ்வாமிக்கு நோன்பிருந்து ஸ்வாதித் திருநாளைப் பெற்றெடுத்தாள். அதன் பின் இரண்டு ஆண்டுகள் நிறையு முன்னரே, தனது கணவர் கோயில் தம்புரானிடம் குழந்தையை ஒப்படைத்து விட்டுப் பரலோகம் சென்று விட்டாளவள்.


தந்தையின் மேற்பார்வையில் ஸ்வாதித் திருநாள் கல்வி கற்கத் தொடங்கினார். அவரது தீக்ஷண்யமான புத்தி அப்போதிலிருந்தே சுடர் வீசலாயிற்று. தமது தாய் மொழியான மலையாளத்துடன், மலையாள மொழியின் தந்தை தாயாகக் கருதப்படும் சம்ஸ்கிருதம்-தமிழ் இம்மொழிகளையும் தெலுங்கு, கன்னடம், மராத்தி, ஹிந்தி, பாரசீகம், ஆங்கிலம் ஆகிய பாஷைகளையும் தமது பதின்மூன்றும் வயதுக்குள்ளேயே கற்றுத் தேர்ந்தார். ஸ்வாதித் திருநாளின் மேதா விலாஸத்துக்கு இதைவிட என்ன சான்று வேண்டும்?

பதினாறுவது வயதில் ஸ்வாதித்திருநாள் அவர்களுக்குப் பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்டது. இளமையிலேயே அறிவின் முதிர்ச்சியைக் கண்டிருந்த அவர் நாட்டு மக்களின் லௌகிக முன்னேற்றத்துக்காகப் பல அரிய சீர்திருத்தங்களைச் செய்தார்.

எனினும் லௌகிகத் தேவையுடன் மக்களின் வாழ்வு நிறைவு பெற்றுவிடுமா, என்ன? பரம புருஷனான பத்மநாபனுக்கே உரியதாகக் கருதப்படும் கேரள தேச மக்கள் ஆத்மீகத்திலும் உயர வேண்டும். அவ்வாறு அவர்களைத் தாம் உயர்த்த வேண்டும் என்று பேரவாக் கொண்டார் மகாராஜா. இசையினைப்போல வேறெவ்விதத்திலும் ஜீவாத்மாவைப் பரமாத்மாவுடன் இசைக்க முடியாது என்று கண்டார் ஸ்வாதித் திருநாள். கலைகளின் மூலம் கடவுளை அடையும் மார்க்கத்துக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொள்ள விரும்பினார்.

ஸ்வாதித் திருநாள் இன்னாரிடமிருந்து இசைக் கலையைப் பயின்றார் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. பரம்பரையாக நாத வித்தை ரத்தத்தில் ஊறியிருந்த வம்சத்தில் பிறந்தவர் அவர். அவர் குருவாகக் கருதி வழிபட்டவர் ஹரிகதா காலக்ஷேபக் கலையைத் தென்னாட்டில் பிரசாரம் செய்த மேரு ஸ்வாமி என்ற அனந்த பத்மநாப கோஸ்வாமியாவார். 'கோகில கண்ட' என்ற விருது பெற்ற இந்தப் பெரியார் மகாராஜாவின் வித்யா சதஸில் முக்கியமாக விளங்கினார். மற்றும் நாத யோகிகளான ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதரவர்களின் சிஷ்யர்களான தஞ்சை பொன்னையா, சின்னையா, வடிவேலு, சிவானந்தம் ஆகிய சங்கீத சகோதரர்களைத் தமது ஆஸ்தான வித்வான்களாக நியமனம் செய்தார். தீக்ஷிதரவர்களின் நாதாமுதத்தில் திளைத்தது போலவே, தியாகைய ஸ்வாமிகளின் உள்ளுருக்கும் இசையையும் இச்சை தீரப் பருகினார் ஸ்வாதித் திருநாள். மகாராஜா முடிசூடிய போது ஸ்வாமிகளுக்கு எழுபது பிராயமாகியிருந்தது. அவரைத் தமது சம்ஸ்தானத்துக்கு அழைத்து வந்து மரியாதை செலுத்த வேண்டும் என்பதில் மன்னருக்குப் பேரார்வம் இருந்தது. இதற்காகவே ஷட்கால கோவிந்த மாரார் என்ற தமது புகழ் வாய்ந்த ஆஸ்தான வித்வானைத் தியாகராஜ ஸ்வாமிகளிடம் அனுப்பி வைத்தார். எனினும் பல காரணங்களால் ஸ்வாமிகள் கேரளம் செல்ல முடியாமலே போயிற்று. ஸ்வாமிகளின் சீடரான கன்னையா பாகவதர் திருவனந்தபுரத்தில் அரசாங்க வித்

சங்கீத கலாநிதி செம்மங்குடி ரா. ஸ்ரீநிவாசய்யர்




வானுக இருந்து தியாக ராஜ உபநிஷதத்தை மன்னருக்கு அளித்தார்.

ங்கீதத்துடன் ஒட்டி வளரும் நாட்டியக் கலையிலும் மகாராஜாவுக்கு ஆழ்ந்த ஈடுபாடு இருந்தது. சோழ, பாண்டிய நாடுகளில் அப்பியசிக்கப்பட்ட பரதக் கலையைத் திருவிதாங்கூர் சம்ஸ்தானத்திலும் அவர் விளங்கச் செய்தார்.



தாம் ஆதரித்த கலைஞர்கள் யாவரிடமிருந்தும் ஸ்வாதித்திருநாள் ரசித்துக் கொண்ட ஏழிசைப் பயனே, அவரது பத்மநாப பக்தியில் வடிவம் கொண்டு அற்புத கீர்த்தனங்களாக மலர்ந்தன. வரையறை செய்யப்படாமல் வழங்கி வந்த கேரளத்தின் ஸோபான சங்கீதத்தைச் சாஸ்திரீய சங்கீதமாகப் புஷ்பிக்கச் செய்தவர் அவரே. தமிழகம், ஆந்திரம், கர்நாடகம் ஆகியவற்றுக்குப் பொதுச் சொத்தாகிய தக்ஷிண சங்கீதமே தான் கேரளத்துக்கும் உரிய இசைமரபு என்பதை அவர் ஐயமற நிலைநாட்டி விட்டார். இசையம்சம், சொற்களின் தொடுப்பு உணர்ச்சி மூன்றிலும் எழிலார்ந்த பாடல்கள் ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் இயற்றியவை என்பது ரசிகர்கள் யாவரும் அறிந்த விஷயமாகும். 'பத்மநாப' அல்லது அதற்குப் பரியாயமான, 'கமலநாப' 'ஜலஜநாப' 'ஸரஸிஜநாப', 'கஞ்ஜநாப', 'பங்கஜ நாப', 'வாரிஜநாப' போன்ற 'தாமரைத் திருவுந்தியான்' என்று பொருள் தரும் பதங்களையே தமது முத்திரையாகக்கொண்ட விஷ்ணு பக்தர் அவர். எனினும் அவர் ஈசுவரன், தேவி, முருகன், கணநாதன் ஆகிய இதர தெய்வங்களின் மீதும் பேத புத்தியின்றிக் கீர்த்தனைகள் இயற்றியுள்ளார்; சங்கீத ரஸத்தின் பயன் சமரஸமே என நிலைநாட்டியுள்ளார்.



கன ராகங்களைப் போலவே பல அபூர்வ ராகங்களிலும் இவர் கிருதிகளை அமைத்திருப்பது இவரது சங்கீதஞானச் சிறப்பைக் காட்டுகிறது. சம்ஸ்கிருதம், மலையாளம், இவை இரண்டும் கலந்த மணிப்பிரவாளம், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி ஆகிய மொழிகளில் இவர் பாடல்கள் இயற்றியிருப்பது இவரது பன்மொழிப் புலமையை எடுத்தியம்புகிறது.

இவை மட்டுமின்றி ஹரிகதைக்காகக் குசேலோபாக்கியானம், அஜாமிளோபாக்கியானம் இவ்விரண்டும் செய்திருக்கிறார் ஸ்ரீ ஸ்வாதித்திருநாள். இவற்றில் ஹிந்துஸ்தானி ராகங்கள் மட்டும் இன்றி அபங், திண்டி, சந்த் என்ற மராத்திப் பத்ததிகளும் மகாராஜாவால் அழகுறக் கையாளப்பட்டுள்ளன. மணிப்பிரவாளத்தில் பத்மநாபஸ்வாமி உத்ஸவத்தில் பாடுவதற்கென இவர் பிரபந்தம் இயற்றியுள்ளார்.

இசைக்கு மட்டுமின்றி இலக்கியம், சித்திரம், நுண்ணிய கை வேலைகள் ஆகியவற்றுக்கும் பேராதரவு அளித்ததால் ஸ்வாதித் திருநாள் தக்ஷிண போஜன் என்றே பிரசித்தி பெற்றிருந்தார். நவராத்திரி உத்ஸவத்தில் தேவியை எழுந்தருளச் செய்து, அவள் முன்னர் சங்கீத சதஸும், வேத சதஸும் நடத்தி வித்வான்களுக்கு விலை மதிப்பற்ற சம்மானங்களை வழங்கி வந்தார்.

செயற்கரிய பல செய்த இந்தச் சான்றோர் நீண்ட காலம் வாழ்ந்திருக்கும் பேற்றினை நாடு பெற வில்லை. இவரது முப்பத்து மூன்றாவது வயதிலேயே, —1846ம் ஆண்டு டிசம்பர் 15ந் தேதி இவரை அனந்த பத்மநாப ஸ்வாமி தமது திருவடிகளில் சேர்த்துக் கொண்டு விட்டார். ஆதி சங்கரரும், இயேசுநாதரும், விவேகாநந்தரும் தமது அற்ப ஆயுளின் ஒவ்வொரு வினாடியையும் பொருள் உள்ளதாக வாழ்ந்து மறைந்தது போல ஸ்ரீ ஸ்வாதித் திருநாளும் தமது குறுகிய ஜீவிய தசையில் இசைக்கு அளப்பரிய தொண்டு புரிந்து, தமது புகழைச் சங்கீத உலகில் பொன் எழுத்தால் பொறித்து விட்டு மறைந்தார்.

ஸ்வாதித் திருநாளின் காலத்துக்குப் பின் அவ்வளவாக அப்பியாசத்தில் இல்லாதிருந்த இவரது கிருதிகள் சமீப காலமாக ஸ்ரீ சித்திரைத் திருநாள், அவரது அன்னை சேது பார்வதிபாய் மகாராணி ஆகியோரின் நன் முயற்சியினால் பிரபலமடைந்து வந்துள்ளன.

காலஞ் சென்ற காயக சிகாமணி ஹரிகேசநல்லூர் ஸ்ரீ முத்தையா பாகவதரை முதல் தலைவராகக் கொண்டு நிறுவப்பட்ட ஸ்வாதித் திருநாள் சங்கீத கலாசாலை நன்கு விருத்தி யடைந்துள்ளது. இந்த நிலையமும் இதன் பிரசுரங்களுமே ஸ்ரீ ஸ்வாதித் திருநாளுக்கு அரியதொரு நினைவுச் சின்னமாக உள்ளன. இது வரையில் ஸ்ரீ ஸ்வாதித் திருநாளின் உருப்படிகள் சுமார் இருநூறு பிரசுரமாகி யுள்ளன. மேலும் பல சாஹித்யங்களை அந்த இசை வள்ளலின் நூற்றைம்பதாவது ஆண்டாகிய இவ்வருஷத்தில் வெளியிடப் போகிறார்கள்.

அவரது 150-வது ஜயந்தி மே மாதம் 8ந் தேதி விமரிசையாகக் கொண்டாடப் பட விருக்கிறது. இசைக் கலைஞர்களில் ஒரு மன்னராகவும், மன்னர்களில் ஓர் இசைக் கலைஞராகவும் திகழ்ந்த ஸ்ரீ பத்மநாப தாஸ வஞ்சிபால ஸ்ரீராம வர்ம ஸ்வாதித் திருநாள் குலசேகரப் பெருமாள் மகாராஜா அவர்களை ரசிகர் உலகம் மறைந்தவராகவே கருதுவதில்லை; அவரது கிருதிகளின் மூலம் என்றும் அமரராக வாழ்வதாகவே கருதுகிறது.

ஓவியப் புரட்சி




படவிளக்கம் 24ம் பக்கம் என்று குறிப்பிடப்பட்டிருப்பதைப் படித்ததும் 'இது ஒரு படமா?' என்று ஒருவேளை உங்களுக்குக் கேட்கத் தோன்றியிருக்குமேயானால் 'ஆம், படம்தான்' என்று கூற விரும்புகிறோம்.

ஸ்ரீ ஆர். சாரங்கன் அவர்களின் 'கருத்தோவியங்களுள் (அப்ஸ்ட்ராக்ட் ஆர்ட்) ஒன்றைத்தான் இடப்பக்கத்தில் காண்கிறீர்கள். தில்லியில் இவரது ஓவியக் கண்காட்சியைத் திறந்து வைத்த ஸ்ரீ எம். எஸ். ரந்தாவா ஐ. ஸி. எஸ். சிருஷ்டியின் மூல இரகசியம், அண்ட வெளியின் அகண்டாகாரம் என்பன போன்ற ஆழ்ந்த உண்மைகள் சாரங்கனின் ஓவியங்களில் நமக்குப் புலப்படுவதாகக் குறிப்பிட்டார்!

இம்மாதிரியான 'ஓவியப் புரட்சி' நமது நாட்டுக்குப் புதிதான ஒன்று என்பது வலது பக்கத்தில் நீங்கள் பார்க்கும் படம் நிரூபிக்கிறது. 1911லேயே ஜெர்மனியில் பல ஓவியர்கள் நவீன முறைகளைக் கையாளத் தீர்மானித்தார்கள். அக்காலத்தில்தான் மரத்தில் செதுக்கப்பட்ட இந்தச் சிற்பம் உருவாகியது. ஓவியம் தீட்டுவதாய்க் கூறிக் கொண்டு வர்ணத்தில் குளித்தெழுந்து வந்து திரைச் சீலையில் விழுந்து புரளுகின்ற ஒருவர்கூட ஜப்பானில் உண்டு!





ஒரு கிளாஸ்

கிஸான் ஸ்க்வாஷ்

அருந்தி இளைப்பாறுங்கள்

சுவைமிக்கது; அலுப்பு நீக்குவது; ஆரோக்கியமானது. தானே கனிந்த கனிகளிலிருந்து தயாரானது. வைட்டமின் சத்து நிறைந்தது.

திடீரென்று வரும் விருந்தாளிகளுக்கென்றே தனியாக ஒரு பாட்டில் கிஸான் வைத்திருங்கள்.

ஆரஞ்சு, லெமன், மற்றும் ஆறு ரகங்களில் கிடைக்கிறது கிஸான் ஸ்க்வாஷ். மற்ற எல்லா ஸ்க்வாஷ்களையும்விட கிஸான் ஸ்க்வாஷ்தான் இந்தியாவில் அதிகமாக விற்பனையாகிறது.

AWT/KP-2143A

கிஸான் ப்ராடக்ட்ஸ் லிமிடெட், பெங்களூர்

அறிவுக் கனலே, அருட் புனலே!

ரா. கணபதி

இளம் சிம்மமொன்று ஹம்ஸமாக மாறியது போல, தாழம்பூவுக்குச் சம்பகத்தின் மென்மை கூடினாற்போல, பெண் வேஷமிட்ட கதாதரன் மனோஹரமாகத் திகழ்ந்தான்.

உத்தமமான ஸ்திரீ லக்ஷணமும், புருஷ லக்ஷணமும் ஒன்றுதான் என்று சாமுத்ரிகா லக்ஷண வல்லுநர்கள் கூறுவார்கள். கிருஷ்ண பரமாத்மாவை மான் என்று வேடன் எண்ணினான் என்பதிலிருந்தே அவர் எவ்வளவு கோமள காத்திரம் பெற்றிருக்க வேணுமென்று தெரிகிறதல்லவா? கதாதரன் ராமகிருஷ்ண குருமஹராஜ் ஆனபின்பும், அவரிடம் பெண்மையே தாய்மையின் கனிவாகப் பிரதிபலித்ததைக் காண்கிறோம். அம்பிகையை ஆராதிப்பவர்கள் அவளாகவே ஆகிவிடுவார்கள் என்று சாக்த கிரந்தங்கள் கூறக் காணலாம். 'பக்தர்கள் எல்லோருமே பெண்கள்; பரம புருஷன் என்றும் புருஷோத்தமன் என்றும் கூறப்படும் பகவான் மட்டும்தான் ஆண்' என்பது வைஷ்ணவ சாஸ்திரம். ஆணாகப் பிறந்த ஜீவன் பெண் மோகத்தை வெல்லுவதற்குச் சிறந்த உபாயம் இந்த நாயகி பாவமே என்பது மதுர பாவ சாதகர்களின் சித்தாந்தம்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரோ அம்பிகையின் உபாஸகராகு முன்பே, மதுர பாவ சாதனை புரியுமுன்பே, பிறந்த நாளாகப் பெண்மையின் நளினம் நிரம்பப் பெற்றிருந்தார். எனவே ராதா ராணியாக அவர் வேஷமிட்ட போது அவரைக் கண்ட கண்கள் கசிந்தன; கரங்கள் தாமாகக் கும்பிட்டன.

குறும்புத்தனம் மிக்க கதாதரன் பெண் வேஷம் போட்டு இல்லாத கும்மாளமெல்லாம் அடித்தான். ஹல்தார்புகூர் ஏரியிலிருந்து நீர் கொண்டு வரும் இளம் பெண்ணாக மாறி ஊரையெல்லாம் ஏமாற்றினான்.



காமார்புகூரில் துர்கா தாஸ் பைன் என்பவருடைய வீட்டுப் பெண்கள் 'கோஷா' முறையை அனுசரித்தவர்கள். 'எங்கள் அகத்துப் பெண்களை ஒரு அயல் மனுஷ்யாள் பார்க்க முடியுமோ?' என்று அவர் பெருமையடித்துக் கொள்வார்.

'ஏன் பார்க்க முடியாதாம்?' என்றான் கதாதரன்.

ஒரு நாள் அந்தி மங்கும் வேளையில் முரடான அழுக்குப் புடவை ஒன்றைச் சுற்றிக் கொண்டு



வெள்ளி வளை அணிந்த கைகளோடு தம் வீட்டுப் படி ஏறி வந்த அந்தப் பெண் கதாதரனாக இருக்கக் கூடும் என்று தூர்காதாஸ் கனவு கூடக் காணவில்லை.

'சாமி, நான் அடுத்த ஊரைச் சேர்ந்த சேணியப் பெண்; நூல் சிட்டை விற்ப தற்காக இங்கே வந்தேன். வேலை ஆச்சு. ஆனால் இருட்டியும் போச்சு. எப்படி சாமி, நான் தன்னந் தனியாக ஊர் திரும்புகிறது? கொஞ்சம் உங்கள் வீட்டில்...' என்று இழுத்தாள் 'கதாதரி'.

''ஓ, பேஷாக! நம் வீட்டுப் பெண்களுடனேயே நீ தங்கலாம்'' என்று கூறி தூர்காதாஸே உள்கட்டுக்குக் கதாதரியை அழைத்துச் சென்றார்.

அந்தச் சேணியப் பெண்ணின் சாதுரியமும், சங்கீதமும் தூர்காதாஸ் வீட்டுப் பெண்களுக்கு மிகவும் பிடித்துப் போய் விட்டன. நேரம் போவது தெரியாமல் 'அவளை'த் தம் முடனேயே அவர்கள் இருத்திக்கொண்டு விட்டனர்.

இருட்டி வெகு நேரமான பின்பும் கதாதரன் வராததால் சந்திரமணி மிகவும் பயந்து போய் விட்டாள். கதாதரனைத் தேடிப் பார்த்து அழைத்து வருமாறு ராமேசுவரை அனுப்பி வைத்

தான். தம்பியைத் தேடிக் கொண்டு புறப்பட்ட ராமேசுவர் அவன் சீதாநாதர் வீட்டுக்குச் சென்றிருப்பான் என்று எண்ணி ''கதாயி, கதாயி'' என்று கூப்பிட்டுக் கொண்டே சென்றார். துர்காதாஸின் வீட்டிலிருந்த கதாதர னின் காதில் அந்தக் குரல் விழுந்தது. அவசர அவசரமாக உள் அங்கணத்தி லிருந்து கிளம்பினான்.

''இதோ, வந்து விட்டேன்'' என்று கூறியவாறு, தாவணி காற்றில் பறக்கத் தம் வீட்டிலிருந்து வெளியேறிய கதா தரனைக் கண்டபோது தான் துர்காதாஸுக்கு விஷயம் புரிந்தது. கதாதரனின் விஷமத்துக்குத் தாம் தோற்றதை எண்ணிப் பெருமையுடன் விழுந்து விழுந்து சிரித்தார் அவர்.

அதன்பின், கதாதரன் சீதாநாத ருடைய வீட்டுக்கு வந்தால், தம் வீட்டுப் படிதாண்டாப் பத்தினிகளும் வீட்டை விட்டு வெளியேறி சீதாநாதரின் வீடு சென்று கதாதரனைக் காண அவர் அநுமதித்தார்.

பரமஹம்ஸர் இவ்வுலகி லிருந்து மறைந்து ஏழாண்டுக்குப் பின் அவரது சிஷ்யர்களான சாரதாநந்தர், ராம கிருஷ்ணாநந்தர் ஆகியோர் கமார்புகூர் சென்றிருந்தனர். சீதாநாதரின் மகள் ருக்மிணிக்கு அப்போது கிட்டத்தட்ட அறுபது பிராயம். கதாதரனின் பாலப் பருவத்தை எண்ணி அவளது இதயம் குழைந்தது. சொல்வாள்:

''அதோ இலமாகத் தெரிகிறதே அந்த வீட்டில்தான் நாங்கள் அப் போது இருந்து வந்தோம். நாற்பது வருஷங்களுக்கு முன் அந்த வீடு எவ் வளவோ செழிப்பையும் சந்தோஷத் தையும் கண்டிருக்கிறது. சித்தப்பா பெரியப்பா பெண்கள் எல்லோருமாகச் சேர்ந்து நாங்கள் பதினேழு பதினெட்டுப் பெண்கள் அங்கு இருந்தோம். எங்களுக் கெல்லாம் கதாயி அத்யந்த நண்பனாக இருந்தான். அப்பா கதாதரனைத் தம் இஷ்ட தெய்வமாகவே எண்ணிவந்தார்.

''ஆஹா! அப்போது கதாயி சொன்ன இன்பக் கதைகள் எத்தனை! செய்த இனிய குறும்புகள் எத்தனை! வீட்டு வேலையைச் செய்து கொண்டே கதாயி கூறும் கதைகளைக் கேட்டுக் கொண்டிருப்போம். கதாயி உடன் இருக்கும்போது பெற்ற ஆனந்தத்தை இந்த ஒரு வாயால் எப்படிச் சொல் வேன்? கதாதரன் ஒரு நாள் வரா விட்டாலும் எங்களுக்கு இருப்பாக இராது. தண்ணீர் வேண்டும், புரை மோர் வேண்டும் என்று ஏதாவது சொல்லிக் கொண்டு அய்யர் வீட்டு அம்மாளிடம் (சந்திரமணி) போய், கதாயிக்கு உடம்பு சொஸ்தமாக இருக் கிறதா என்று அறிந்து வரும் வரையில் எண்ணுதெல்லாம் எண்ணுவோம்.''

கதாதரனுடைய தெய்வ பக்தியை யும், தூய்மையையும் கண்ட மக்கள் அவனிடம் தம் கஷ்டங்களைச் சொல்லி வழி கேட்பார்கள். போலிகளும், வேஷ தாரிகளும் கதாதரனை நாடத் தயங்கு வார்கள். ஏனெனில் அவன் அவர்களது இயல்பைத் துளைத்து நோக்கி அவர் களுடைய கபடத் தன்மையைப் பகிரங்க மாகக் கேலி செய்வான்.

பிற்காலத்தில் பரமஹம்ஸர் ஒருவ ரைப் பார்த்த மாத்திரத்திலேயே அவரு டைய நடத்தையை உள்ளவாறு புரிந்து கொள்ளும் விசேஷ ஆற்றல் படைத் திருந்தார். தமக்குக் கையுறை செலுத்து பவர்கள் நன்னடத்தை உள்ளவர்களா யிருந்தால் மட்டுமே அதனை ஏற்றுச் சீடர்களுக்கு அளிப்பார். 'இதெப்படி இவரால் ஒருவரைக் கண்ட பொழுதி லேயே அவருடைய இயல்பைப் புரிந்து கொள்ள முடியும்?' என்று நரேந்திரர் சம்சயம் கொண்டது உண்டு. இதன் உண்மையை அறிவதற்காக, பரமஹம் ஸர் தமது சிஷ்யர்கள் உண்ணக் கூடாது என்று ஒதுக்கி வைத்த காணிக்கைகளைச் செலுத்தியவர்களின் பூர்வோத்தரத்தை ஆராய்ந்தார் நரேந்திரர். என்ன ஆச் சரியம்! குருமஹராஜின் உள்ளுணர்ச்சி ஒவ்வொரு சமயத்திலும் சத்தியமாக இருந்தது. நீரின் ஆழத்தைக் கண்டு சொல்லும் 'வாடர் டிவைனர்' போல ஸ்ரீ ராமகிருஷ்ணர் மக்களுடைய இதய ஆழத்தை அறியும் அற்புத திருஷ்டி பெற்றிருந்தார். பாலியத்திலேயே அவ ருக்கு இந்தத் திறன் இருந்திருக்கிறது!

கதாதரன் சிறிது பொழுது பள்ளிக் குச் செல்வதுண்டு என்று கண்டோம். இதற்குக் காரணம் கல்வி கற்க வேண் டும் என்பதல்ல. கயா விஷ்ணு முதலிய தமது சக மாணவர்களிடம் இருந்த அன்பு காரணமாகவே அவர்களுடைய சங்கத்தை விரும்பி அவன் பள்ளிக்குச் சென்று வந்தான்.

மாணவர்களும் பள்ளிக்கு 'டிமிக்கி' கொடுப்பதில் ஆர்வமாக இருந்தனர். எனவே அவர்கள் கதாதரனோடு மாணிக்க ராஜரின் மாந்தோப்புக்குச் செல்லு வார்கள். அவர்கள் எல்லாரும் 'யாத்ரா' எனப்படும் பக்தி மயமான நாடகங் களை நடித்து மகிழ்வார்கள். இந்த

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஜனனம் நிகழ்ந் தது 1836ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தி லாகும். இந்தத் தொடரின் ஒன்பதாம் அத்தியாயத்தில் கண்டிருப்பது போல மார்ச் மாதத்தில் அல்ல.

டிப்டி கலெக்டர் ஸ்ரீ N. V. சந்திரன், B.A. அவர்களின் குமாரன் சிரஞ்சீவி C. பாலசுப்பிரமணியம் B.Sc. (இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இ) பிரைவேட் லிமிடெட்) அவர்களுக்கும், மயிலாப்பூர் ஸ்ரீ S. சுவாமிநாதன் அவர்கள் குமாரி சௌபாக்கியவதி சரஸ்வதி வனமாலாவுக்கும் சமீபத்தில் சென்னையில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது

வாழ்க, மணமக்கள்!



நாடகங்களின் கதாசிரியரும், கதாநாயக ரும், இயக்குனரும் கதாதரன்தான். ஒருமுறை ஏதேனும் ஒரு நாடகத்தைப் பார்த்தாலும் அப்படியே கதாதர னுக்கு மனப்பாடமாகி விடும். குடியான வர்களும், ஆயர்களும் இந்த அற்புத பாலனின் நாடகங்களைக் கண்டு ஆனந்த மும் ஆச்சரியமும் அடைவார்கள். ஸ்ரீ ராமனாகவும், கிருஷ்ண பரமாத்மாவாக வும் பாகமேற்கும்போது கதாதரன் பல முறைகள் பிரக்ஞை இழந்து விடுவான்.

பொம்மை செய்வதிலும், ஓவியம் வரைவதிலும் கதாதரன் பெற்றிருந்த திறமை இந்தப் பருவத்தில் மலர்ச்சி பெற்றது. கௌர்ஹாடியிலுள்ள தன் சகோதரி சர்வமங்களாவின் வீட்டுக்கு ஒரு முறை கதாதரன் சென்றிருந்தான். அவள் அங்கு பிரவேசிக்கும் போது அவள் தன் கணவனுக்கு அன்போடு உணவு பரிமாறிக் கொண்டிருந்தாள். அந்தக் காட்சி கதாதரனின் உள்ளத்தில் ஆழப் பதிந்து விட்டது. தாம்பத்திய வாழ்க்கையின் தூய அம்சங்கள் கதா தரனைக் கவர்ந்தன. கமார்புகூர் திரும் பிய உடன் அவன் சர்வமங்களா தனது பதிக்குப் பரிமாறிய காட்சியைத் தத்ரூப மான ஓர் ஓவியமாக வரைந்து விட் டான். கதாதரனின் குடும்ப அன் புக்கு இது ஓர் உதாரணமாகும்.

கதாதரனின் கலைக் கண்கள் பூரண மாக விழிப்புப் பெற்று விட்டன. கிரா மத்துக் குயவர்கள் பொம்மை செய்யும்

அட்டைப்பட விளக்கம்

மூன்றுருவில் மெய்ப் பொருள்

அன்னை, தந்தை, ஆசாரியன் மூவரையும் தெய்வ மாகப் பாவிக்க வேண்டுமென்பது உபநிஷதத்தின் ஆணை யாகும். தெய்வத் தாயையும், தெய்வத் தந்தையையும், தெய்வ குருவையும் மணியத்தின் ஓவிய ரூபமாகத் தாங் கும் இவ்விதழ் அட்டை பெரும் பேறு செய்திருக்கிறது.

இந்தக் கண்கவர் ஓவியத்தில் உமையம்மை அத்தனின் கண்களைப் பொத்த வருகிறாள். அவனுடைய வலது கண் சூரியன், இடது கண் சந்திரன். எனவே அவன் கண்களைப் பொத்தியவுடன் உலகமெல்லாம் காரிருள் சூழ்ந்து கொள்ளுகிறது. மக்கள் பரிதவிப்பதைக் கண்ட வுடன் ஐயனுக்குச் சினம் மூளுகிறது. தேவியை மண் ணுலகில் பிறக்குமாறு சபிக்கிறான். அவள் நம்முடைய தமிழகத்தைத் தேடி வந்து, காஞ்சியில் வனராஜ குமாரியாகப் பிறந்தாள். வேகவதியாற்று வெள்ளத் துக்கும் அசையாது, பரமனைப் பூஜித்து அவனை மீண்டும் அடைந்தாள். தன் கடைக் கண் நோக்காலே மக்களின் தர்மமான ஆசைகளை யெல்லாம் நிறைவேற்றும் காமாக்ஷியாகக் காஞ்சிபுரியில் உறைந்தாள்.

பரமேசுவரன் ஆசாரிய சங்கரராகப் பிறந்து, நானில மெங்கும் சத்திய தத்துவத்தைப் பரப்பிவிட்டு இந்தக் காமாக்ஷியையே வந்தடைந்தான். உலகை உத்தாரணம் செய்ய வேண்டும் என்று ஆசாரியர் கொண்டிருந்த ஒரே ஆசையும் காமாக்ஷியின் க்ஷேத்திரத்தில் நிறை வுற்றது. ஆசைகள் யாவும் நிறைவேறிய பின் பெறும் ஆசையற்ற ஆனந்த எல்லையான காமகோடியும் அவளே என்று கண்டார் குருபிரான். காமகோடி பீடத்தை ஸ்தாபித்தார். பிறகு அன்னையில் இரண்டற ஐக்கிய மாகி சிவமும் சக்தியும் ஒன்று என்பதை நிரூபித்தார்.

இன்று சங்கர ஜயந்தி. ஆசாரியரையும், அம்பிகை யையும், ஐயனையும் நினைந்து அஞ்சலி செய்வோம். காம கோடி பீடத்தில் இன்று கருணை வளர்த்து வரும் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளைப் பணிவோம். அவர்களின் திரு உள்ளப்படி, புனித ராமேசுவரத்தில் சமுத்திரக் கரையிலே நிர்மாணமாகி வரும் ஆலயங்களில் இன்று ஆசாரிய சங்கரரின் சந்நிதியில் கும்பாபிஷேகம் நடைபெறும் என்று அறிகிறோம். இந்தப் பெரு விழா வில் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் கலந்து கொள் வார். ஆசாரிய சுவாமிகளும் கலந்து கொள்ளக்கூடும். பாக்கியசாலிகள் யாவரும் கலந்து கொள்ளலாம்.



இடங்களில் போய் நிற்பான் அவன். 'தப்பு, தப்பு; தெய்வத்தின் கண்கள் அப்படி இரா' என்பான். கடவுளரின் நயனங்களை எப்படி உருவாக்க வேண்டும் என்பதற்கு யோசனை சொல்வான். அப்படிச்செய்துபார்த்தால் உண்மையாகவே அந்த நேத்திரங்களில் ஆற்றல், அருள், அறிவு, ஆனந்தம், யாவும் இணைந்து மிளிரும். கதாதரனுக்கு எப்படி இந்த நுணுக்கங்கள் தெரிந்தன என்று ஊரே வியக்கும்.

கதாதரனே உருவாக்கிய அழகிய பதுமைகளை வைத்து அவனும் அவனது நண்பர்களும் சாஸ்திரங்கள் கூறிய முறையில் பூஜை செய்வார்கள்.

இத்தனை வேலைகளுக்குமிடையேஅன்னைக்கு ஊழியம் புரிவதையும், அன்னையை இழந்த அண்ணன் மகன் அக்ஷயனைக் கொஞ்சுவதையும் கதாதரன் மறக்க மாட்டான்.

கதாதரனுக்குப் பதினாறு பிராயமானபோது அவனது ஆன்மீக நாட்டம் எழுச்சி கொண்டது. கஷாய வஸ்திரமும், கமண்டலுவும், கப்பரையும் எப்போதும் அவன் கண் முன் நின்றன. அன்னையை நினைத்துக் கொள்வான்; அன்பு நிறைந்த ஊர் மக்களை எண்ணிப் பார்ப்பான். தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வான். இதயத்தின் சொல்லைப் புறக்கணிக்க மாட்டாமல், ''ரகுவீரா, நீ எப்படி எண்ணுகிறாயோ, அப்படியே நடக்கட்டும்'' என்பான். இல்லறத்திலிருந்து கொண்டே இறையுணர்வைக் குன்றாது காத்து வந்த தந்தையை நினைத்துத் திருப்திப் பட்டுக் கொள்வான். தன்னை நம்பிய ஏழை எளிய மக்களுக்கு ஓர் ஆதரிசமாக இல்லறத்தில் தான் வாழ்ந்தாலும் சரியே என்று மனதை ஆற்றிக் கொள்வான்.

'படகு தண்ணீரில் இருக்கலாம், ஆனால் படகுக்குள் தண்ணீர் இருக்கக் கூடாது; ஒருவன் உலக வாழ்வில் இருக்கலாம், ஆனால் உலக வாழ்வு அவனுள் ஊறிவிடக் கூடாது' என்பது ஸ்ரீராமகிருஷ்ண தேவரின் உபதேசமாகும்.

என்றாலும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் படகு அல்ல. வான மண்டலத்தில் உயர உயரப் பறக்கும் ஹோமா பட்சிக்குச் சமானமானவர் அவர். அவரால் எப்படி சம்சார ஆற்றோட்டத்தில் நீந்த முடியும்?

கதாதரன் பதினேழு பிராயத்து அழகு வாலிபனாகி விட்டான். உடலின் அழகு மட்டுமின்றி உள்ளத்தின் அழகும் சேர்ந்து பொலிவு பெற்றான். கதாதரனின் உண்மையும், எளிமையும், தெய்வ பக்தியும் ஊர் மக்கள் யாவரையும் அவனிடம் மதிப்பும் மரியாதையும் கொள்ளுமாறு செய்தன.

இந்தச் சமயத்தில் கல்கத்தாவில் 'டோல்' எனப்படும் சம்ஸ்கிருதப் பள்ளி நடத்தி வந்த ராமகுமாரிடம் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை சற்றே உயர்ந்தது. பாடம் புகட்டுவதுடன், சில இல்லங்களில் பூஜகராக இருந்து வந்த ராமகுமார் தமக்கு ஓர் உதவியாளர் இருந்தால் நலமென எண்ணினார். கதாதரனே அந்த உதவியாளாக இருக்க வேண்டும் எனக் கருதினார். கதாதரனைக் கல்கத்தாவுக்கு அழைத்து வந்து விட்டால், அவனும் தன்னிடம் கற்கலாம்; அதோடு சில இருகங்களில் அவனைக் கொண்டு பூஜை செய்யலாம் என்று எண்ணினார்.

இந்த உத்தேசத்துடன் கமார்புகூர் வந்தார் ராமகுமார். அண்ணாவின் யோசனையைக் கேட்டதும் கதாதரனின் கண் முன் கமார்புகூரின் வயல் வரப்புக்களும், ஓடைகளும், தோப்புக்களும் நிழலாடின; உழவர்களும்,இடையர்களும், அன்பே உருவான பெண்டிரும் நிழலாடினர். ஆனாலும் அவன் ராமகுமாரின் யோசனையை அப்படியே அப்போதே ஏற்றுக் கொண்டான். 'இன்று பெரிய அண்ணாதான் அப்பாவின் ஸ்தானத்தில் இருப்பவர்; அவர் சொல்வதற்குக் கீழ்ப்படிந்துதான்நடக்க வேண்டும்' என்ற விநயமான எண்ணம் கதாதரனின் மற்ற சிந்தனைகளுக்கு மீதாக நின்றது; அவற்றை வென்றது.

கல்கத்தாவுக்குப் புறப்பட நல்ல நாள் பார்த்தார்கள்.

பூஜையறையில் ரகுவீரனையும், சீதளாவையும், ராமேசுவர பாணலிங்கத்தையும் விழுந்து வணங்கினான் கதாதரன். அதன்பின் அன்னையின் பாதத்தில் பணிந்தான். இருவருடைய நெஞ்சையும் நேயம் நைய வைத்தது. தன் தொய்ந்து போன கைகளால் தனக்கு ஒரே ஆறுதலாக இருந்த மகனைப் பற்றிக் கொண்டாள் சந்திரா. அவள் நின்ற இடத்துத் தூசியை எடுத்துச் சிரசில் தரித்துக் கொண்டான் கதாதரன்.

கதாதரன் கமார்புகூரை விட்டுச் செல்வதைக் கண்ட கிராம மக்கள் எல்லோருடைய கண்களும் கரைந்தன. கண்ணன் திரு ஆய்ப்பாடியிலிருந்து வடமதுரைக்குச் சென்ற போது கோபியர் எப்படி ஒரு சூன்யத்தை உணர்ந்தனரோ அதேபோல் கமார்புகூர் பெண்களின் இதயத்தில் வெறுமை விரிந்தது.

அந்தக் கிராமத்தின் ஜீவநாடியே, ஜீவநாதமே வெளியேறி விட்டாற் போல ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. (தொடரும்)


THY-51-TAM.




அளவுகடந்த நுரை அடங்கிய சோப். - ஹமாம் - குடும்பத்திற்கான சோப்.

டாடா தயாரிப்பு


சந்திரமே சாட்சி 19
கதை: கௌசிகன்
சித்திரம்: விஜய்
இங்கு வந்து தங்கிய அந்தக் கறுப்புக் கண்ணாடியணிந்த பெண்ணைத் தேடி யாரோ மிலிடரி ஆசாமி வந்ததாகச் சொன்னீர்களல்லவா?
அன்றிரவு அவளுக்கு ஒரு 'டெலிபோன் கால்' வந்தது. மறுநாள் காலை யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ராணுவ உடை தரித்த இளைஞன் ஒருவன் வந்தான்.
அவனோடு வெளியே போனவள் மாலை தான் திரும்பினாள். உடனே அறையைக் காலி செய்து போய் விட்டாள்.
அந்த ராணுவ உடை தரித்திருந்த ஆசாமியை உங்களால் அடையாளம் சொல்ல முடியுமா?
அவன் முகத்தைச் சரியாகப் பார்க்கவில்லை. ஆனால் அந்த ஆசாமிக்கு இடது கை இல்லே!
அப்படியானால் உங்களுக்கு அவன் பெயர் தெரிந்திருக்க நியாயமில்லை.
என்ன அப்படிச் சொல்லிட்டீங்க. மறுவிசை வந்து அவனே தன் பெயரை என்கிட்டச் சொன்னான் சார்...!
நீங்கள் யார்?
அந்தம்மா இங்கே இல்லே. இனி வரவும் மாட்டாங்க.
...என்று சொல்லி ரிஸீவரைக் கீழே வைத்து விட்டேன்.
இந்த விவரங்களை எல்லாம் கோர்ட்டிலே வந்து சொல்ல வேண்டியிருந்தா சொல்லுவீங்களல்லவா?



ஓ! தாராளமா. பெரிசா சொல்லப் போறேன்!
அப்போ நாங்க வரோம்...
சரி...சரி..! காப்பிக்கு பில்...?
அடடே! ஆமா சார், மறந்து போச்சு 'பில்' எவ்வளவு?
அறுபது காசு..
என்னப்பா சந்துரு, ஒரே யடியாச் சிந்தனையிலே மூழ்கிச் சிலையாயிட்டியே?
இரண்டு மூன்று மாதத் தினப் பத்திரிகைகளைப் புரட்ட வேண்டும். இந்த ஊரில் நூல் நிலையம் ஏதாவது இருக்கிறதா?
நீங்கள் ஏன் போவானேன் நான் பேப்பர் வரவழைக்கிறேன். வீட்டிற்கு வாருங்கள் பார்க்கலாம்.
தினப் பத்திரிகை எதற்காகச் சந்துரு?
இரண்டு மாதத்திற்கு முன்பு நடந்ததே, ஒரு விமான விபத்து; அதிலே இறந்தவர்களில் சந்திரராஜன் என்று ஒரு ராஜாவும் அதேபோல் பெயரைப் பத்திரிகையில் பார்த்ததாக ஞாபகம். ஒரு வேளை....
ஐயையோ! போச்சு, போச்சு! என்னுடைய நம்பிக்கை எல்லாம் தரை மட்ட மாகிப் போச்சு. அந்த நர்சுடன் சிரிச்சதோட காரணம் இப்போதான் புரியுது.
அவசரப்பட்டு அலுங்கப் படாதே சேகர். வண்டியைப் பார்த்து ஓட்டு...
உன் ஞாபக சக்தி நாசமாப் போக! மன்னன் சொன்னதும் சொன்னது தான்! ம். விடுங்கள்.
இதோ! அந்தச் செய்தி. பயங்கரமான விபத்து. நாற்பது பேருடன் விமானம் நொறுங்கி விழுந்த பகுதி... இறந்தவர்கள் விவரம்... ம்... இதோ சந்திரராஜன்.
இவ்வளவு பாடு பட்டுக் கடைசியில் இப்படியா ஆகணும்? விமான விபத்தில் இறந்தது வேறு ஆளாக இருக்க வேண்டும்.
நான்தான் சொன்னேனே. எல்லாம் அப்பட்டமாய்ப் போச்சு போ.


யோசிக்க வேண்டிய விஷயம் தான். அப்படியானால்?
சரி, கிளம்பு உடனே!
தொடரும்

பொன் விலங்கு

பதினொருவது அத்தியாயம்

'இப்போது நாமிருவரும் நிற்கிற கோலம் எப்படி இருக்கிறதென்று சொல்லட்டுமா?' என்று தான் கேட்ட கேள்விக்குச் சத்தியமூர்த்தியே அன்பின் நெகிழ்ச்சி மிகுதியினாலோ அல்லது வாய் குழறியோ, 'சொல்லேன்' என்று ஏக வசனமாக ஒருமையில் பதில் சொல்லியது மோகினிக்குப் பிடித்திருந்தது. அவன் அப்படித் தன்னை அழைக்க வேண்டும் என்றுதான் அவள் விரும்பினாள். உரிமையை இன்னும் நெருக்கமாகப் புரிந்து கொள்வதற்கு ஒருமைக்கும் மேலானதொரு சொல் இருக்குமானால் அந்தச் சொல்லாலும் சத்தியமூர்த்தி தன்னை அழைக்க வேண்டும் என்றுதான் அவள் ஆசைப்பட்டாள்; ஏங்கினாள். அன்பைக் குறைத்துத் தன்னைத் தனியாகப் பிரித்து நிறுத்திக் கொள்ளும் அதிகப்படியான மரியாதையை விட, மரியாதையைக் குறைத்து அன்பால் பெருகி நெருங்கும் உரிமையையும், உறவையும் அவள் பெரிதும் விரும்பினாள். ஆனால் அதே சமயத்தில் சத்தியமூர்த்தி அவசரத்தினாலும் பதற்றத்தினாலும் அவளை அப்படி அழைத்ததற்காகத் தனக்குள் மனம் குழம்பிக் கொண்டிருந்தான். 'எல்லாவிதமான கட்டுப்பாட்டையும் மீறி, என் வாய் எப்படிக் குழறியது? — நான் எப்படித் தடுமாறினேன்?' என்று எண்ணியபடி அவன் மனம் வருந்திக் கொண்டிருந்தபோது தன்னுடைய வார்த்தைகளால் மோகினி அவனுடைய வருத்தத்தைத் தவிர்த்தாள். அவளுடைய அந்தப் பணிவும் விநயமும் அவனுடைய பரவசத்தை மிகுதியாக்கின.

''நீங்கள் இப்படி வா, போ, என்று உரிமையோடு ஒருமையில் அழைக்காமல், உயரத் தூக்கி வைத்து அநாவசியமாக மரியாதை கொடுத்து நேற்று வரை என்னைத் துன்புறுத்திக் கொண்டிருந்தீர்கள். இன்றுதான் நான் சௌபாக்கியவதியானேன். 'சொல்லட்டுமா?' என்று நான் உங்களைக் கேட்டவுடன், 'சொல்லேன்' என்று ஒருமையில் பதில் வந்ததே உங்களிடமிருந்து — அந்த வார்த்தையை என் செவிகள் கேட்க நேர்ந்த நல்ல வேளையை தான் வாழ்த்துகிறேன். இனிமேல் இப்படியே அழையுங்கள். இப்படி அழைக்கப்படுவதில்தான் நான் மகிழ்ச்சியை உணர்கிறேன். அதோ எதிரில் உள்ள நிலைக் கண்ணாடி உங்களையும் என்னையும் சிறிதும் வஞ்சகமில்லாமல் மணமக்களைப் போல் பிரதிபலிக்கிறது பார்த்தீர்களா? இந்த மோதிரத்தை முதன் முதலாக இந்த வீட்டுக்குள் நீங்கள் நுழைந்த தினத்தன்றே உங்கள் விரலில் அணிவிக்க எண்ணியிருந்தேன். ஆனால் அப்போது இதில் இந்த நீலக் கல் உதிர்ந்திருந்தது. கல்லையும் பதித்து மோதிரத்துக்கு மெருகு கொடுத்து வாங்குவதற்கு இரண்டு மூன்று நாட்கள் ஆகிவிட்டன. இதற்காகத்தான் நீங்கள் ஊருக்குப் போவதற்குள் உங்களை மறுமுறையும் சந்திக்க வேண்டுமென்று ஆசைப்பட்டேன். நீங்களோ உங்கள் கையில் உள்ள மோதிரத்தைக் கழற்றிப் பதிலுக்கு என் கையில் அணிவித்து விட்டீர்கள். என்னுடைய அம்மாவின் பெரியம்மா ஒருத்தி எனக்குப் பெரிய பாட்டி முறையாக வேண்டும், மதுரவல்லி என்று பெயர். அவள் தன்னுடைய பதினேழாவது வயதில் பக்கத்து சமஸ்தானத்துக்கு நவராத்திரியின்போது சதிராடப்போனவள் அங்கே கவிஞர் ஒருவரைச் சந்தித்துக் காதல் கொண்டாள். ஆனால் அடுத்த நவராத்திரிக்கு அவள் அங்கு போய் விசாரித்தபோது பேரழகராகிய அந்தக் கவி அகால மரணமடைந்து விட்டதை அறிந்து, 'இனி இந்தக் கால்கள் சலங்கை கட்டி ஆடப் போவதில்லை' என்று விரதமெடுத்துக்கொண்டு திரும்பினவள் சாகின்றவரை தன் கைகளால் வெறும் வாத்தியங்களைத் தீண்டியது தவிர மனிதர்களைத் தன் அருகிலும் வரவிடாமல் வாழ்ந்து செத்துப் போனாளாம். சாகின்றவரை

மணிவண்ணன்

அந்தப் பெரிய பாட்டியின் ஞாபகத்தில் அவள் முதல் முதலாகச் சந்தித்த கவிஞரைத் தவிர வேறு எவரும் மதிப்புப் பெறவோ வணங்கப் பெறவோ இல்லையாம். அந்தப் பாட்டியை நான் பார்த்ததில்லை. ஆனால் அவளுடைய பரிசுத்தத்தையும் தூய்மையையும் பற்றி இந்த வீட்டில் எனக்கு நினைவு தெரிந்த பின் கதை கதையாகச் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். 'நீயும் அந்தச் சனியன் பிடித்தவள் போனதைப் போலத்தான் உனக்கும் பயன் இல்லாமல், இந்த வீட்டுக்கும் பயனில்லாமல் போகப் போகிறாய். ஒரு வேளை அவளே வந்து பிறந்து தொலைத்திருக்கிறாளோ என்னவோ?' என்று கோபத்தில் அம்மா என்னை எத்தனையோ முறை திட்டியிருக்கிறாள். அம்மா அப்படித் திட்டுவதைக் கேட்கும்போதெல்லாம் நான் பெருமைப் பட்டிருக்கிறேனே தவிர ஒருசிறிதும் வருத்தப்பட்டதில்லை. சௌகரியங்களோடு வாழ்கிறவர்கள் அதற்காகக் கர்வப்படலாம். ஆனால் தூய்மையாக வாழ்கிறவர்கள் தான் 'நாம் வாழ்கிறோம்' என்று பெருமைப்பட்டுக் கொள்ள முடியும். நான் சௌகரியங்களுக்கு ஆசைப்படவில்லை. தூய்மையைக் காத்துக் கொள்ள மட்டுமே ஆசைப்படுகிறேன். பலவிதமான சூழ்நிலைகளை உத்தேசித்து நான் வாழவே கூடாது. ஆனால் நீங்கள் காப்பாற்றி யிருக்கிறீர்கள் என்ற நல்ல ஞாபகத்தைப் போற்றுவதற்காவது இன்னும் சிறிது காலம் வாழவும் வேண்டும்.''

''நிச்சயமாக வாழவேண்டும்! நீங்கள்....இல்லை......இல்லை......நீ...வாழ வேண்டும் என்பதற்காகத்தான் இந்த வீட்டுக்குள் வாயிற்படியேறி வந்தேன் நான். இந்தப் படிகளில் ஏறிக்கொண்டிருக்கும்போது நான் மேலே ஏறிக் கொண்டிருக்கிறேனா அல்லது மேலே ஏறிக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டே கீழே இறங்கிக் கொண்டிருக்கிறேனா என்று எனக்குள் பலமுறை தயங்கி யிருக்கிறேன். நான் அப்படித் தயங்குவதும் நியாயம்தானே? உலகத்தில் இரண்டு விதமான அன்பு உண்டு. மழையைப்போல்எப்போதாவது பெய்து நின்று விடுகிற அன்பு. சூரியனைப்போல் நாள் தவறாமல் தோன்றுகிற அன்பு. மழையைப் போல் பெய்து பெய்து நின்று விடுகிற அன்பைத்தான் உன் தாய் உனக்கு உபதேசம் செய்திருக்கிறாள். உலகத்தில் பெரும்பாலான மனிதர்கள் ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டிருக்கிற அன்பும் அப்படிப்பட்டதுதான்...''

''நான் புரிந்து கொண்டிருக்கிற அன்பு அப்படிப்பட்டது இல்லை. சத்தியமானது. என்னையே நான் அர்ப்பணித்திருப்பது.''

''இருக்கலாம் மோகினி! ஆனால் ஓர் ஆணும் ஒரு பெண்ணும் மனப்பூர்வமாகச் செலுத்துகிற அன்பு வெற்றி பெறுகிறதா அல்லது தோற்றுப் போகிறதா என்பதைப் பொறுத்து உலகத்தில் பல காவியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் அந்தக் காவியங்களில் பெரும்பாலானவற்றிலிருந்து இருவரில் யாரோ ஒருவருடைய அழுகுரல் இடைவிடாமல் ஒலித்துக்கொண்டிருப்பதை நீயும் நானும் இன்றும் நாளையும் என்றும் கேட்கலாம்.''

''.........''

மோகினியிடமிருந்து அவனுக்கு மறுமொழியில்லை. பதில் சொல்லாமல் மெல்ல விசும்பி அழத் தொடங்கியிருந்தாள் அவள். சுவரில் சிரித்துக் கொண்டிருக்கும் அற்புதமான முருகன் படம், ஒரு மூலையில் மௌனமாய் வைத்தது வைத்தபடியே கிடக்கும் வாத்தியங்கள்—இவற்றையெல்லாம் மாறி மாறிப் பார்த்தான் சத்தியமூர்த்தி. அந்த அழுகையைத் தாங்காமல் அருகில் நெருங்கித் தயங்கி நடுங்கும் கையால் அவள் தோளைத் தொட்டுக் கூறினான் அவன்:

''இதோ! என்னை நிமிர்ந்து பார், மோகினி! உன்னை அழ வைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அந்த வாக்கியங்களை நான் கூறவில்லை. உன்னுடைய வேண்டுகோளை மறுக்க முடியாமல்தான் இன்று இரண்டாவது முறையாகவும் இந்த வீட்டுக்கு நான் வந்தேன். உன்னுடைய வேண்டுகோளை மறுக்க முடியாமல்தான் இந்த மோதிரத்தை அணிந்து கொண்டேன். உன்னுடைய அன்புக்கு மரியாதை செய்ய வேண்டுமென்றுதான் பதிலுக்கு என் கை மோதிரத்தை உனக்கு அணிவித்தேன். நீ எனக்குச் சிரித்த முகத்தோடு விடை கொடுக்க வேண்டும்...''



அவள் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். கண்களைத் துடைத்துக் கொண்டு உள்ளே சென்றாள். மறுபடி



யும் அவள் திரும்பி வந்தபோது கையில் ஒரு சிறிய குங்குமச் சிமிழோடு வந்தாள். தன் கையினாலேயே அவன் நெற்றியில் திலகமிட்டாள்.

"போய் வாருங்கள். என்னை மறந்து விடாதீர்கள். உங்கள் ஞாபகத்தில் தங்கி வாழ்வதைக் காட்டிலும் பெரிய பாக்கியம் எனக்கு வேறு ஒன்றும் இல்லை" என்று நாத் தழுதழுக்கக் கூறிக் கண் கலங்கக் கைகூப்பினாள் மோகினி. பிரிய மனமில்லாமல் அவளைப் பிரிந்தான் அவன். மேலே நடந்து போக முடியாமல் தயங்கி நிற்கும்படி செய்துவிடுகிற அன்பு யாருடையதாக இருந்தாலும் அந்த அன்புக்கு நெகிழ்ந்தும், நெகிழாமலும் அதிலிருந்து விலகி நடக்கத்தான் வேண்டியிருக்கிறது. தான் அந்தச் சந்தியிருந்து திரும்பி மறைகிற வரை அவள் வீட்டு வாயிற் படியிலேயே நின்று பார்த்துக் கொண்டிருப்பதை இரண்டொரு முறை பின் பக்கமாகத் திரும்பிப் பார்த்தபோது அவன் கண்டான். வேகமாகக் கை வீசி நடந்த போது புது மெருகும் நீலக் கல்லுமாக மின்னியது அந்த மோதிரம். "இதென்னடா புது மோதிரம்?" என்று குமரப்பன் கேட்டால் என்ன மறுமொழி கூறுவது? வீட்டுக்குப் போய் நின்றால் அம்மாவோ தங்கையோ கூட அந்தக் கேள்வியை அவனிடம் கேட்க முடியும். யார் யாரிடம் எப்படிப் பதில் சொல்வது என்று அவன் இப்போதே சிந்திக்கத் தொடங்கினான். ஏற்கெனவே கையிலிருந்த பழைய பொன் மோதிரத்தைக் கடையில் கொடுத்து விட்டுத் தானே மேலும் கொஞ்சம் ரூபாய் கொடுத்து இதை மாற்றிக் கொண்டு விட்டதாகச் சொல்லிக் கொள்ளலாமென்று அவனுக்குத் தோன்றியது. யாருக்கும் கெடுதல் செய்யாத இந்தப் பொய்யை எண்ணுவதற்கும் பேசுவதற்கும்கூட அவன் கூசினான். 'தான் இப்படிப் பொய் சொல்ல வேண்டிய நிலையை உண்டாக்கியவள் அவள்தானே என்ற முறையில் மோகினியின் மேல் கோபமும் வந்தது அவனுக்கு. வீதியோரமாக நடந்து போய்க் கொண்டிருந்தவன் ஏதோ ஒரு பெரிய கடையில் முன்புறமாக இருந்த கண்ணாடியில் திரும்பும்போது தற்செயலாகத் தெரிந்து பிரதிபலித்த தன் உருவத்தைப் பார்த்துக் கொண்டான். கையில் நீலக் கல் மோதிரமும் நெற்றியில் குங்குமத் திலகமுமாக ஆளே திடீரென்று புது மாப்பிள்ளையாக மாறி விட்டாற் போலத் தோன்றியது. ஒரு கணம் அந்தத் திலகத்தை அழித்து விடுவதற்காக அவன் கை மேலே உயர்ந்தது. ஆனால் அப்படி அழிப்பதற்கும் மனம் துணியவில்லை. அதை அழிப்பதால் மனப்பூர்வமாகவும் அந்தரங்க சுத்தியோடும் செய்யப்பட்ட ஒரு மரியாதையை அவமதிப்பதாக உணர்ந்து மேலே எழுந்த கை தானாகவே தாழ்ந்தது. பெண்ணின் அன்பு என்பது மனிதனுடைய இதயத்தை மிக மென்மையாகத் தளைப்படுத்தும் உறுத்தாத விலங்குகளில் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். கழற்றவும் முடியாமல் கட்டிக் கொள்ளவும் முடியாமல் தவிக்க விடுகிற அந்த விலங்கு தன்னையும் இப்போது பிணித்திருப்பதைச் சத்தியமூர்த்தி நன்றாக உணர்ந்தான். 'நானும் கட்டுண்டேன்', 'நானும் கட்டுண்டேன்' என்பதை நிரந்தரமாக ஞாபகப்படுத்துவதைப் போல் அந்த மோதிரம் அவன் கையில் மின்னிக் கொண்டிருந்தது. 'இப்படி ஒரு சந்திப்பும் உறவும் என் வாழ்வில்தானா ஏற்பட் டிருக்கிறது?' என்பதை நினைத்து ஒரு கணம் தயங்கிப் பெருமூச்சு விட்ட பின் 'என் வாழ்வில் தான் ஏற்பட்டிருக்கிறது' என்பதை அவன் அந்தரங்கமாக ஒப்புக் கொண்டே ஆக வேண்டியிருந்தது. அன்று மாலை அவனும் குமரப்பனும் திருப்பரங்குன்றம் கோவிலுக்குப் போய் விட்டு வந்தார்கள். மறு நாள் மாலை மல்லிகைப்பந்தலுக்குப் புறப்படு முன் சத்தியமூர்த்தியை இரயில் நிலையத்தில் சந்திப்பதாகச் சொல்லி விடைபெற்றான் குமரப்பன். ஊருக்குப் புறப்படுகிற நாள் மிகவும் தொலைவில் இருப்பது போல் தோன்றி விட்டுக் கடைசியில் அருகில் வந்து 'நான் மிகவும் அருகில் தான் இருக்கிறேன்' என்று நெருங்கி நின்றுவிட்டது. அன்று இரவு நெடு நேரம்வரை அப்பாவும் அம்மாவும் அவனோடு பேசிக் கொண்டிருந்தார்கள். வேலையைத் தேடி வெளியூர் போகிற பிள்ளையைப் பெற்றோர் வழியனுப்பு

பொன் விலங்கு

ஓர் ஆணும் ஒரு பெண்ணும் மனப்பூர்வமாகச் செலுத்துகிற அன்பு வெற்றி பெறுகிறதா அல்லது தோற்றுப் போகிறதா என்பதைப் பொறுத்து உலகத்தில் பல காவியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் அந்தக் காவியங்களில் பெரும்பாலானவற்றிலிருந்து இருவரில் யாரோ ஒருவருடைய அழுகுரல் இடைவிடாமல் ஒலித்துக்கொண் டிருக்கிறது.

கிறபோது வழக்கமாய்த் திரும்பத் திரும்பப் பேசுகிறவற்றையெல்லாம் அவர்களும் அவனிடம் பேசினார்கள்.

பயணத்துக்கான பரபரப்பில் மறுநாள் பொழுது விடிந்ததும் தெரியவில்லை; பொழுது சாய்ந்ததும் தெரியவில்லை. 'நல்ல சகுனம் ஆகிறதா என்று பார்த்துக் கொண்டு படியிறங்கு' என்று கூறிய அம்மாவைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே தயாராகத் தெருவில் கொணர்ந்து நிறுத்தியிருந்த குதிரை வண்டியை நோக்கி நடந்தான் சத்தியமூர்த்தி. வண்டியில் பயணத்துக்கான சாமான்களையெல்லாம் ஏற்றி வைத்தாயிற்று. அப்பாவும் ஏறி உட்கார்ந்து கொண்டு விட்டார். அம்மாவும், தங்கைகளும் வாயிற் படியில் வந்து நின்று கொண்டு அவனுக்கு விடை கொடுத்தார்கள். குதிரை வண்டி தெருத் திரும்புகிறவரை மனம் ஏதோ பெரிய சுமையைத் தாங்க முடியாமல் கனப்பது போலிருந்தது. அதற்குள் தந்தை ஏதோ சொல்லத் தொடங்கினார். இரயில் நிலையம் வருகிற வரை சத்தியமூர்த்தி அவர் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டு வந்தான். குமரப்பனும் வேறு சில நண்பர்களும் இரயில் நிலையத்துக்கு வழியனுப்ப வந்திருந்தார்கள். இரயில் புறப்படுகிறவரை நண்பர்கள் ஒவ்வொருவரோடும் பேசுவதற்குத் தான் சரியாயிருந்தது. சத்தியமூர்த்தியின் நண்பர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டதனால் தந்தை இரயில் நிலையத்திற்குள் வந்த பின் அவனோடு அதிகம் பேசவில்லை. இரயில் நகர்ந்ததும், 'போய்ச் சேர்ந்த விவரத்துக்குக் கடிதம் எழுது' என்று அவர் கூறியதற்கு 'ஆகட்டும்' என்று தலையசைத்தான் அவன். பிளாட்பாரத்தைவிட்டு இரயில் விரைந்து செல்லத் தொடங்கியபோது தந்தை தளர்ந்த நடையோடு திரும்பிச் சென்று கொண்டிருப்பதை அவன் ஓடும் இரயிலிலிருந்தே பார்த்தான்.

நல்ல வேளையாக அன்று இரவு அவன் மல்லிகைப் பந்தல் ரோடு நிலையத்தில் தங்க வேண்டிய அவசியம் நேரவில்லை. மேலே மலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த கடைசி பஸ்ஸில் அவனுக்கு இடம் கிடைத்து விட்டது. மறுநாள் கல்லூரி திறக்கப் போகிற நாளாகையால் பஸ்ஸில் மாணவர்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. அவனைப் போல் புதிதாக மல்லிகைப் பந்தல் கல்லூரியில் வேலை ஒப்புக் கொள்வதற்குச் செல்லும் இரண்டொரு விரிவுரையாளர்களும் பஸ்ஸில் உடன் பயணம் செய்தார்கள். விடுமுறைக்காலம் என்ற சுதந்திரம் முடிந்து மீண்டும் கல்லூரிக்குத் திரும்புகிற மாணவ இளைஞர்களின் பேச்சும் சிரிப்புமாகப் பஸ்ஸில் ஓர் ஆரவாரம் இடையறாமல் இருந்தது. அதே கல்லூரியில் தாவர இயல் (பாடனி) விரிவுரையாளராக வேலை ஏற்றுக் கொள்ள வரும் இளைஞர் ஒருவரும் பொருளாதார விரிவுரையாளராக வேலை ஏற்றுக்கொள்ள வரும் நடுத்தர வயதினர் ஒருவரும் பஸ்ஸில் சத்தியமூர்த்திக்கு அருகே உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். தற்செயலாகப் பயணத்தின்போது ஒருவரை யொருவர் விசாரித்ததில் அது தெரிந்தது.

''இந்த உத்தியோகத்தில் ஒரு சுகமும் இல்லை. ஏதோ வேறு வழி இல்லாத காரணத்தால் கல்லூரி ஆசிரியராக வந்து மாட்டிக் கொண்டுவிட்டேன். ஏதாவது ஒரு கம்பெனியில் சின்ன உத்தியோகமாகப் பார்த்துக் கொண்டு போயிருந்தால்கூட இதற்குள் கையில் கொஞ்சம் பணம் சேர்ந்திருக்கும்'' என்று பொருளாதார விரிவுரையாளர் சத்தியமூர்த்தியிடம் அலுத்துக்கொண்டார். வாழ்க்கையே பணத்தைக் கொள்ளையடித்துக் குவிப்பதற்காக அளிக்கப்படுகிற ஒரு சந்தர்ப்பம் என்று அவர் நினைப்பதாகப் பட்டது சத்தியமூர்த்திக்கு. ஒவ்வொரு துறையிலும் அந்தத் துறையின் இலட்சியத்தில் மனப் பிடிப்பு இல்லாதவர்கள் ஒட்டிக்கொண்டு வேதனைப்படுவதைப் போல் நாட்டுக்கு மொத்தமான துன்பம் வேறு இருக்க முடியாது என்று நினைத்தான் அவன். 'சொந்தக் கசப்பை வெளியிடுவதற்கு மட்டும் தான் வாய் திறந்து பேச வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு அதற்காகவே பிறரோடு உரையாடுகிறவர்களைச் சத்தியமூர்த்தியால் ஒருபோதும் பொறுத்துக் கொள்ள முடியாது. அந்தப் பொருளாதார விரிவுரையாளரோடு பேசுவதைத் தவிர்ப்பதற்காகக் கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்தபடியே தூங்குவது போல் பாவனை செய்யலானான் அவன். பின் பக்கத்திலிருந்து மாணவர்களின் உற்சாகமான பேச்சுக் குரல் கேட்டது. 'வற்றல் குழம்பு' என்று 'கௌரவப் பெயர்' சூட்டப் பெற்ற ஒரு பேராசிரியரைப் பற்றி அதே பெயரை உபயோகித்து அந்த மாணவர்கள் பரம உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். சத்தியமூர்த்திக்கு மாணவர்களின் அந்த அரட்டையைக் கேட்கக் கேட்கச் சிரிப்பு ஒரு பக்கமும் வேதனை ஒரு பக்கமுமாக இருந்தது. போராட்டங்


களும், சாதனைகளும் நிறைந்த தன்னுடைய கல்லூரி நாட்களை நினைத்துக்கொண்டான் அவன். 'துடிதுடிப்பு நிறைந்தவர்களாக இருப்பதும் இப்படி வம்பு பேசுவதும் இல்லாத மாணவர்களை உலகம் முழுதும் தேடினாலும் காண முடியாது. ஆனால் ஆசிரியர்கள் அறிவின் கம்பீரமும், தோற்றத்தின் கம்பீரமும் உள்ளவர்களாக இருந்தால் 'மாணவர்களை ஓரளவு கட்டுப்பாட்டோடு ஆளலாம்' என்று அவன் மனம் சிந்தித்தது. மல்லிகைப்பந்தல் பஸ் நிலையத்தில் போய் பஸ் நிற்கிறவரை 'வற்றல் குழம்பை'யும், 'கீரை வடை'யையும் பற்றியே வெகு உற்சாகமாகப் பேசிக் கொண்டு வந்தார்கள் அந்த மாணவர்கள். அந்தப் பெயர்களெல்லாம் அப்பாவி ஆசிரியர்களுக்குச் சூட்டப்பட்டிருக்கும் பெயர்கள் என்று சிறிது நேரம் தொடர்ந்து அவர்களுடைய பேச்சைச் செவிமடுத்ததிலிருந்து சத்தியமூர்த்தி அனுமானம் செய்துகொண்டு அறிந்தான். அந்த மாணவர்களின் வம்பையும் வாயரட்டையையும் கேட்டுப் பக்கத்திலிருந்த தாவர இயல் விரிவுரையாளர் மருள்வதையும் அவன் கவனித்தான்.

மஞ்சு படிந்து மங்கிய கட்டிடங்களும் மலைச்சூழ்நிலையில் கண்ணுக்குக் குளுமையாக அடங்கித் தெரியும் மின்விளக்குகளுமாக இரவில் அந்த நகரம்; மிக அழகாக இருந்தது. ஊரின் நடுமையமாக இருந்த ஏரியில் மின் விளக்குகள் ஆடி அசைந்து பிரதிபலித்துக் கொண்டிருந்தன. வட்டவடிவமாக இருந்த அந்த ஏரியைச் சுற்றிலும் சாலையில் வரிசையாக அமைந்திருந்த மின் விளக்குகள் அந்தரத்திலிருந்து நழுவி விழும் ஒரு மாபெரும் ஒளியாபரணத்தைப் போல் தோன்றியது. சில்லென்று மலைக் குளிர் உடம்பில் உறைத்தது. பஸ் நிலையத்தில் பஸ் வந்து நின்றபோது ஊரே உறங்கிப் போயிருப்பது போல அத்தனை அமைதியாக இருந்தது. உடன் பயணம் செய்த தாவர இயல் விரிவுரையாளருக்கு யாரோ தெரிந்தவர்கள் வீடு இருந்ததால் அங்கே தங்குவதற்குப் போய் விட்டார் அவர். பொருளாதார விரிவுரையாளரும் அவசரமாக இறங்கிப் போய் விட்டார். பஸ் கண்டக்டர் இறக்கி வைத்த சத்தியமூர்த்தியின் பெட்டிகளும் சாமான்களும் தரையில் இருந்தன. எங்கே போய்த் தங்குவது என்று யோசித்துக் கொண்டிருந்தான் சத்தியமூர்த்தி. பெட்டிகளைத் தூக்கிக்கொண்டு வருவதாக நச்சரித்துக்கொண்டு இரண்டு மூன்று கூலிக்காரச் சிறுவர்கள் அவனைச் சூழ்ந்து நின்றார்கள். நிற்கவே முடியாமல் குளிர்ந்த மலைக் காற்று சுழித்துச் சுழித்து வீசிக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில் பூபதியின் வீட்டைத் தேடிக் கொண்டு தங்கப் போவது அநாகரிகமாக இருக்கு



மென்று தயங்கினான் அவன். கல்லூரிக்குப் போகலாமென்றால் 'இந்த வேளையில் அங்கு யார் இருக்கப் போகிறார்கள்?' என்று நினைத்து அந்த எண்ணத்தையும் கைவிட்டான். ஏரிக் கரையில் 'லேக் வியூ லாட்ஜ்' என்று ஒரு பெரிய விடுதி இருப்பதாகச் சொல்லி அங்கே போய்த் தங்கிக் கொள்ளலாமென்று கூலிக்காரப் பையன் வற்புறுத்திக் கொண்டிருந்தான். என்ன செய்வதென்று அவன் தயங்கிக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாகப் பூபதியின் மகள் பாரதியே காரில் வந்து இறங்கினாள். அவளுடைய வரவும் வணக்கமும் ஒரே உற்சாகமயமாக இருந்தன.

"நாளைக்குக் காலையில் கல்லூரி திறக்க இருப்பதால் நீங்கள் இன்றிரவு கடைசி பஸ்ஸுக்கு எப்படியும் வந்து விடுவீர்கள் என்று நானாக நினைத்துக் கொண்டு தேடி வந்தேன் சார். நான் நினைத்தது சரியாகப் போயிற்று. அப்பா ஊரில் இல்லை. எஸ்டேட்டுக்குப் போயிருக்கிறார். புதிதாக வருகிற ஆசிரியர்களை வரவேற்றுத் தங்குவதற்கு இடம்கூட ஏற்பாடு செய்யாமல் பிரின்ஸ்பாலும் ஹெட் கிளார்க்கும் என்னதான் வெட்டி முறிக்கிறார்களோ? பாவம்! நீங்களானால் பஸ்ஸிலிருந்து இறங்கி இந்தக் குளிரில் நின்று திண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். வாருங்கள். உங்களைக் கல்லூரியில் கொண்டு போய் விடுகிறேன். கல்லூரி வாட்ச்மேனை எழுப்பி ஆசிரியர்கள் ஓய்வு கொள்ளும் அறையில் இன்றிரவு தங்கிக் கொள்ள ஏற்பாடு செய்யலாம்" என்று அவள் கூறிய போது சத்தியமூர்த்தியின் நிலை தர்மசங்கடமாக இருந்தது. ஆர்வமும் அன்பும் நெகிழ்கிற குரலில் அவள் வேண்டிக் கொள்வதை அவனால் மறுக்க முடிய



வில்லை. அதே சமயத்தில் தயக்கமும் இருந்தது. அமைதியான அந்த இரவு நேரத்தில் அவள் வந்தது, நின்றது, அவசரப்படுத்தியது எல்லாம் வியப்புக்குரியனவா யிருந்தன. குளிருக்கு அடக்கமாகக் கிளிப் பச்சை நிறத்துக்கு ஓர் அழகிய கம்பளிச் சட்டையும் (ஸ்வெட்டர்) அணிந்திருந்தாள் அவள். இடையிலிருந்த வாடா மல்லிகை நிற வாயில் புடைவைக்கும், அந்தப் பச்சைச் சட்டைக்கும் இயைபாக அவள் தோன்றிய தோற்றத்தில் ஏதோ ஓர் அழகு பிறந்து அவனைக் கவர்ந்தது.

''ஏன் இப்படித் தயங்குகிறீர்கள்? நீங்கள் இந்தப் பஸ்ஸில்தான் வருவீர்கள். உங்களை அவசியம் சந்திக்க வேண்டும் என்று தவித்துக் கொண்டு பரபரப்போடு ஓடி வந்திருக்கிறேன் நான். நீங்களோ பாராமுகமாகத் தயங்கி நிற்கிறீர்கள்?'' என்று அவள் செல்லமாகக் கோபித்துக் கொள்கிற குரலில் அவனைக் கேட்டபோது தனது மௌனமும் தயக்கமும் அந்தப் பேதைப் பெண்ணின் மனத்தைப் புண்படுத்துகின்றன என்பது அவனுக்குப் புரிந்தது.

''தயக்கம் ஒன்றும் இல்லை! சட்டப்படி நாளைக் காலையிலிருந்துதான் நான் மல்லிகைப்பந்தல் கல்லூரியின் விரிவுரையாளன். இன்றே நான் தங்குவதற்கு இடமும் வசதிகளும் தேடித் தர வேண்டும் என்று கல்லூரி முதல்வரிடமிருந்தோ, நிர்வாகியிடமிருந்தோ நான் உதவியை எதிர்பார்ப்பது எப்படி நியாயமாகும்? என் சொந்த ஏற்பாட்டில் நானே தங்கிக் கொள்வதுதான் முறை! இல்லையா?''என்று அவன் சிரித்துக் கொண்டே கேட்டபோது அவள் முகம் வாடி விட்டது.

''நான் ஏதோ தெருவில் போகிறவள் உங்களை அழைத்து உபசாரம் செய்ய வரவில்லை. நீங்கள் எந்தக் கல்லூரியில் வேலை பார்க்க வந்திருக்கிறீர்களோ அந்தக் கல்லூரி நிர்வாகியின் மகள் என்ற முறையில் வந்து உங்களைக் கூப்பிட்டால் வருவீர்களோ இல்லையோ?'' என்று அவள் கேட்டபோது அவனால் மறுமொழி கூற முடியவில்லை. அவளுடைய பிடிவாதத்துக்கு முன் அவன் தோற்றான். கூலிக்காரச் சிறுவன் ஒருவனை ஏவி அவனுடைய பெட்டி முதலியவற்றைக் காரில் எடுத்து வைக்கச் செய்தாள் அவள். அவனைக் கல்லூரியில் கொண்டுபோய் விட்டு வாட்ச்மேனை எழுப்பித் தங்குவதற்கு வசதி செய்து கொடுத்த பின்புதான் அவள் வீடு திரும்பினாள்.

அரை மணி நேரம் கழித்து வாட்ச்மேன் பிளாஸ்க்குடனும் ஒரு சீப்பு மலைப் பழத்துடனும் சத்தியமூர்த்தியைத் தேடி வந்து சேர்ந்தான்.


''பிளாஸ்க்கிலே பால் இருக்கு! எடுத்துக்குவீங்களாம்......'' என்று அவற்றைச் சத்தியமூர்த்திக்கு அருகே கொண்டு வந்து வைத்தபோதும் அந்த அன்பு தன்னைத் துன்பப்படுத்துவதாகவே அவன் உணர்ந்தான். நான்கு மலைப் பழத்தையும் பாலையும் அவன் எடுத்துக்கொள்வதைத் தானே எதிரே யிருந்து பார்த்தபின்புதான் 'வாட்ச்மேன்' அங்கிருந்து திரும்பிப் போனான்.

மறு நாள் காலையில் விடிந்ததும் விடியாததுமாகக் கல்லூரியைச் சுற்றிப் பார்க்க வந்திருந்த ஹெட் கிளார்க்கையும் பிரின்ஸிபாலையும் சத்தியமூர்த்தி சந்திக்க நேர்ந்தது. அவர்களோடு பேசிக் கொண்டிருந்த சிறிது நேரத்திலேயே தான் அங்கே தங்கியிருப்பதோ, தொடர்ந்து தங்குவதோ அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்பதை அவனால் புரிந்துகொண்டுவிட முடிந்தது. பூபதியின் மகள் தன்னை அங்கே அழைத்து வந்து தங்கச் செய்ததை வாட்ச்மேன் அவர்களிடம் சொல்லியிருக்க வேண்டுமென்றும் அவனுக்குத் தோன்றியது. இண்டர்வ்யூவுக்கு வந்திருந்தபோது பார்த்ததற்கும் இப்போது பார்ப்பதற்கும் இடையே கல்லூரி முதல்வரிடம் ஒரே ஒரு மாறுதல் ஏற்பட்டிருந்தது. மோவாய்க்குக் கீழே சின்னஞ்சிறு தேன் கூடு கட்ட ஆரம்பித்திருப்பது போல் புல்கானின் தாடி வளர்க்கத் தொடங்கி யிருந்தார் கல்லூரி முதல்வர். அவருடைய முகத்தை முன்னிலும் விகாரமாகக் காண்பிப்பதில் இந்தப் புதிய தாடி மிக மிக ஒத்துழைத்துக் கொண்டிருந்தது.


''மிஸ்டர் சத்தியமூர்த்தி... லேக் அவென்யூவில் நிறைய மாடி ரூம்கள் கிடைக்கும். நான் வேண்டுமானால் நம் ஹெட் கிளார்க்கிடம் சொல்லி உங்களுக்கு ஒரு ரூம் பார்க்கச் சொல்லட்டுமா?'' என்று அவன் அங்கிருப்பது தமக்குப் பிடிக்காததை மிகவும் நாசூக்காகக் கூறி யிருந்தார் கல்லூரி முதல்வர்.

''உங்களுக்கு அந்தச் சிரமம் வேண்டாம் சார். இன்றைக்குச் சாயங்காலத்துக்குள் நானே ஒரு ரூம் பார்த்துக் கொண்டு போய் விடுவேன்'' என்று அவர் கேட்காத கேள்விக்கும் சேர்த்து அவருக்குப் பதில் சொன்னான் அவன்.

அந்தப் பதிலைக் கூறிவிட்டுத் தனக்குள் சிந்திக்கத் தொடங்கிய சத்தியமூர்த்தி 'இனி ஒவ்வொரு நாளும் இந்தத் திமிங்கிலத்தோடு போராடி வெல்ல வேண்டியிருக்கும்' என்ற எதிர்கால நிகழ்ச்சியை இன்றே நினைவுகூர்ந்தான். (தொடரும்)


ஸ்தாபிதம் பெற்ற
உயர்ந்த ரக
சாதனங்கள்
டீசல்
மற்றும்
பெட்ரோல்
எஞ்ஜின்களுக்கு
ஃப்யூயல் இன்ஜக்ஷன் பம்புகளும் நாஸில் ஹோல்டர்களும்
MICO
நாஸில்கள்
பில்டர்கள்
பில்டர் இன்ஸர்ட்கள்
எலிமெண்ட்ஸ்களும் டெலிவரி வால்வ்களும்
உலகப் பிரசித்தி பெற்ற
பாஷ் (ஜெர்மன்) ரகம்
ட்டார் இண்டஸ்ட்ரீஸ் கம்பெனி லிமிடெட்,
பெங்களூர்.
விற்பனை நிலையங்கள்:
பம்பாய்-2: 41, க்வீன்ஸ் ரோடு.
கல்கத்தா-16: 91-A, பார்க் தெரு
சென்னை-2: 1/155, மவுண்ட் ரோடு.
புது டெல்லி-1: காஜியாபாத்
எஞ்சினீரிங் கோ.,
44, ஜன்பத்

பட்டம் தரும் புட்டிப் பால்



ரா. வீ.

விடியற்காலை ஐந்து மணியிருக்கும்.

ரங்கனின் சகதர்மிணி உள்ளுக்கும் வாசலுக்குமாக நடந்து கொண்டிருந்தாள்.

ரங்கனும் தன் சகதர்மிணியின் அடிகளைப் பின்பற்றி வாசலுக்கும் உள்ளுக்குமாக நடந்து கொண்டிருந்தான்.

அவர்களது ஏக புத்திரன் ரமணன். பெற்றோர் பலவந்தப்படுத்தி எழுப்பிவிடவே, புத்தகத்தைக் கையில் எடுத்து வைத்துப் படிப்பதாகப் பாவனை செய்து கொண்டிருந்தான்.

ரங்கனும் அவன் மனைவியும் எதிர்ப்பட்டார்கள்; அதுவும் எங்கே? தங்கள் மகன் படித்துக் கொண்டிருந்த இடத்துக்கு அருகில்.

''இன்னும் இந்தப் பால்காரனைக் காணுமே!''

''அப்படியானால் இன்றைக்குப் பால் தபால்தானோ?''

''சரியாய்ச் சொன்னீர்கள் அப்பா! உங்களுக்கு ஆடிக்கொரு நாள் ஆவணிக்கொரு நாள் தபால் வருவது போலவே இந்தப் பால்காரனும் செய்கிறான்!'' ரமணனுக்குக் காப்பி ஆர்வம். எனவே, ஒரு போடு போட்டான் இப்படி.

''இந்தப் பால்காரனை நிறுத்திவிட்டு, வேறு ஒருவனை அமர்த்திக் கொள்ளக் கூடாதோ?''

அமர்த்திக் கொள்ளலாம்தான். முன்னால் இருந்தவன் இப்படி இருந்தான் என்பதனால் தான் அவனை நிறுத்திவிட்டு, இவனுக்கு மாடு வாங்க முன் பணம் கொடுத்து அமர்த்திக் கொண்டிருந்தார்கள். கொடுத்த கடன் அடையாமல் இவனை எப்படி நிறுத்துவது?

ஆனால் முன் ஜாக்கிரதையாக இப்படி ஏதாவது தட்டு முட்டு ஏற்பட்டால் என்ன செய்வது என்று வேறு ஒரு பால்காரியையும் ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள்.

அவன் வரும் நேரம் ஐந்தரை மணி. மணி ஐந்தரை ஆகியும் அவனைக் காணும். அவன் மகன் வந்தான். 'அம்மா! இன்று மாடு உதைத்துவிட்டது!' என்று சொல்லி விட்டுப் போக.

''சரி, இன்று காப்பியின் வாயில் மண் தான்!'' என்று ரங்கனின் மனைவி முணு முணுத்தாள்.

''நல்லவேளை! நம் வாயில் இல்லையே!''

''அம்மா! நீ காப்பியின் வாயில் மண்ணைத் தான் போடு, கல்லைத்தான் போடு. என் வாயில் மட்டும் சர்க்கரையைப் போட்டு விடு!'' என்று கூறிக்கொண்டே சர்க்கரை டப்பாவை எடுத்து வரப் போனான் ரமணன்.

எஞ்சியிருந்தது இன்னுமொரு நம்பிக்கை. அடுத்த வீட்டுக்குப் பால் போடும் கிழவியிடம் 'முட்டு முடைக்குப் பால் தா' என்று கூறி அவள் முடைக்கு ஐந்து ரூபாய் கொடுத்து வைத்திருந்தாள் ரங்கனின் மனைவி.

'கேட்டால், கிழவி இல்லையென்று சொல்ல மாட்டாள்' என்று ரங்கனின் மனைவி சொல்லி முடிக்கவும், சொல்லி வைத்தாற் போல் கிழவி பக்கத்து வீட்டுக்குப் பால் ஊற்ற வரவும் சரியாக இருந்தது. அவளைக் கூப்பிட்டுக் கேட்டதற்கு அவள் சொன்ன பதில் என்ன, தெரியுமா?

''அம்மா! வாடிக்கைக்காரர்களுக்குக் கொடுத்தது போக இன்று மிஞ்சவேயில்லை. நேத்திக்கே சொல்லியிருந்தீங்கன்னு எப்படியாவது 'சரிக்கட்டி'க் கொண்டு வந்திருப்பேன். முட்டு முடைக்குப் பணம் கொடுத்து உதவுகிற மகராசியாச்சே நீங்க. உங்களுக்கு இல்லையென்பேனா?'' என்று பொக்கை வாயில் புகையிலை தெரியச் சிரித்துக்கொண்டே சொன்னாள் கிழவி.

''சரிக்கட்டிக் கொண்டு வந்திருப்பேன்'' என்று அவள் சொன்னதன் பொருள் என்னவென்று சொல்லியா தெரிய வேண்டும்? முன்பே சொல்லியிருந்தால் வேண்டிய நீரை முன்கூட்டியே ஊற்றிக் கொண்டு வந்திருப்பேன் என்பதுதானே?

இதே சமயம் பாட்டில்கள் ஒன்றோடு ஒன்று உராய்வதனால் ஏற்படும் 'கிளிங் கிளிங்' ஒலி கேட்டது. பால் பண்ணையிலிருந்து சைக்கிள் பையன் ஒருவன் பக்கத்து வீடுகளுக்கெல்லாம்

பால் கொண்டு வந்து போட்டுக் கொண்டிருந்தான். அந்த ஒலியைக் கேட்டதும் ரங்கனுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. ''இப்படிப் பாலுக்குத் தவியாய்த் தவிப்பதை விட்டு, 'பண்ணைப் பாலை வாங்கு, வாங்கு' என்று முட்டிக் கொள்கிறேனே, கேட்கிறியா நீ?'' என்று சீறினான்.

''உங்களுக்கென்ன? நீங்கள் உங்களுக்குத் தோன்றியதைச் சொல்லிவிட்டுப் போகிறீர்கள். குழந்தைகளுக்கு ஒரு மாட்டின் பால் தான் கொடுக்க வேண்டும் என்று தெரியாமல் பெரியவர்கள் சொல்லிவிடவில்லை. பல மாடுகளின் பால் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாமல் போய் உடம்புக்கு ஒன்றுக்கு ஒன்று வந்துவிட்டால் அப்புறம் யார் சிரமப்படுவது?'' என்றாள் அவனது சகதர்மிணி. ஆனால் ஒன்றை மட்டும் மறந்துவிட்டாள். பாலுக்குத் தட்டு ஏற்பட்டுவிடக் கூடாதே என்பதற்காக அவன் மூன்று மூன்று பால்காரர்களை அமர்த்திக்கொண்டிருந்தானே! அதை மறந்து அவள் தன் கெட்டிக்காரத்தனத்தைப் பறைசாற்றிக் கொள்வதைக் காணச் சிரிப்புத்தான் வந்தது.

இந்தப் பால்காரர்கள் உபயோகிக்கும் பாத்திரங்கள் எப்படிப்பட்டவை? நன்றாகக் கழுவப்பட்டனவா? அவர்கள் பாலில் ஊற்றும் தண்ணீர் நல்லதா?—இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கத் தோன்றவில்லை.

ஆண்டாள் காலத்திலும் கண்ணன் நீராத விளையாட்டுக்கள் விளையாடிய காலத்திலும் நம் நாட்டில் 'குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்' ஒவ்வொரு வீட்டிலும் இருந்தன. செல்வத்துட் செல்வமாக ஆநிரைகள் கருதப்பட்டு வந்தன. அந்தக் காலத்தில் குழந்தைகளுக்கு ஒரே பசுவின் பாலைக் கொடுத்து வளர்க்கும் பழக்கம் இருந்திருக்க வேண்டும் என்று இலக்கிய இதிகாசங்களை எடுத்துக் காட்டியும், அவற்றுள் பல சான்றுகளைத் தேடியும் முடிவு கட்டலாம்.


ஆனால் இன்றைய நிலையில் அவை சாத்தியமா? விஞ்ஞான ரீதியாக முன்னேறி வரும் இந்நாட்களில் நம் நாட்டில் எத்தனையோ பால் பண்ணைகள் ஏற்பட்டு மக்களுக்குத் தொண்டு செய்து வருகின்றன. சென்னையில் அயன்புரம் மாதவரம் பகுதிகளில் நடைபெற்று வரும் பால் பண்ணைகளைப் போலவே, திருவனந்தபுரத்திலும் பட்டம் என்னுமிடத்தில் பால் பண்ணை ஒன்று நடைபெற்று வருகிறது. இப்பண்ணைக்கான நவீன யந்திர சாதனங்களை அமெரிக்கா வழங்கியுள்ளது. ரூபாய்க் கணக்கில் சொல்லப் போனால் ஏறக்குறைய நாலரை லட்சம் ரூபாய் உதவியுள்ளது.

இந்தப் பண்ணையைக் காணும் வாய்ப்புக் கிட்டியபோது இதன் நிர்வாக அதிகாரி சொன்னார்: ''ஒரு மாட்டின் பால்தான் உடம்புக்கு நல்லது என்னும் எண்ணம் மக்களிடையே இன்னும் நிலவி வருவதால், சிறுகச் சிறுகத் தான் பால் விநியோகம் அதிகரித்து வருகிறது. ஆயினும் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் இந்தப் பண்ணை செயல்பட முயன்று வருகிறது.''

எத்தனையோ ரங்கன்களின் மனைவிமார்கள் இப்படி இருக்கத்தான் இருப்பார்கள். நாளடைவில் நயமறிந்து நலமறிந்து மாறவும் செய்வார்கள் என்ற நம்பிக்கை அவர் பேச்சிலிருந்து ஏற்பட்டது.

கொள்ளியூர் என்று ஓர் ஊர். திருவனந்தபுரத்திலிருந்து எட்டு மைல் தூரத்தில் உள்ளது. அவ்வூர்வாசிகளில் சிலர் சேர்ந்து கூட்டுறவு முறையில் பால் விநியோகம் செய்யத் தொடங்கினார்கள் சில ஆண்டுகளுக்கு முன். அதன் செயல் முறை மனத்தைக் கவருவதாக அமையவே அக்கம் பக்கத்தில் அறுபதுக்கும் மேற்பட்ட கூட்டுறவு நிறுவனங்கள் செயல்படத் தொடங்கின. இப்படியாக வளர்ந்தோங்கிய கூட்டுறவுச் சங்கங்களின் பாலை வாங்கி விநியோகம் செய்யும் பொறுப்பைத் திருவனந்தபுரம் பால் பண்ணை மேற்கொள்ளவே பசுக்கள் வைத்திருப்போருக்கு நிரந்தரமாய் வியாபாரம் நடக்கத் தொடங்கியது. நியாயமான விலை காலத்தில் கிடைக்கவே அவர்களது உற்சாகமும் பாலெனப் பொங்கிப் பெருகியது. ஏறக்குறைய பன்னிரண்டு ஆண்டுகளாகப் பால் விநியோகம் செய்து வரும் இப் பண்ணையின் பொறுப்பு அதிகரித்து வருவதைக் கண்ட கேரள அரசாங்கம் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த 'பட்டம்' என்னும் பகுதியில் புதிய கட்டிடம் ஒன்றைக் கட்டித் தந்து ஊக்கியது. அமெரிக்கா இயந்திர உதவி அளித்து ஆதரித்தது. கல்கத்தாவில் இருபத்து நான்கு லட்சம் ரூபாய்க்கு இயந்திர உதவி அளித்துப் பால் பண்ணை நிறுவத் திட்டமிட்டுள்ளது அமெரிக்கா வென்றால், இப்பொழுதே மனப் பால் குடிக்கத் தோன்றுகிறதல்லவா?

பட்டத்தில் அமைந்திருக்கும் இந்தப் பால் பண்ணைக்குக் காலையிலும் மாலையிலும் பால் வண்டிகள் வந்த வண்ணம் இருக்கின்றன. முப்பது மைல் சுற்றளவுக்குச் சென்று இப்பண்ணை 'வான்'கள் பாலைச் சேகரித்து வருகின்றன. பெரிய வராந்தாவுக்கு எதிரில்





தாயார்: அவனோ பணக்காரப் பையன்! நமக்கும் அவனுக்கும் ஏணி வைத்தால் கூட எட்டாது. வீணாக ஆசைப்படாதே. விட்டு விடு.

பெண்: அதெப்படி? என்னை அவர் கலியாணம் செய்து கொண்டால், நம் நிலைக்கு அவரைக் கொண்டு வர எனக்கு எத்தனை நாளாகும்னு நீ நினைக்கிறே?

வந்து நிற்கும் இந்த வண்டிகளிலிருந்து பால் 'கான்'களை இறக்கி வைத்ததும், அவற்றுக்கு எப்படித்தான் உயிர் வருகின்றனவோ? மெதுவாக ஊர்ந்து செல்லத் தொடங்குகின்றன. சிறிது தொலைவில் இருக்கும் நிறுவை இயந்திரத்தின் அருகில் போய் நிற்கின்றன. வியப்புடன் விழிபிதுங்க நோக்கியபின்தான் விஷயம் விளங்குகிறது. பல் சக்கரங்கள் கொண்ட இயந்திர சாதனம் ஒன்று மின்விசையால் தானாக இயங்குகிறது. 'கான்'கள் ஊர்ந்து சென்று அங்கே நிற்கின்றன என்பதைக் காண முடிகிறது. அடுத்த கணம் பாலைத் தூக்கி அப்படியே மடமட வென்று நிறுவை இயந்திரத்தில் சாய்த்து விடுகிறார்கள். காலியான 'கான்'களைப் பக்கத்தில் வைக்கிறார்கள். அவை மீண்டும் ஊர்ந்து தங்களைத் தாங்களே கழுவிக் கொள்ளச் செல்கின்றன. ஆறு அறைகள் கொண்ட ஓர் இயந்திரம். ஓர் அறை பாத்திரத்தை வெந்நீரால் கழுவுகிறது. இன்னொன்று நீராவியினால் கழுவுகிறது. மற்றொன்று ரசாயனப் பொருள்களால் கழுவுகிறது. இப்படியாகப் பரிசுத்தம் செய்யப்பட்டு 'கான்'கள் வெளியே வருகின்றன. இவை யெல்லாம் கண் மூடிக் கண் திறக்கும் நேரத்தில் நிகழ்கின்றன.

நிறுவை இயந்திரத்தில் ஊற்றப்பட்ட பாலின் கதி? கவலைப்படாதீர்கள்! 'பாஸ்கரிசேஷன்' அதாவது பதனப்படுத்தும் இயந்திரத்துக்குப் பாய்ச்சப்படுகிறது. அந்த இயந்திரத்தின் முதல் அறைக்குள் போனதும், பால் ஐந்து டிகிரி அளவுக்குக் குளிர வைக்கப்படுகிறது. அடுத்த அறைக்குள் போனதும் ஐம்பது டிகிரி அளவுக்குச் சூடாக்கப்படுகிறது. பிறகு வடிகட்டிச் சுத்தப்படுத்தப்படுகிறது. மூன்றாவது அறைக்குள் சென்றதும் எழுபத்தாறு டிகிரிகள் மீண்டும் உஷ்ணத்தை ஏற்கிறது. இருபத்து மூன்று வினாடிகளுக்கெல்லாம் நான்காவது அறைக்குச் சென்று மீண்டும் ஐந்து டிகிரி அளவுக்குச் சூடாற்றப்படுகிறது. இப்படிச் சூடாக்கிக் குளிர வைப்பது எதற்குத் தெரியுமா? தீங்கு விளைவிக்கக் கூடிய 'பாக்டீரியா' கிருமிகளை அகற்றவும், பால் சத்தைக் குறையாமல் காக்கவுமேதான்.

இப்படிக் குளிர்ந்த பின், பால் குழாய்களின் வழியே புட்டிகளை நிரப்புவதற்காகச் செல்லுகிறது. 'கான்'களைச் சுத்தம் செய்ய இயந்திர சாதனங்கள் இருப்பது போலவே, புட்டிகளைச் சுத்தம் செய்யவும் இயந்திரங்கள் உள்ளன. மணிக்கு இரண்டாயிரம் புட்டிகளைக் கழுவி இவை பால் நிரப்பும் இடத்துக்கு அனுப்பி வைக்கின்றன. கம்பியினால் தயாரிக்கப்பட்ட வலைப் பெட்டிகள் இவற்றை ஏந்திச் செல்கின்றன. நிறுவை இயந்திரத்தில் ஊற்றப்பட்ட பாலைப் புட்டிகளில் நிரப்பும்பொழுது தான் காண்கிறோம். அப்புறம்தான் பால் வார்த்தாற்போல் நம் மனம் குளிர்கிறது.

இந்தப் புட்டிகளுக்குத் தெரிந்துள்ள பண்பு இன்னும் மனித குலத்துக்குத் தெரியவில்லையே என்று நினைக்கும்படி, இப்புட்டிகள் 'கியூ' வரிசையில் ஒன்றன்பின் ஒன்றாகச் சென்று அலுமினியக் குல்லாய்கள் தரித்து அழகு செய்து கொண்டு இறங்குகின்றன. கம்பிப் பெட்டிகளில் சமர்த்தாக அமர்ந்து குளிர் பதன அறையை அடைந்து, விநியோகத்துக்கு வெளியே செல்லத் தயார் என்று கூறியவண்ணம் உட்காருகின்றன. இந்தக் குளிர் பதன அறையில் ஐம்பத்தையாயிரம் புட்டிகளைச் சௌகரியமாக வைக்க வழி செய்திருக்கிறார்கள்.

தேவைக்கு அதிகமாகப் பால் இருந்து விட்டால், அவற்றிலிருந்து பாலேட்டைப் பிரித்து, வெண்ணெய் எடுத்து, நெய்யாகக் காய்ச்சவும் வேண்டிய இயந்திர சாதனங்களை அமைத்திருக்கிறார்கள்.

விஞ்ஞான ரீதியாக இயங்கும் இந்தப் பால் பண்ணையில் எல்லா அலுவல்களையும் இயந்திரங்களே செய்கின்றன. மனிதர்கள் ஒவ்வோர் இடத்திலும் சாட்சியாக நிற்கிறார்கள். எங்கும் தவறு நேர்ந்து விடக் கூடாதே என்று கண்காணிக்கிறார்கள். ஆனால் 'நாங்கள் சிறு பிழையும் செய்ய மாட்டோம். நீங்களும் எங்களைப் போல் இருந்தால், உங்களுக்கும் நல்ல பெயர், எங்களுக்கும் பெருமை!' என்று சொல்வது போல இயந்திரங்கள் இயங்குகின்றன. விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்படும் பாலுக்கு நாளுக்கு நாள் வாடிக்கைக்காரர்கள் அதிகமாவார்கள் என்பதில் ஐயமில்லை.

ஆனால்....

அடுத்த வீட்டுச் சேஷிப்பாட்டி சொல்வது போல் யாராவது இருந்து விட்டால்....?

சேஷிப்பாட்டி சொன்னது என்னவென்று தானே....? பக்கத்து வீட்டுப் பேத்தியை அழைத்துக் கொண்டு பொருட்காட்சி பார்க்கப் போயிருந்தாள் பாட்டி ஒரு சமயம். அங்கே கைபடாமல் ஓர் இயந்திரம் இட்டிலிக்கும் வடைக்கும் மா அரைத்துக் கொண்டிருந்தது. ''இம்மாதிரி ஓர் இயந்திரத்தை உங்கள் வீட்டிலும் வாங்கி விடுங்களேன்! கைபடாமல் விஞ்ஞான ரீதியாகத் தயாரிக்கலாம். சௌகரியமாயிருக்கும்!'' என்றாள் பேத்தி.

''சௌகரியந்தான்! ஆனால் என் பிள்ளைக்கு அவன் பெண்டாட்டி கைபடாமல் தயாரிக்கும் பொருள் எதுவுமே பிடிக்காதே! என்ன செய்வது?'' என்றாள் சேஷிப்பாட்டி புன்சிரிப்போடு.

சேஷிப்பாட்டியே விஞ்ஞான முறையில் தயாராகும் பொருளுக்கு ஆதரவு காட்டும் முறையில் பேசி விட்டாள் என்றால், பட்டம் தரும் புட்டிப்பாலுக்குக் கிடைக்கப் போகும் 'மௌசை'ப் பற்றிக் கேட்பானேன்?



ஆமைக்கு ஓடு வந்தது எப்படி ?

ரொம்ப ரொம்ப வருஷங்களுக்கு முன்னலே நான்கு புறமும் உயர்ந்த மலைகளால் சூழப்பட்ட ஒரு பள்ளத்தாக்கில் மிருகங்களும் பறவைகளும் வாழ்ந்து வந்தன. ஒரு சமயம் அந்தப் பள்ளத்தாக்கில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. ஆகவே மிருகங்களும் பறவைகளும் கூடி ஆலோசித்தன. பறவைகளின் அரசனன ராஜாளி, மலைகளைக் கடந்து பறந்து சென்று உணவு உள்ள பகுதியை அறிந்து வர வேண்டுமென்று முடிவாயிற்று. ராஜாளி பறந்து சென்று மலைகளுக்கு அப்பாலிருந்த ஓர் அழகிய நாட்டைக் கண்டது. அங்கு ஏராளமான உணவுப் பொருட்கள் குவிந்து கிடந்தன. ஒரே ஒரு வாலாட்டிக் குருவியைத் தவிர அங்கு, எந்த மிருகத்தையும் பறவையையும் காணவில்லை. ராஜாளியைக் கண்ட வாலாட்டிக் குருவி அது வந்த காரணத்தைத் தெரிந்து கொண்டது. "இங்கே உணவுக்காக யார் வருவதானாலும் முதலில் என்னோடு சண்டையிட்டு ஜெயிக்க வேண்டும்" என்று நிபந்தனை விதித்தது குருவி. குருவியின் வார்த்தையைக் கேட்ட ராஜாளிக்குச் சிரிப்புத்தான் வந்தது. ஆனால் அந்தத் தந்திரக்கார வாலாட்டிக் குருவியின் ஏற்பாட்டைப் பற்றிப் பாவம் ராஜாளிக்கு என்ன தெரியும்? மீன்களின் கூரான எலும்பை சட்டிகள் போலப் பூமியில் செருகி வைத்திருந்தது வாலாட்டி. ராஜாளி போரிட ஆரம்பித்ததும் அதைத் தரையில் உருட்டி விடவே மீன் எலும்பு சட்டிகள் ராஜாளியின் உடலில் பதிந்து அதை எழுந்திருக்க முடியாமல் செய்துவிட்டன. செழிப்பான நாட்டைத் தேடிச் சென்ற ராஜாளி வராமல் போகவே அதை அடுத்துக் கழுகு, கருடன், வல்லூறு ஆகிய மற்றப் பறவைகள் ஒவ்வொன்ருக வந்தன. அவைகளுக்கும் ராஜாளியின் கதியே ஏற்பட்டது. மலையைத் தாண்டிச் சென்ற பறவைகளோ மிருகங்களோ திரும்பாததைக் கண்ட மற்ற மிருகங்களும் பறவைகளும் பயமடைந்தன.

இந்த நிலையில் ஓர் ஆமை இந்த மர்மத்தை அறிந்து வரத் தான் போவதாக முன் வந்தது. அப்போது ஆமைகளுக்கு முதுகில் உறுதியான ஓடு கிடையாது. மெள்ள ஊர்ந்து ஊர்ந்து மலைமீது ஏறி மறு பக்கத்தை அடைந்தது ஆமை. வழக்கப்படி வாலாட்டி போருக்கு அழைத்தது.

ஒரு விநாடி யோசித்த ஆமை அருகிலிருந்த ஒரு புதருக்குப் போய் ஒரு கூலமானைத் தயாரித்து அதை (ஆஸ்திரேலியக் கதேசிகள் உபயோகிக்கும் கப்பரையைப் போன்ற மரத்தாலான உண்கலம்.) முதுகுக்கும் கோந்து மரத்தின் பட்டையை உரித்து அதை வயிற்றுப் பகுதிக்கும் கட்டிக்கொண்டு வாலாட்டியுடன் போரிட வந்தது. தாமதத்துக்குப் பெயர்போன ஆமையை வாலாட்டி தரையில் உருட்டிவிட்டது. ஆனல் மீன் எலும்பு சட்டிகளால் ஆமைக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை. வாலாட்டி எப்படி உருட்டிப் புரட்டினுலும் மறுபடி உயிரோடு எழுந்து போரிடத் தயாராக நின்றது ஆமை. முடிவில் களைத்துவிட்ட வாலாட்டியை ஆமை கொன்று வெற்றி கண்டது.

வேகமும் பலமும் கொண்ட மற்றப் பறவை, மிருகங்களினுல் சாதிக்கமுடியாததைத் தாமதமாக ஊர்ந்து செல்லும் ஆமை தனது சாதுரியத்தினுலும் அறிவாலும் சாதித்து விட்டது. அன்றைக்குத் தான் அடைந்த வெற்றியின் நினைவுச் சின்னமாகவே ஆமை, கூமைான் என்ற திருவோட்டை முதுகிலும் கோந்து மரத்தின் பட்டையை வயிற்றிலும் சுமந்து கொண்டிருக்கிறது.

ஆமைக்கு முதுகில் எப்படி ஓடு வந்தது என்பதற்கு ஆஸ்திரேலிய நாட்டில் வழங்கும் நாடோடிக் கதை இது. சுவாரஸ்யமாக இருக்கிறதல்லவா?



உங்கள் ஆல்பத்துக்கு :

பாகிஸ்தானைச் சேர்ந்த பெண்மணிதான் இவர். விசேஷ காலங்களில் இப்படி ஷல்வாரும் கமீஸும் மேலாடையும் அணிந்து கொள்ளுவார்கள். இவை வெல்வெட்டினுல் தயாரிக்கப்பட்டு ஜரிகை வேலைப்பாடுடன் கூடியவை.

உலகத்தின் கதை -3

1,000,000,000 ஆண்டுகளுக்கு முன்னால்




உயிரினம் முதன் முதலில் தோன்றியது கடலில்தான். உலகில் தோன்றிய முதல் ஜீவன் மிகச் சிறிய ஜீவ அணுக்களால் ஆகிய 'ஜெல்லி' என்ற ஒருவகை உயிர். இது கடல் பாசியைப் போன்றது. பச்சடி போன்ற வழுவழுப்பான ஓர் அமைப்பு. பின்னும் இவைகளின் உடலில் 'குளோரோபில்' என்ற பச்சையம் தோன்றியது. இன்று இலைகளில் நீ காணும் ஒரு ரசாயனச் சேர்க்கைதான் இந்தக் குளோரோபில். இந்தக் 'குளோரோபில்' வான மண்டலத்திலுள்ள சூரிய வெளிச்சத்தையும் கரியமில வாயுவையும் கொண்டு உணவாக மாற்றலாயின. இதனால் காற்று மண்டலத்தில் உள்ள கரியமிலவாயு குறைந்து பிராண வாயு அதிகமாக வழி ஏற்பட்டது. ஆகவே இவைகள் மற்ற உயிரினங்கள் வாழ்வதற்கு வழி வகுத்தன. இவைகளே முதல் தாவரங்களாயின.

இப்படிக் காற்றிலுள்ள கரியமில வாயுவையும் சூரிய வெளிச்சத்தையும் கொண்டு உணவு தயாரிக்க முடியாத மற்ற ஜீவாணுக்கள் பச்சை ஜீவாணுக்களையே உண்டு வாழலாயின. இதனால் இவைகள் மிருகங்களாயின. இப்படிப் பல்லாயிரம் வருஷங்களில் ஜீவாணுக் கூட்டங்களிலாகிய பிராணிகளும் தாவரங்களும் ஒற்றை ஜீவாணுவில் தோன்றிய சிருஷ்டிப் பொருளின் இடத்தை ஆக்கிரமித்துக்கொள்ளலாயின. இதை விஞ்ஞானிகள் முதுகெலும்பில்லாத பிராணிகள் வாழ்ந்த காலம் (தி ஏஜ் ஆப் இன்வெர்ட் ப்ரேட்ஸ்) என்கிறார்கள். இக் காலம் சுமார் 1,000,000,000 வருஷங்களுக்கு முன்னால். இங்கு பக்கத்திலுள்ள படங்களில் முதன் முதலில் தோன்றிய சில முதுகெலும்பில்லாத ஜீவராசிகளைக் காண்கிறீர்கள்.

(1) சுத்தமான கடல் மடுக்களில் வாழ்ந்த பவழப் பூச்சிகள். (2) ஜீவாணுக் கூட்டங்களினாலாகிய முதல் ஜீவன்-கடல் பஞ்சு. (3) ஜெல்லி மீன் — இந்தக் காலத்தில் ரொம்ப சாதாரணம். (4) தாவரப் பேன் போன்ற 'டிரிலோபிட்' என்ற பிராணி. இரண்டடி நீளமுடையது. (5) கதகதப்பான கடல் நீரில் வாழ்ந்த கடினமான ஓட்டையுடைய பிராணி. (6) புழுக்கள். தலையும் வாலுமுடைய முதல் பிராணி. (7) 'டிரிலோபிட்'களைத் தின்று உயிர் வாழ்ந்த மாமிசம் சாப்பிடும் முதல் முதல் பிராணியான கடல் தேள்கள். (8) முதல் முதலில் ஒற்றை ஜீவ அணுவில் தோன்றிய 'புரோட்டோஸோவா' என்ற உயிர்த் தோற்றத்தின் பல வகைகள். (9) கடல் நத்தை — முதுகெலும்பற்ற பிராணிகளின் பெரும் பிரிவைச் சேர்ந்தது. (10) செவுள், செதிள், விறைப்பான குறுத்தெலும்பு ஆகியவைகளைக் கொண்ட ஆதி மீன்.







மறக்க முடியாத திரைப் படங்கள்



பாடல்கள், காட்சி நிர்மாணங்கள், பாத்திரப் பொருத்தம், சிறந்த டைரக்ஷன், கலை நுணுக்கங்கள், நடிப்புத் திறமை, திரைக் கதை, வசனம், ஒளிப் பதிவு ஆகிய திரைப் படத்தின் இன்றியமையாத அம்சங்கள் எல்லாவற்றிலும் சிறந்து விளங்கிய படம் ''அசோக் குமார்.''

சரித்திரப் பின்னணி கொண்ட படமாயிற்றே, வெற்றி பெற வேண்டுமே என்று படத் தயாரிப்பாளர்கள் மிகவும் கவலையோடிருந்தார்கள். காரணம், சரித்திர காலத்துப் பாத்திரங்களுக்கேற்ற நடிகர்களைத் தேர்ந்தெடுப்பதில் உள்ள சிரமம்தான். முக்கியமாக சம்ராட் அசோகனாக நடிக்க யாரைப் போடுவது என்பதில்தான் சிந்தனையை அதிகமாகச் செலவிட வேண்டியிருந்தது. கடைசியில் அந்தப் பாத்திரத்துக்குத் தகுந்த நடிகரைப் பொறுக்கி விட்டார்கள்.


அந்த நடிகர் யாரென்று நினைக்கிறீர்கள்?

பழம்பெரும் நடிகரான ஸ்ரீ வி. நாகையா அவர்கள்தான்! சம்ராட் அசோகன் பாகம் அவருக்குப் பொருந்தின மாதிரி வேறு யாருக்கும் பொருந்தியிருக்க முடியாது: அத்தனை கச்சிதமாக இருந்தது.

தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிப் படங்களிலும் தம் சிறந்த நடிப்பினால் இணையற்று விளங்குபவர் நாகையா. அவரது உருக்கமான நடிப்பும், உள்ளத்தை உருக்கும் வசனங்களும் தனிப் புகழ் பெற்றுவிட்டன. ஒரு படத்தில் நாகையா வருகிறார் என்றால், அவருடன் சிறந்த நடிப்பும், பாத்திரப் பொருத்தமும், நல்ல முக பாவங்களும் வருகின்றன என்று சொல்ல வேண்டும். சிறந்த குணசித்திர நடிகர் என்னும் புகழை எப்போதோ பெற்றுவிட்டார் நாகையா.

திரைப் படங்களில் தாம் அந்த நாளிலிருந்து நடித்து வந்திருப்பதை அநுபவ பூர்வமாக விளக்கினார் நாகையா.

''சுமார் நூற்றைம்பது தமிழ்ப் படங்களில் நடித்திருக்கிறேன். ஏராளமான தெலுங்குப் படங்களிலும் கன்னடப் படங்களிலும், ஒரு மலையாளப் படத்திலும் நடித்திருக்கிறேன். என் தாய்மொழி தெலுங்குதான் என்றாலும், நான் தமிழ் மொழியையும் தமிழர்களையும் பெரிதும் மதிப்பவன். நான் சித்தூரில் சர்க்கார் ஊழியனாக வேலை பார்த்து வந்த காலத்தில் ஒரு தமிழ் நாடகம், அடுத்து ஒரு தெலுங்கு நாடகம் என்று ஏற்பாடு செய்து வாரம் தவறாமல் நடத்தி வந்தேன். நாடகத்தில் எனக்கு இருந்த ஆர்வம்தான் என்னைச் சினிமாவில் நடிக்கச் செய்தது. அக்காலத்தில் நிகழ்ந்த ஒரு சுவாரசியமான நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. 'சுமங்கலி' என்ற தெலுங்குப் படப் பிடிப்பு நியூடோன் ஸ்டுடியோவில் நடந்து கொண்டிருந்தது. அதில் நான் நடித்துக் கொண்டிருந்தேன். அன்று கதாநாயகனுக்கும் கதாநாயகிக்கும் கல்யாணம் நடக்கும் காட்சி படமாக்கப் படவிருந்தது. முத்துப் பந்தலும், குத்து விளக்கும், மகர தோரணங்களும், கல்யாண விருந்தினர்களின் கூட்டமும் தத்ரூபமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அப்பொழுது படப்பிடிப்பைப் பார்க்கக் குண்டூரிலிருந்து ஒரு பிரமுகர் வந்திருந்தார். 'இன்று கல்யாணக் காட்சி படம் எடுக்கப் போகிறார்கள்' என்று படத் தயாரிப்பாளர் சொன்னார். உடனே அந்தக் குண்டூர்ப் பிரமுகர் பரபரப்புடன், 'கொஞ்சம் வெளியே போய் விட்டு இதோ வந்து விடுகிறேன்!' என்று





கூறி விட்டு வேகமாக வெளி யிலே சென்று தம்முடைய காரில் ஏறிக் கொண்டு எங் கேயோ பறந்தார்.



''படப் பிடிப்பு ஆரம்ப மாகி மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. சாஸ் திரிகள் மந்திரம் சொல்ல, மங்கள வாத்தியங்கள் முழங்க, கதாநாயகனாகிய நான் மாங்கல்ய தாரணம் செய்தேன். சபையோர்களெல்லாம் பூமாரி பொழிந்தனர். இந்தக் காட்சி படமாக் கப்பட்டுக் கொண்டிருந்த போது, குண் டூர்ப் பிரமுகர் ஒரு கூடை நிறைய வெள் ளிப் பாத்திரங்களுடன் ஓடோடியும் வந்து, 'ஐயா! ஐயா! இந்த வெள்ளிப் பாத்திரங் களை மணமக்களுக்கு ஓதியிட்டு விடுங்கள்!' என்று கூறவே டைரக்டர் 'கட் கட்' என்று கத்தி மின் விளக்குகளையும் அணைக்கச் சொன் னார். குண்டூர்ப் பிரமுகரின் தலையீட்டினால் அந்தக் காட்சி வீணாகி மற்றொரு முறை பட மாக்கப்பட வேண்டி வந்தது. அவர் பாவம், நிஜக் கல்யாணம் என்றே நினைத்து விட் டார்!'' என்று கூறி நாகையா குலுங்கக் குலுங்க நகைத்தார்.

தியாகராஜ பாகவதர் அசோக சக்கரவர்த் தியின் மகன் குணாளனாக நடித்தார். அவர் பாடிய பாடல்கள் இன்னும் எல்லோருடைய செவிகளிலும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

பாபநாசம் சிவன் அவர்கள் படத்தின் பாடல்களை இயற்றி அதற்கு மேலும் மெரு கேற்றினார்.

அசோக சக்கரவர்த்தியின் இளைய மனைவி யான திஷ்யரக்ஷிதையின் பாத்திரத்தை ஏற்று நடித்துப் படத்தின் வெற்றிக்குப் பெரும் காரணமாக இருந்த முக்கியமான நடிகை யார் தெரியுமா? பழம்பெரும் நடிகையான கண்ணாம்பாதான். உணர்ச்சி மிகுந்த அவரது பேச்சும், சிறந்த நடிப்பும் ரசிகர்களைப் பெரி தும் கவர்ந்தன. குணாளன்மீது காதல் வலை வீசிய கட்டத்தில் கண்ணாம்பாளுக்கு ரசிகர் களின் ஏகோபித்த பாராட்டுக் கிடைத்தது என்றால் இப்பொழுது அவரைப் பார்ப் பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்!

கதையைக் கொஞ்சம் நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

போர்க்களத்திலிருந்து வெற்றி வாகை சூடித் திரும்பிய ராஜ குமாரன் குணாள னுக்குத் தம் இளைய மனைவி திஷ்யரக்ஷிதையை அறிமுகப்படுத்துகிறார் அசோகன். பிறகு அவனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டத் தீர் மானிக்கிறார். இதைத் தன் காதலி காஞ் சனமாலையிடம் தெரிவித்து மகிழ்கிறான் குணாளன். இளவரசனது முடிசூட்டு விழா வில் திஷ்யரக்ஷிதை அவன் நெற்றியில் திலக மிடுகிறாள்; அவனிடம் காதல் உண்டாகிறது. குணாளன் அவளுக்கு இணங்கவில்லை. அதன் காரணமாக அவன் விழிகள் பறிக்கப்பட்டு, நாடு கடத்தப்படுகிறான். காதலி காஞ்சன மாலையும் உடன் செல்கிறாள். இறுதியில் அசோக சக்கரவர்த்தி கண் ணிழந்த மகனைச் சந்திக்கி றார். புத்தபிட்சுவின் சிகிச் சையால் பார்வை திரும்பு கிறது; கதையும் முடிகிறது.

நடிகை டி. வி. குமுதினி யைப் பற்றி நினைக்காமல் இருப்பதற்கில்லை. அவர் காஞ்சனமாலையாக நடித் தார். பாத்திரப் பொருத் தம், கச்சிதமான நடிப்பு இவை குமுதினியை நட்சத்திர ஸ்தானத்துக்கு உயர்த்திப் படத்துக்கும் உயர்வை அளித்தது.

படத்தின் சிறப்புக்கு இளங்கோவன் அவர் களின் வசனமும் ஒரு காரணம். அது கவி யாய்க் கனி ரஸமாய்க் கற்கண்டாய் இனித் தது; கவிதையாய்ப் பெருகியது. ஒரு படத் துக்கு இளங்கோவன் வசனம் எழுதியிருக்கிறார் என்றால் அது ஒரு தனிச் சிறப்பாகக் கரு தப்பட்டு வந்தது.

ராஜா சந்திரசேகரின் திறமையான டைரக்ஷன் படத்தின் வெற்றிக்கு எல்லா விதத்திலும் இன்றியமையாத காரணமா யிருந்தது. குணாளனுக்குப் பார்வையளிக்கப் புத்த பிட்சு சிகிச்சை செய்யும்போது புத்தர் சிலை கண்ணீர் வடிக்கும் காட்சியில் ஒரு நடிகரை மகான் புத்தராக அமரச் செய்து கண்ணீர் வடிக்க ஏற்பாடு செய்திருந்தார். அந்த நடிகர் கடைசி நிமிஷத்தில் விலகிக் கொண்டார். டைரக்டர் ராஜா சந்திரசேகர் அது கண்டு தளர்ந்து விடவில்லை. புத்தர் சிலையின் கண்களில் சிறு துளைகள் இட்டு அவற்றில் கிளிஸரின் கலந்த நீருடன் 'இங்க் பில்லர்' களைச் சொருகிக் கண்ணீர் துளித்து வழியச் செய்தார். படம் பார்த்தவர்கள் அந்தக் காட்சியை மிகவும் ரசித்தனர்.

கருத்தைக் கவரும் கலை நுணுக்கங்களும், செவிக்கினிய கான வர்ஷமும், கம்பீரமான காட்சி நிர்மாணங்களும் கொண்ட வெற் றிப் படமான ''அசோக் குமார்'' என்றுமே மறக்கமுடியாத திரைப்படம்தான்! -விஜயம்




அசோக்குமார்



வெய்யில் ஒளிவீசும் செருப்புகள்
Bata


நம்ம தேசத்திலே லஞ்சம் ரொம்ப அதிகமாப் போச்சு!
அட நீங்க ஒண்ணு! வாங்க இப்படி..
...சொந்த அநுபவத்தைச் சொல்றேன்! எவ்வளவு லஞ்சம் வாங்கினாலும் இந்த விலைவாசி ஏற்றத்திலே போதமாட்டேங்குறது!
1
2
3


இங்கே சைக்கிள், குழந்தைகள் தள்ளுவண்டி, பிரிஜிடைர் தையல் மெஷின் முதலியன தவணையில் கொடுக்கப்படும் தவணைகளைக் கட்டத் தவறினால்......
..தவடையில் கொடுக்கப் படும்!
சாமா


இன்னிக்கு இந்திப் பரீட்சை. பள்ளிக்கூடத்திற்குப் போய் வெறும் பேப்பரை மடித்துக் கொடுத்துவிட்டு வந்து விட வேண்டியதுதான்!
அட அசடே! அதுக்கு நீ போவானேன்! அவர்களையே மடித்துக் கொள்ளச் சொல்லிக் கடுதாசு போட்டு விடேன்!
சாமா!


"டேய்! பசங்களா! அவர் கீழே விழுந்ததைப் பார்த்துச் சிரிக்கலாமா?"
"இடுக்கண் வருங்கால் நகுக என்று சொல்லியிருக்கீங்க சார்!"
"சீ! அதுக்கு அவரல்லவா சிரிக்கணும்; நீங்க சிரிக்கக் கூடாது!"

பாருங்கள்

எப்படி யெல்லாம் பயன்படுகிறது

டாடாவின்
ஓ டி கோலான்!



TELY-50 TAM



இவை மட்டுமா? இன்னும் பல வழிகளில் உபயோகிக்கலாம். உங்கள் வீட்டில் எப்பொழுதும் ஒரு சீசா கைவசம் வைத்திருங்கள். டாடாவின் ஓ டி கோலான் வாகான நாலுவித சைஸ்களில், நல்ல கடைகளில் கிடைக்கின்றன. ஒருமுறை உபயோகித்துப் பார்த்தால் பின் 'இது இல்லாமல் எப்படி இதுவரை இருக்கமுடிந்தது' என்று வியப்படைவீர்கள்.

டாடா தயாரிப்பு

பத்தினிக் கோட்டம்

ஜெகசிற்பியன்

அத்தியாயம் ஒன்பது

மதுவில் மிதந்த மனம்

பழச்சாறு, அரிசி, தாதகி மலர் முதலானவற்றி லிருந்து இறக்கி வாசனை ஏற்றப்பட்ட செந்நிற மதுவைச் சுவைத்துப் பருகிக் கிண்ணத்தை ஒருபுறமாக உருட்டிவிட்டு நிமிர்ந்த சளுக்கிய இளவரசன் விநயாதித்தன், சுமதிக் காந்தலெடுக்கும் தன் தொண்டையைச் செருமிக் கொண்டே ஆசனத்தின் இடது



பக்கம் சாய்ந்தவாறு, ''அது சரி, தளபதியாரே! அந்தச் சமண முனிவர் அகளங்கர் உயிரோடு இருக்கிறார் என்று நாம் கேள்விப்பட்டோமே, அது உண்மை தானா? அவ்விஷயம் பற்றி நீங்கள் மேலும் ஏதாவது விவரம் அறிந்தீர்களா?'' என்று வெகு அக்கறையாகக் கேட்டான்.

'தேட் கடுப்பன்ன நாட்படு தேறலை' உறிஞ்சிப் பருகிச் சுகம் காண்பதில் கவனமாயிருந்த தளபதி வில்வேலி தம் சிவந்த கண்களை உருட்டிப் புரட்டி அவனை வெறித்துப் பார்த்துக் கொண்டே குழறித் துவளும் குரலில் கூறினார்: ''இன்று மாலை தானே அந்தத் திரமின ச ண சங்கத்துக்குப் போய் இருந்தேன். அங்கே, ஓர் ஈ, எறும்பு கூட என் கண்ணில் தென்படவில்லை.''

புருவச் சதைகளுக்கு மேல் செருகிச் சுழலும் தன் சிறிய விழிகளைக் குரூரமாக மலர்த்திப் புஜங்களை முறுக்கிக் கொண்டு திரும்பிய விநயாதித்தன், ''அதாவது?'' என்று அடித் தொண்டையில் இழுத்தான்.

''சமந்தபத்திரர், அகளங்க அடிகள் உட்பட அங்கிருந்த சமண முனிவர்கள் அனைவரும்

வேறெங்கோ இடம் பெயர்ந்து போய் விட்டார்களாம்!''

''எங்கே போய் இருப்பார்கள்?''

''அதுதான் எனக்கும் தெரியவில்லை, இளவரசே! அந்த விஷயத்தை அறிந்து வரும்படி நம் ஒற்றர்கள் சிலரை அனுப்பி யிருக்கிறேன்.''

''நீங்கள் சொல்வதைப் பார்த்தால் அந்தச் சமண முனிவர்களுக்கு நம் இட்டங்கள், நோக்கங்கள் அனைத்தும் தெரிந்துவிட்டன என்றல்லவா ஆகிறது?''

''அதில் சிறிதும் சந்தேகமில்லை. அப்படி அவர்களுக்குத் தெரியாமல் இருந்திருந்தாலும், நமது ஆந்திர இளவரசி உத்தமசீலியே அவர்களிடம் அவ்விவரங்களைச் சொல்லி எச்சரிக்கை செய்து விட்டிருப்பார்.''

''அவ்வளவு தூரத்துக்கு அவள் துணிந்து விட்டாளா?''

''துணிந்து விட்டார் என்று நிச்சயமாகத் தெரிந்துதானே இன்று காலை நானும் அந்தக் காரியத்தைச் செய்யத் துணிந்தேன்!'' என்று அலட்சியமாகச் சிரித்துக் கூறிக்கொண்டே பொற்கிண்ணத்தில் யவன நாட்டு மதுவை வெறியுடன் ஊற்றி நிறைத்தார் வில்வேலி.

''தாங்கள் கேட்டுக் கொண்டபடி இந்தப் பல்லவபுரம் அரண்மனையில் அவள் தங்கியிருக்க மறுத்ததற்காக அல்லவா அத்தனை பெரிய தண்டனையை அளித்ததாக முன்பு சொன்னீர்கள்?'' என்று முகத்தைச் சுளித்துக் கேட்டான் விநயாதித்தன்.

''ஆமாம், இளவரசே! முதலில் நாம் இட்டமிட்டவாறு இந்த அரண்மனையில் ஆந்திர இளவரசியை ஒரு சிறைக் கைதி போல் அடைத்து வைப்பதற்காகத் தான் அப்படியொரு நைச்சியமான வேண்டுகோளை வெளியிட்டேன். ஆனால் நம்முடைய உள்நோக்கத்தை அவர் எப்படியோ புரிந்து கொண்டு அந்த வேண்டுகோளை ஏற்க அடியோடு மறுத்து விட்டார். அதற்கு மேல் அவரை இலவந்திகைப் பள்ளியில் இருத்தி வைப்பது பல வகையிலும் நமக்குப் பாதகமாகலாம் என்று தோன்றியது. அத்துடன் அவருடைய சிவிகைதூக்கியான நாகோதரன் நமது கண்காணிப்பிலிருந்து தப்பிச் சென்று விட்ட சேதி அந்த எண்ணத்தை மேலும் உறுதியாக்கியது. எனவேதான்...''—மீதமுள்ள சொற்களை மமதையான ஒரு விஷமச் சிரிப்பினால் நிறைவாக்கி முடித்து விட்டுக் கிண்ணத்தில் நுரைத்துப் பொங்கிய மதுவை எடுத்து ஒரே மிடறில் பருகித் தீர்த்தார் தளபதி வில்வேலி.

முந்திரிப் பழம் போன்ற தன் மூக்கின் முனையை மெல்ல வருடியவாறு ஏதோ சிந்தனையில் இருந்த விநயாதித்தன் நிதானமாகத் திரும்பி, ''ஏனய்யா! நம்முடைய நோக்கங்களையும் இட்டங்களையும் அவள் புரிந்து கொண்டதால் தான் இந்த அரண்மனையில் தங்கியிருக்கச் சம்மதிக்கவில்லை என்பது சரி; ஆனால் பெருவளநல்லூருக்குப் போக விரும்பிய காரணம் என்னவாக இருக்கும்?'' என்று புருவங்களை மேலுயர்த்திக் கேட்டான்.

இந்தக் கேள்விக்கு உடனே மறுமொழி கூறாமல், மதுவிலே நனைந்து தொங்கிய தம் அரிவாள் மீசையைத் துடைத்து ஒதுக்கி விட்டுக் கொண்டு மௌனமாயிருந்த வில்வேலி சில விநாடிகளுக்குப் பின், ''நானும் அது பற்றிப் பலவாறாக யோசித்தேன்; சரியான காரணமாக எதுவும் புலப்படவில்லை'' என்று முணுமுணுத்தார்.

''பெருவளநல்லூரிலிருக்கும் சேதியக் கலைஞரின் இல்லத்துக்குத்தானே அவள் போக விரும்பினாள்?''

'ஆம்' என்று தலையசைத்தார் தளபதி வில்வேலி.

''அந்த மனிதரைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?''

''காலஞ்சென்ற நம் ஜன்மப் பகைவன் நரசிம்மவர்மனால் வாதாபியிலிருந்து அழைத்து வரப்பட்ட சளுக்கியப் பிரஜையான அவர் ஒரு கற்பனாவாதி. கல்லைச் செதுக்கிச் சிலைகள் சமைப்பதும், மலையைக் குடைந்து கோயில்கள் அமைப்பதும்தான் உலகத்தில் மனிதன் சாதிக்கக் கூடிய மகத்தான காரியங்கள் என மமதையோடு எண்ணிக்கொண்டிருப்பவர். இத்தகைய அசட்டுக் கலைப் பித்துக் கொண்ட அவருக்கு நாட்டுப் பற்று, மதப் பற்று, மொழிப் பற்று என்பவையெல்லாம் வெறும் சுண்டைக்காய்கள். தமது கலை முயற்சிகளுக்கு யார் வந்து ஆதரவு தந்தாலும் அவர்களை 'இந்திரன், சந்திரன்' என்று போற்றித் துதிபாடத் தயங்காதவர். மொத்தத்தில் அவர் ஒரு பரிதாபத்துக்குரிய பிரகிருதி.''

''அந்த அசட்டுக் கலைப் பித்தரிடம் காரியக்காரியான ஆந்திர இளவரசி அத்தனை மதிப்பும் நம்பிக்கையும் கொண்டு அவரது இல்லத்தில் போய் இருக்க விரும்பியதன் நோக்கம் என்ன? நம்முடைய இட்டங்களைத் தெரிந்து கொண்ட அவள் நேரே தன் சொந்த நாட்டுக்கு அல்லவா ஓடிப்போக முயன்றிருக்க வேண்டும்?''

''நானும் இம்மாதிரியான ஒரு கேள்வியை எனக்குள் எழுப்பிப் பார்க்கத்

தவறவில்லை. இளவரசே! அந்தக் கேள்விக்கு நான் ஊகித்துக்கொண்ட பதில் இதுதான்: மாமல்லபுரத்திலே சேதியக் கலைஞர் பரவாதி மல்லரைக் கொண்டு கணேசர் கோயிலொன்றை எடுப்பிக்கச் செய்த நரசிம்ம பல்லவன் அது நிறைவாகு முன்னே இறந்து போனான். அவனுக்குப் பின் அந்தக் கோயில் இன்றுவரை முழுமை பெறாமல் ஊனியாகவே கிடக்கிறது. அதனைத் தம் வாழ்நாளைக்குள் எப்படியாவது நிறைவாக்கி முடித்துவிட வேண்டும் என்ற ஒரே இலட்சியத்துடன் இருந்து வருகிறார் பரவாதிமல்லர். இந்த விவரத்தை அறிந்த ஆந்திர இளவரசி, அவ்வழகிய கற்கோயிலை ஜினதேவருக்குரிய சமண ஜினாலயமாக மாற்றி முடிக்கப் பெரிதும் விருப்பம் கொண்டு அதற்குத் தேவையான எல்லா உதவிகளையும் தானே முன் வந்து செய்வதாக அவரிடம் தெரிவித்தார். ஆனால் அவருடைய அந்த விருப்ப விண்ணப்பத்தைச் சேதியக் கலைஞர் அப்போதைக்கு ஏற்கவும் இல்லை, இயலாதென மறுக்கவும் இல்லை. எனவே, தாம் இந்த நாட்டுக்கு வந்த மூல இலட்சியம் நம்மால் சிதைந்து போனதால் அந்த முற்றுப்பெறாத கணேசர்



கோயிலையாவது சமணக் கோயிலாக மாற்றி முடிக்க முயன்று பார்க்கலாமே என்ற நோக்கத்துடன் அவர் பெருவளநல்லூர் சேதியக் கலைஞரின் இல்லத்தில் போய்த் தங்கியிருக்க முடிவு செய்திருப்பார் என்று எனக்குத் தோன்றுகிறது.''

''எனக்கென்னவோ இது சரியான காரணமாகப் படவில்லை....'' என்று முகத்தைச் சுளித்து மோவாயைத் தடவி விட்டுக்கொண்ட விநயாதித்தன் ஒரு கண யோசனைக்குப் பின் சட்டென்று திரும்பி, ''ஏனய்யா! அந்தச் சேதியக் கலைஞரிடம் ஓவியம் பயிலும் மாணவன் ஒருவன் அவருடனேயே இருப்பதாகவும், அவனைக் கொண்டுதான் பல்லவ மன்னன் பரமேசுவரவர்மனின் உருவ ஓவியத்தை வரைந் வாங்கியதாகவும் முன்னொரு முறை சொன்னீர்களே, அவன் இப்போது அங்கே தானே


உங்கள் கேசம் உதிருகிறதா?

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.



பொடுகு

இது சாதாரணமான உபாதை. இதை ஒருபோதும் அலட்சியம் செய்யக்கூடாது.



கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது. ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டம் இல்லாததுதான்.



இளமையில் வழுக்கை

இக்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்.

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்றாக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட் K-I சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ், பீசாம் (இந்தியா) பிரை. லிட்., பீசாம் ஹவுஸ், மாஹிம், பம்பாய்—16.

ப்யூர் சில்விக்ரீன்



கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது.

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது.



Silvikrin

சில்விக்ரீன்—கேச ஆரோக்கியத்துக்கான வழி

இருக்கிறான்?'' என்று கரகரத்த குரலில் வினவினான்.

''அக்நிபுத்ர காமன் என்ற அந்த அப்பாவி ஓவியனைத்தானே கேட்கிறீர்கள்? அவனுக்கு அச் சேதியக் கலைஞரின் இல்லத்தை விட்டால் வேறு போக்கிடம் இல்லை!... ஏன் இப்படிக் கேட்கிறீர்கள் இளவரசே?''

''பல்லவ மன்னவரின் உருவ ஓவியத்தை வரைந்து கொடுக்க அவ் வோவியனை வரவழைக்கலாம் என்ற யோசனையை முதலில் தெரிவித்தவள் உத்தமசீலிதானே?''

''ஆமாம்; அதனால் என்ன?''

''அவன் அங்கு இருப்பதையும், ஆந்திர இளவரசி அவ்விடம் செல்ல விரும்பியதையும் இணைத்து உங்கள் சிந்தனைக்கு வேலை கொடுத்துப் பார்த்தீர்களா என்று கேட்கிறேன்!''

வில்வேலி இதைக் கேட்டுக் குதிரை கனைப்பது போல் உரக்கச் சிரித்துக் கொண்டே வெகு அலட்சியமாகச் சொன்னார்: ''சற்று முன் களைத்துப் பருகிய சோம பானம் இளவரசரின் மூளையை இவ்வளவு சீக்கிரம் இத்தனை அருமையாகச் சாணை பிடிக்கத் தொடங்கிவிடும் என்று நான் எதிர்பார்க்கவில்லை; மிக்க மகிழ்ச்சி! ஆனால், என்னுடைய மூளைக்கு அவ்வளவு வேலை கொடுத்து அதைச் சிரமப்படுத்த நான் எப்போதுமே முயலுவதில்லை! எனவேதான், ஆந்திர இளவரசியைப் பற்றிய பிரச்னைக்கு எளிதானதொரு முடிவைத் தேடிப் பிடித்து அதைச் செயல்படுத்தியும் விட்டேன்!''

''நீங்கள் செய்த அந்தப் பயங்கரக் காரியத்தை அவளுடைய தந்தையான விஷ்ணுவர்த்தனர் கேள்விப்பட்டால் என்னென்ன விபரீதங்கள் விளையும் என்பதையாவது சிந்தித்துப் பார்த்தீர்களா?'' என்று சற்றே காரமான குரலில் கேட்டான் விநயாதித்தன்.

வில்வேலி இப்போதும் அதே அலட்சியச் சிரிப்புடன்தான் பதில் சொன்னார்: ''விஷ்ணுவர்த்தனருக்கு இவ் விஷயம் எப்படியும் தெரியத்தான் போகிறது. ஆனால், அதற்கு நாம் பொறுப்பாளிகளல்ல என்று காட்டிக் கொள்ளவே அந்த வெறி கொண்ட யானையை வைத்து ஆந்திர இளவரசியின் பிரச்னைக்கு முடிவு கட்டினேன்.''

''அவர் உங்கள் நாடகத்தை நம்ப வேண்டுமே!''

''அவரை நம்பும்படி செய்வதற்கு ஏற்ற சாட்சிகளாகப் பயன்படுத்தத் தான் ஆந்திர இளவரசி யானை மீது பாயப்படும்போது அவளுடைய சிவிகை தூக்கிகளை அருகிலேயே நிறுத்தி வைத்திருந்தேன்! நாமும் நம்மைச் சார்ந்த

ஒரு நாடகம் வெகு நேரமாக நடந்து கொண்டிருந்தது. அதைப் பார்க்கவந்த பிரமுகர் அலுப்படைந்து எழுந்து போகத் தொடங்கினார்.



அதைப் பார்த்த நாடகக் காரிய தரிசி பரபரப்புடன் அவரிடம் சென்று, ''சார், அடுத்த காட்சி மிகவும் விறுவிறுப்பாயிருக்கும். நீங்கள் பார்த்தால் நிச்சயம் திடுக்கிட்டுப் போவீர்கள்!'' என்றார்.

பிரமுகருக்குக் கோபம் வந்து விட்டது. ''அதை நாடகாசிரியரே பார்த்துத் திடுக்கிடட்டும்'' என்று கூறிவிட்டுப் போய் விட்டார்.

வர்களும் சொன்னால்தானே விஷ்ணுவர்த்தனர் நம்ப மாட்டார்? அவரே தம் மகளுக்காக நியமித்து அனுப்பிய பணியாட்கள் சொல்லும்போது அதை அவர் நம்பித்தானே ஆக வேண்டும்?''

வியப்புடன் அவரை விழித்து நோக்கிய விநயாதித்தன் இரகசியக் குரலில் கேட்டான்: ''உத்தமசீலியை ஏற்றிக் கொண்டு அரிவாரணத்தைச் செலுத்திச் சென்ற யானைப் பாகனும், அந்த யானைக்கு முன்னால் பல்லவ நந்திக் கொடியை உயர்த்திக் காட்டிக்கொண்டு போன குதிரை வீரனும் திரும்பி வந்துவிட்டார்களா ஐயா?''

''நான் சொல்லிக் கொடுத்தபடியே காரியத்தை வெற்றிகரமாக முடித்து விட்டு அவர்கள் திரும்பி வந்தும் சேர்ந்துவிட்டார்கள்! சளுக்கிய வராகக் கொடியைக் காட்டியதும் அந்தப் பொல்லாத யானை மிரண்டு ஓடிய பயங்கரச் சம்பவத்தை அவர்கள் விளக்கிச் சொன்னபோது நானே சற்று ஆட்டம் கண்டுவிட்டேன்!'' என்று வன்மம் கலந்த பெருமையுடன் சொன்னார் வில்வேலி.

''இதெல்லாம் சரிதான்; ஆனால் என் தந்தையாரின் அனுமதியின்றி — அவருக்குத் தெரியாமலே-இவ்வளவு பெரிய காரியத்தை நீங்கள் செய்யலாமா?''

''ஓ!.... சளுக்கிய மாமன்னர் விக்கிரமாதித்தரின் சாம்ராஜ்ய விஸ்தரிப்புக்குத் தேவை எனக் கருதி அவருடைய சொந்த மைந்தனையே நான் கொலை செய்தாலும் அதை அவர் மகிழ்ச்சியுடன் வரவேற்று என்னைப் பாராட்டுவார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும், இளவரசே!'' என்று ஆணவச் சிரிப்போடு கூறித் தம் எதிரிலிருந்த மதுக் கிண்ணத்தை விசியெறிந்தார் வில்வேலி.

அத்தியாயம் பத்து

கறுப்புக் கனவு

பாறைபோல் முகம் இறுகிக் கறுக்க 'உர்'ரென்று உட்கார்ந்திருந்த விநயாதித்தன் எதையோ நினைத்துக்கொண்டவன்போல் சடக்கெனத் தலைதூக்கி, ''ஆமாம், பழையாறைச் சோழர் நம்முடன் கூட்டுச் சேர்ந்திருப்பதாகவும், அவருடைய மகளை எனக்கு மணம்செய்து வைக்கப் போவதாகவும் சொன்னீர்களே அந்த விஷயங்கள் என்ன ஆயின?'' என்று மிகவும் அக்கறையாக விசாரித்தான்.

''அவை முற்றிலும் முடிவான விஷயங்கள்தாம் இளவரசே! அந்த மனிதரின் கூட்டுறவால்தான், தலைமறைவாயிருக்கும் பரமேசுவர வர்மனைப் பற்றியோ இந்த அரண்மனைக் கோட்டைச் சிறையிலிருந்து தப்பியோடிவிட்ட கோவிந்த வர்மனைப் பற்றியோ நாம் கவலைப்படாமல் ஓரளவு தைரியமாக இருக்கிறோம். இன்னும் சில மாதங்களில் பல்லவ நாட்டையும் பாண்டிய நாட்டையும் ஒரே குடையின் கீழ் ஒன்றாக இணைத்து, அதன் ஏகச் சக்ராதிபதியாக உங்களுக்கு முடிசூட்டிப் பழையாறைச் சோழரின் மகளையும் மணம் செய்து வைத்து, அரசியல் அநுபவமுள்ள அந்தச் சோழச் சிற்றரசரையே துணையாக அமர்த்தி ஆட்சி நடத்தும்படி ஏற்பாடு செய்துவிட்டால் அப்புறம் நமது வராகக் கொடியை அசைக்க யாராலும் முடியாது. மாமன்னர் விக்கிரமாதித்தரின் இப்போதைய திட்டம் இதுதான்.''

இந்த விவரங்களைக் கேட்டு உற்சாக மகிழ்ச்சியுற்ற விநயாதித்தன் கம்பீரமாக நிமிர்ந்து, ''இவ்வளவு பெரிய திட்டங்களை வைத்துக்கொண்டு என் அருமை மாதுலரான பழையாறைச் சோழரை இன்னமும் எனக்கு அறிமுகம் செய்து வைக்காமல் இருக்கிறீர்களே!'' என்று கொஞ்சிக் குழைந்தான்.

''அவசரப்படாதீர்கள்! நானும் அவரைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அநேகமாக இன்றே நாளையோ அவர் இங்கு வந்தாலும் வரலாம்'' என்று அமர்த்தலாகக் கூறினார் தளபதி வில்வேலி.

சிறு பொழுது அமைதிக்குப் பின் தமக்குள் மெல்லச் சிரித்துக்கொண்ட விநயாதித்தன் குறுக்கில் வளர்ந்த தன் பருத்த உடலை நாணக் கோணலுடன் நெளித்து வளைத்துக் கொண்டு, ''ஏனய்யா! என் பட்டத்து ராணியாக வரவிருக்கும் பழையாறைச் சோழரின் மகளை நீங்கள் எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா?'' என்று தணிந்த குரலில் கேட்டான்.

''இதற்குள் இம்மாதிரி நினைவுகளையெல்லாம் உங்கள் நெஞ்சை அரிக்க விடக் கூடாது இளவரசே! இராஜ குல ஆடவர்கள் எப்போதும் மண்ணைப் பெண்ணாகவும், பெண்ணை மண்ணாகவும் மதிக்க வேண்டும். வீர நாடியினர் கடைப்பிடிக்க வேண்டிய தர்மம் இது'' என்றார் தளபதி.

''புதிய தத்துவம்!'' என்று கூறிக் கண் சிமிட்டி நகைத்தான் விநயாதித்தன்.

அந்தப் பல்லவபுரம் அரண்மனையில் முன்போல் அத்தனை படை வீரர்களின் நடமாட்டம் இன்று காணப்படவில்லை. ஆங்காங்கு சில காவல் வீரர்கள் மட்டுமே சோம்பலுடன் உலாவிக்கொண்டிருந்தார்கள்.

அரண்மனை முகப்புக் கூடத்தில் அமர்ந்திருந்த வில்வேலி தம் பார்வையைச் சுற்றிலும் செலுத்தியவாறு, ''இந்நேரம் நமது மாபெரும் படைகள் அனைத்தும் பாண்டிய நாட்டின் வட எல்லையான நெல்வேலிக்குப் போய்ச் சேர்ந்து விட்டிருக்கும். நாளைக் காலை பாண்டிய நாட்டு மண்ணில் குருதிச் சேற்றைக் குழப்ப, நம் மாவீர மாமன்னர் விக்கிரமாதித்தர் உறையூரிலிருந்து புறப்பட்டு விட்டிருப்பார். அவருக்கு முன் நான் அங்கு போய்ச் சேர வேண்டும். இது மன்னரிடமிருந்து இன்று எனக்கு வந்துள்ள தகவலும் கட்டளையும் ஆகும்'' என்று கவலைச் செறிவுடன் முணுமுணுத்தார்.

இதைக் கேட்டு உள்ளூறப் பயந்தவன் போல் அவர் முகத்தை ஏறிட்டு நோக்கிய விநயாதித்தன், ''ஏனய்யா! நீங்களும் என் தந்தையாரும் நெல்வேலிப் போர் முனைக்குப் போய்விட்டால், நான் ஒருவனே காஞ்சி அரண்மனைக் கோட்டையையும் இந்தப் பல்லவபுரம் அரண்மனைக் கோட்டையையும் எப்படித் தன்னந் தனியாகப் பாதுகாப்பேன்? அதற்குப் போதிய படை வீரர்களையும் இங்கு விட்டு வைக்கவில்லையே!'' என்று அடைத்த குரலில் கேட்டான்.

''பயப்படாதீர்கள் இளவரசே! எந்த வகையிலும் எதிர்க்க ஆளில்லாத இந்தப் பராரி நாட்டின் கோட்டைகளை ஒரு சாதாரணப் போர் வீரன்கூடக் கட்டிக் காத்துவிடுவான். ஆயினும் அதற்கான சில எளிய தந்திர உபாயங்களை உங்க

ளுக்குச் சொல்லிக் கொடுத்து விட்டுப் போகிறேன். அவற்றின்படி பார்த்துக் கொண்டால் எவ்வித அசம்பாவிதமும் நடைபெறாது தடுத்து விடலாம். பழையாறைச் சோழரும் உங்களுக்கு உதவியாக இருக்க ஏற்பாடு செய்கிறேன். அத்துடன் போர்க்களத்திலிருந்து நானோ, நம் மன்னர் பிரானோ இங்கு அடிக்கடி வந்து முக்கியமான காரியங்களைக் கவனித்துக் கொள்வோம்.'' — அலட்சிய மிடுக்குடன் இவ்வாறு கூறிக்கொண்டே எழுந்தார் வில்வேலி.

இந்தச் சமயம், அங்கே வேர்க்க விறுவிறுக்க ஓடிவந்து நின்றான் ஒரு தடித்த மனிதன். இன்று மாலை தலத்துறையை அடுத்த சென்னி வாய்க்கால் கரையில் பல்லவ மன்னன் பரமேசுவரவர்மனை அணுகி மிளகு விலைபற்றிய தம் சர்ச்சைக்கு நியாயம் கோரினார்களே, அந்தச் சோனக வியாபாரிகளில் ஒருவன்தான் அவன்!

திகைப்புற்ற வில்வேலி அவனை விழித்துப் பார்த்து, ''யார்! பல்லவ பரமேசுவர வர்மனின் உருவ ஓவியத்தை எடுத்துக் கொண்டு அவனைத் தேடிப் பிடிக்கச் சென்ற ஒற்றன் தானே நீ?'' என்று அடித் தொண்டையில் அதட்டிக் கேட்டார்.

சோனக வியாபாரி போல் வேடமிட்டிருந்த அந்தச் சளுக்கிய ஒற்றன், ''ஆம், பிரபு!'' என்று பணிவுடன் கூறி வணங்கிவிட்டுச் சற்றே முன் வந்து, ''கண்டு பிடித்துவிட்டோம் ஐயா! இத்தனை நாட்களாக நம் கண்ணில் மண்ணைத் தூவி மறைந்து திரிந்து கொண்டிருந்த பல்லவ மன்னரைக் கண்டு பிடித்து விட்டோம்!'' என்று மகிழ்ச்சி முட்டக் கூறினான்.

மதுப் போதையில் கிறங்கியிருந்த வில்வேலியும் விநயாதித்தனும் இந்தச் செய்தி கேட்டு விதிர்ப்படைந்து நிமிர்ந்தனர். ''எங்கே? எப்படி?'' என்று பரபரப்புடன் வினவிக் கொண்டே சுற்றுமுற்றும் பார்த்தவாறு பாய்ந்து வந்தார் வில்வேலி.

தன்னிடமிருந்த பல்லவ மன்னனின் உருவ ஓவியச் சுருளைப் பிரித்துக் காட்டி உற்சாகமாகச் சொன்னான் சளுக்கிய ஒற்றன்: ''தலத்துறைக்கு அண்மையிலுள்ள சென்னி வாய்க்கால் என்னுமிடத்தில் அவரைப் பார்த்தோம்!''

''இந்த ஓவியத்திலுள்ள உருவத் தோற்றத்தைப் போலவே அவன் இருந்தானா? அதில் சந்தேகமில்லையே?''

''எள்ளத்தனையும் சந்தேகம் இல்லை, ஐயா! இதே உருவந்தான், இதே தோற்றந்தான்! ஆனால்...ஒரே ஒரு மாற்றம்!.... விந்தைக்குரிய பெரிய மாற்றம்!''

''இதே தோற்றம், ஆனால் பெரிய மாற்றம்! என்னடா உளறுகிறாய்?''

''ஆம், பிரபு! இந்த ஓவியத்தில் உள்ளபடியே அவருடைய அங்க அவயவங்கள் அனைத்தும் அச்சில் வார்த்தெடுத்த மாதிரி அப்படியே அமைந்திருந்தன. ஆனால், அவரது கண்கள் மட்டும்....''

''கண்களா? கண் என்று ஒருமையில் சொல்லடா, கபோதி! ஒரு கண் குருடான ஒற்றைக் கண்ணன்தானே அவன்!''

''அதுதான் இல்லை, ஐயா! காந்தம் போல் கவரும் தன்மை வாய்ந்த அழகிய இரு கண்களும் அவருக்கு நன்றாகவே இருக்கின்றன! இந்த ஓவியத்தில் உள்ளதுபோல் அவர் ஒரு கண் குருடர் அல்லர்!''

வியப்பின் சிகரத்துக்குத் தூக்கியெறியப்பட்ட வில்வேலி, ''உண்மைதானா? அவன் ஊனக் கண்ணற்ற உருவத்தினனா?'' என்று குழறும் குரலில் வினவினார்.

''நாங்களும் முதலில் இந்தச் சிறு வேற்றுமையைக் கண்டு ஏமாந்துவிடத்தான் இருந்தோம், ஐயா! பிறகு இவ்வோவியத்தின் பழுதுபட்ட கண்ணை மறைத்துக் கொண்டு இதிலுள்ள மற்ற உருவ அமைப்புக்களை ஒப்பிட்டுப் பார்த்தபோது எங்கள் சந்தேகம் அறவே நீங்கிவிட்டது! அவர்தான் பல்லவ மன்னர்! அதில் சிறிதும் ஐயமே இல்லை!''

இந்நேரம் வரை தன்னை மீறிய பயப் பிராந்தியுடன் வெலவெலத்து நின்றுகொண்டிருந்த விநயாதித்தன், ''அப்படியானால், அத்தியந்தகாமன் என்ற அந்த ஓவியக் கலைஞன் நம்மை ஏமாற்றுவதற்காகச் செய்த விஷமத்தனமான காரியம் என்றல்லவா இது தோன்றுகிறது?'' என்று கேட்டான்.

ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியவராய் விறைத்து நின்றுகொண்டிருந்த வில்வேலி தலை குனிந்து உலாவியவாறு, ''இல்லை, இல்லை! இந்த ஒற்றன் சொல்வதைப் பார்த்தால், அத்தியந்தகாமன் என்ற பெயரில் இங்கு வந்து பல்லவ மன்னனின் உருவ ஓவியத்தை வரைந்து கொடுத்துவிட்டுப் போன அந்த ஓவியக் கலைஞனே பல்லவ பரமேசுவர வர்மனாக இருப்பானோ என்னும் சந்தேகம் எனக்கு இப்போது ஏற்பட்டு விட்டது!'' என்று அடித் தொண்டையில் கரகரத்தார். ''நான் ஏமாந்து விட்டேன். இல்லை, ஏமாற்றப்பட்டு விட்டேன்.''

''எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது பிரபு! ஏனென்றால், நாங்கள்

பார்த்தபோது பல்லவ மன்னர் ஓர் எளிய ஓவியக் கலைஞரைப் போலத் தான் காட்சி யளித்தார்'' என்று உள்ளடங்கிய குரலில் இழுத்தான் அந்த ஒற்றன்.

ஒரு கண மௌனத்துக்குப் பின் திடுமெனத் தலை தூக்கிய வில்வேலி, ''ஏனடா, பல்லவ மன்னனை நீ பார்த்ததாகச் சொல்வது உண்மைதானே? அல்லது அவனைப் பார்த்த மாதிரி கனவு கண்டு உளறுகிறாயா?'' என்று கல்லைக் கொட்டி அரைப்பதுபோல் பல்லை நறநறவெனக் கடித்துக் கேட்டார்.

வெடவெடவென நடுங்கிக்கொண்டே பின்னால் நகர்ந்த ஒற்றன் திக்கித் திணறவிட்டுச் சொன்னான்: ''அப்படியெல்லாம் இல்லை, ஐயா! அந்தச் சென்னி வாய்க்கால் கரையோரம் நாங்கள் பார்த்த மனிதர் பல்லவ மன்னர்தான் என்று தீர்மானித்ததற்கு இவ்வோவியத்தில் உள்ள உருவ ஒற்றுமையோடு இன்னொரு பெரிய ஆதாரத்தையும் எங்கள் கண்ணாரக் கண்டோம். அதாவது, இத்தனை நாட்களாக அரண்மனையில் கட்டிப் போட்டு வைக்கப்பட்டிருந்த பல்லவ மன்னரின் பட்டத்து யானை அரிவாரணம் அங்கே அவருடன் இருக்கக் கண்டோம்.''

இடியொலி கேட்ட சர்ப்பம் போல் அதிர்ந்து நிமிர்ந்த வில்வேலியும் விநயாதித்தனும் ஒரே குரலில், ''என்ன! பல்லவ மன்னனுடன் அவனது யானையையுமா பார்த்தாய்?'' என்று வியப்புக் கலவையிட்ட மிரட்சியுடன் வினவினர்.

''அதுமட்டுமல்ல, ஐயா! இன்னோர் ஆச்சரியகரமான காட்சியையும் பார்த்தோம். அதைத்தான் என்னால் இன்னமும் உண்மையென்று நம்ப முடியாமல் இருக்கிறது.'' — மூச்சடைக்க முணுமுணுத்தான் ஒற்றன்.

''அது என்ன, நம்ப முடியாத காட்சி? நம் ஆந்திர இளவரசி உத்தமசீலியின் உயிரற்ற உடல் அங்கே கிடக்கக் கண்டாயா?'' — துடிப்புடன் வினவினார் தளபதி வில்வேலி.

உள்ளார்ந்த வியப்போடு, கண்களை அகல விரித்த ஒற்றன், ''ஆம், பிரபு! ஆனால் ஆந்திர இளவரசியாரை உயிரற்ற உடலாகப் பார்க்கவில்லை; பிரக்ஞை இழந்த நிலையிலே பல்லவ மன்னரின் அணைப்பில் அவர் துவண்டு கிடக்கக் கண்டோம்...'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, பசித்த புலி போலப் பாய்ந்து வந்த வில்வேலி அவனுடைய தொண்டையைப் பேய்ப் பிடியாகப் பிடித்து நெரித்து, ''முட்டாள் பதரே! நம் ஜன்மப் பகைவனையும், அவனுடைய அணைப்பிலிருந்த அந்தத் துரோகிப் பெண்ணையும் ஒன்றாகப் பார்த்த அதே இடத்தில் ஒரே வெட்டாக வெட்டி நமனுலகுக்கு அனுப்பிவிட்டு அவர்களது இரத்தம் தோய்ந்த கத்தியுடன் என்னைப் பார்க்க ஓடி வந்திருக்க வேண்டியவனான நீ, வெறும் விவரங்களை மட்டும் சேகரித்துச் செண்டாக்கித் தூக்கிக் கொண்டு வந்திருக்கிறாயே! உன்னை என்ன செய்தால் தகும்?'' என்று பயங்கர உறுமலுடன் கர்ஜித்தார்.

விழி பிதுங்கத் துவண்டு பரிதாபமாக ஊளையிட்ட ஒற்றன், ''மன்னியுங்கள் பிரபு! நாங்களும் அப்படிச் செய்யத்தான் முயன்றோம். ஆனால் அந்த மூர்க்க மிருகமான யானை எங்களை எப்படியோ அடையாளம் கண்டு கொண்டு முரட்டுத்தனமாகப் பிளிறி விரட்டியது. நாங்கள் பார்த்த விவரங்களைத் தளபதியாரிடம் எடுத்து வந்து சேர்க்கும் வரையிலாவது எங்கள் உயிர் உடலில் தரிக்க வேண்டுமே என்பதற்காக அவர்களைக் கொல்லும் முயற்சியைக் கைவிட்டு விட்டுப் பின்வாங்கிக் கொண்டோம். ஆயினும் அவர்கள் எங்கே போகிறார்கள் என்பதை அறிவதற்காக என் தோழனை அவர்களுக்குப் பின்னால் மறைந்து செல்ல அனுப்பிவிட்டு நான் மட்டுமே இங்கு ஓடிவந்தேன்...'' என்று முனகிக் கொண்டே வில்வேலியின் பேய்ப் பிடியிலிருந்து நழுவி மூர்ச்சித்துச் சாய்ந்தான்.


விநயாதித்தன் வில்வேலியை முறைத்துப் பார்க்க, வில்வேலி அவனை விறைத்து நோக்கினார்.

''பார்த்தீர்களா, தளபதியாரே! நான் அநுமானித்தது நூற்றுக்கு நூறு சரியாகி விட்டது. ஆந்திர இளவரசி உத்தமசீலி இந்தப் பல்லவபுரம் இலவந்திகைப்பள்ளியில் இருந்துகொண்டு ஒரு பெரிய நாடகமே நடத்தி யிருக்கிறாள்! அவளுடைய அபாரமான நடிப்பில் நீங்கள் மட்டுமல்ல, என் தந்தையாரும்கூட ஏமாந்து விட்டிருக்கிறார்! இதற்கெல்லாம் பொறுப்பாளி நீங்கள்தான்! நீங்களேதான்!'' என்று இரைந்து கூவினான் விநயாதித்தன்.

வில்வேலி இதைக் கேட்டுக் கலகலவென்று நகைத்தார். ''ஹாம்! ஆடத்தாம், ஏமாந்துவிட்டோமாம்! இளவரசே! நாளை இரவு இதே நேரத்துக்குள் அவ்விருவரையும் பிடித்துக் கட்டி இங்கே இழுத்துக் கொண்டு வந்து சேர்க்கிறேனா, இல்லையா பாருங்கள்!'' என்று அலட்சிய ஆக்ரோஷத்துடன் முழக்கமிட்டுக் கொண்டே அங்கிருந்து மின்னலெனப் பாய்ந்து சென்று மறைந்தார் அவர்.

(தொடரும்)

ஒரு நாளைக்கு குறைந்தது
ஒரு ரூபாயாவது சேமித்து
நாட்டுத் தொண்டாற்றுங்கள்.



ஒரு செழிப்பான எதிர்காலத்திற்கு இன்றே சேமியுங்கள்.

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, அதன் 1000-க்கு மேற்பட்ட கிளை அலுவலகங்கள் மூலம், மிகப் பெரிய நகரங்கள், அதன் சுற்றுப்புற உப நகரங்கள், பட்டினங்கள், ஊராட்சி மன்றங்களின் கீழுள்ள நகரங்கள், நாட்டின் புறங்கள் ஆகியவற்றிலுள்ள இலட்சக்கணக்கான மக்களுக்கு சேவை செய்ய சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

உங்கள் சேமிப்பு நிதி அதிகமோ குறைவோ, அதுபற்றி கவலையின்றி, தங்கள் அருகாமையில் உள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் அலுவலகம் அதன் சேவையை ஏற்றுக்கொள்ளத் தங்களை அழைக்கிறது.

**ஸ்டேட் பாங்க்
ஆப் இந்தியா
இந்தியாவின்
தலைசிறந்த பாங்க்.**



பரசுராம்

மழை நிற்கும் வழியாக இல்லை. அடித்துப் பெய்துகொண்டிருந்ததனால் தெருவெல்லாம் முழங்கால் மட்டும் நீர் ஓடிக் கொண்டிருந்தது. ஒருவேளை வானமே பொத்துக்கொண்டு விட்டதோ என்னவோ என்றுகூட எண்ணத் தோன்றியது. தனது டிராயிங் ரூமில் பியானோவுக்கெதிரே கரிமா காங்குலி அதன் கட்டைகளில் பூவிதழ்கள் போன்ற தன் விரல்களை ஓட விட்டவண்ணம் உட்கார்ந்திருந்தாள்.

அவளுக்கு அருகிலேயே ஒரு சாய்வு நாற்காலியில் சடக்ராய் உட்கார்ந்திருந்தான். வீட்டுப் பொருள்களையெல்லாம் மூட்டைகளாகக் கட்டி ஒருபுறத்தில் வைத்திருந்தார்கள். ஏனெனில் கரிமாவின் தந்தைக்கு வேற்றூருக்கு மாற்றலாகிவிட்டது. பெரும்பாலான பொருள்களை முன்பே அவ்வூருக்கு அனுப்பி விட்டார்கள். அதனால் வீடு 'வெறிச்' சென்று இருந்தது.

சடக்ராய் நன்றாகப் படித்தவன். இனிய சுபாவம் படைத்தவன். பிறர் வம்பு தும்புக்குப் போகாதவன். பழகுவதற்கும் எளியவன். அவனுக்குக் கோபம் வந்து யாருமே பார்த்ததில்லை. எள்ளி நகையாடினாலும் முகம் கோண மாட்டான். கிள்ளிப் பகையாடினாலும் பேச மாட்டான். அப்படி இருப்பது தானே 'எடிகெட்' (நாகரிகம்) தெரிந்தவனுக்கு அழகு? அவன் எடிகெட் கற்று வருவதற்காகவே ஐந்தாண்டுகள் வெளிநாடு சென்று வந்தவன் என்றால் அதிகம் கூறுவானேன்?

சடக்ராய் போன்ற நல்ல மாப்பிள்ளை கிடைப்பதென்றால் அதற்கு அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டும். எனவேதான் கரிமாவின் பெற்றோர் கல்கத்தாவை விட்டுப் போவதற்கு முன்னால், வரப்போகும் தங்களது மருமகன் தனது வருங்கால மனைவியுடன் நெருங்கிப் பேசிப் பழக வேண்டும். ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணினர். தங்கள் எண்ணத்தைச் செயலாக்க வேண்டி அன்று மாலை புது மணம் புரிந்து கொள்ளப் போகும் தம்பதிகளுக்குத் தனியாகச் சந்தித்துக் கொள்ளவும், காதல் கனிமொழி பேசிக்கொள்ளவும் வழி வகை செய்து கொடுத்தனர். அதாவது அவர்களிருவரையும் தனியே சந்திக்க விட்டனர்.

ஆனால் பேச்சு சரியாக ஓட்டவில்லை; கானா ரசமும் தட்டவில்லை. கரிமா பியானோவில் தனது குயிலிசையை இணைத்துப் பதினைந்து பாடல்கள் பாடிய பின், "உங்களுக்கு அந்தப் பூரானிப் பாடலை (ஜாவளியை) இன்னுமொரு முறை பாடிக் காட்டட்டுமா?" என்று கேட்டாள்.

"வேண்டாம். நான் புறப்பட்டாக வேண்டும்!" என்று சுருக்கமாகப் பதில் அளித்தான் சடக்ராய்.

"அதற்குள் என்ன அவசரப்படுகிறீர்கள்? வெளியே இன்னும் மழை பெய்துகொண்டிருக்கிறதே! எப்படிப் போக முடியும்? மழை நிற்கட்டும். போகலாம்!" என்றாள் கரிமா சற்றுக் கோபத்துடன்.

ஆனால் சடக்ராய்க்கு இருப்புக் கொள்ளவில்லை. அமைதியாயிருந்தான். கடைசியில் இரண்டு நிமிடங்கள் கழித்து மீண்டும், "என்னதான் அடை மழை பெய்தாலும் நான் போயாக வேண்டும். இனி உட்கார்ந்திருப்பதற்கில்லை" என்றான்.

எதிர்பாராத இந்தப் பதில் கரிமாவைத் தூக்கி வாரிப் போடச் செய்தது. சடக்ராய் இப்படி வறட்டியாகப் பேசுவதற்கு என்ன காரணம் என்று அவளுக்கு விளங்கவில்லை. அவளோ திக்கித் திக்கித் தேனில் கற்கண்டை இழைத்துக் குழைத்துப் பேசுகிறாள். அவனோ கேட்கப் பிடிக்காமல் ஓடத் துடிக்கிறான். என்ன காரணமாயிருக்கும்!

கரிமா மனத்துள் சிந்திக்கலானாள்: இந்தச் சடக்ராய் ரசனையே அற்றவனாக அல்லவா தோன்றுகிறான்! இசையிலும் இவனுக்குப் பிடித்தமில்லை. இன்பம் தரும் காதல் பேச்சிலும் நாட்டமில்லை. என்ன வாழ்க்கையோ, நாசம்!

இன்றைய மாலைப் பொழுது இப்படியா போக வேண்டும்? இந்தச் சடக்ராய்க்கு இன்று என்ன வந்துவிட்டது? ஆளை விட்டால் போதும் என்பவனைப் போல் என்னிடமிருந்து தப்பி ஓடப் பார்க்கிறானே? இவ்வளவு பரபரப்புக் காட்டுகிறானே? ஏன் இப்படிப் பதறுகிறான்? என் இளமையும் கவர்ச்சியும் அவனைத் தடுத்து நிறுத்த முடியாமல் தவிக்கின்றனவே! அந்த நாசக்காரி மீனா மித்ரன் ஒரு வேளை சடக்ராயைத் தன் அழகு வலையில் கட்டிப் போட்டிருப்பாளோ? இதைக் காட்டிலும் சடக்ராயின் இந்த அவசரத்துக்கு வேறு நல்ல காரணம் இருக்கும் என்று அவளுக்குத் தோன்றவில்லை.

அதன் பிறகு, கரிமா தனது உள்ளத்து அன்பு அனைத்தையும் குரலில் காட்டி, "சரி, கொஞ்ச நேரம் தங்கிப் போங்களேன்!" என்றாள்.

ஆனால் சடக்ராய் உட்காரவில்லை. பின் கோபத்தில் நடந்தவாறே, "இல்லை, எனக்கு உத்தரவு தா. இனி என்னால் கணமும் தங்க இயலாது. வரட்டுமா? குட் நைட்!" என்றான்.

வெளியே பெரு மழை பெய்து கொண்டிருந்தது. இடை இடையே மின்னலும் வெட்டிப் பளிச்சிட்டது. எங்கும் மரண அமைதி நிலவி இருந்தது. தெருவில் வண்டி கிண்டி எதுவுமே போகவில்லை. மக்கள் தங்கள் வீட்டுக்குள் அடைந்து கிடந்தனர். ஆனால்

"மையா! ஒவ்வொரு நாளும் நீ ஏதாவது ஒரு நல்ல காரியம் செய்யப் பழகிக் கொள்ள வேண்டும். இன்றைக்கு நீ ஏதாவது நல்ல காரியம் செய்தாயா, சொல்!"

"செய்தேன், தாத்தா! கிணற்றுக்குள் விழுந்து விட்ட ஒரு பூனையைக் காப்பாற்றினேன்!"



"பேஷ்! இதோ உனக்கு வெகுமானம் அரை ரூபாய். அது சரி, பூனை கிணற்றில் விழுந்திருப்பது உனக்கு எப்படித் தெரிந்தது?"

"நான்தானே தாத்தா அதைக் கிணற்றுக்குள் போட்டேன்!"

சடக்ராயின் கார் மட்டும் நீரைக் கிழித்துக் கொண்டு கனவேகமாக ஓடிக் கொண்டிருந்தது. அதைக் காட்டிலும் வேகமாக ஓடிக் கொண்டிருந்த சடக்ராயின் மனம் பற்றி எரிந்துகொண்டிருந்தது. ஏனெனில் இன்று அவன் ஆசைகள் அனைத்திலும் மண் விழுந்து விட்டது. அவாக்கள் அனைத்தும் அவமானமாகி விட்டிருந்தன. எத்தனை எத்தனை இன்பக் கனவுகள் கண்டவண்ணம் அவன் கரீமாவைக் காண வந்திருந்தான்! ஆனால் அவன் ஆசைப் பயிரில் இப்படிப் பனி பெய்துவிட்டதே! எந்தக் கெட்ட நேரத்தில் அவன் தன் வீட்டை விட்டுக் கிளம்பினானோ, தெரியாது. கட்டிய மனக் கோட்டைகள் அனைத்தும் மண்மேடாய் மாறி விட்டன.

இத்தகைய நினைவோட்டத்தில் மூழ்கி முக்குளித்த வண்ணம் சடக்ராய் காரை ஓட்டிக் கொண்டிருந்தான். கரீமாவோ வீட்டில் உட்கார்ந்து சடக்ராயைப் பற்றிப் பலபடியாக நினைத்துப் பொருமிக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரம் கழித்துக் கரீமா சினம் கொண்ட பெண் சிங்கமெனச் சீறி எழுந்தாள். "ஹூம்! இந்த ஆண்களே இப்படித்தான். இவர்கள் காதல் எல்லாம் பொய்போக்கானது; குறுகலானது. ஆழமும் கிடையாது; அகலமும் கிடையாது. ஆண்களின் அன்பு ஒரு பெண்ணின் மட்டும் நாடி அதில் அடங்கி நிற்பதில்லை. ஆண் பின்னை ஆசை பிடித்த வண்டைபோன்றவன். மலருக்கு மலர் தாவித் தேனை அருந்தி மகிழும் வண்டுடன் போட்டி போட்டு வாழ முற்படுகிறான். ஆனால் பெண்...? அவள் அன்பின் உருவம். அவளது ஒவ்வொரு மூச்சிலும் அன்பு துடிக்கிறது. ஒவ்வொரு பேச்சிலும் அன்பு மணக்கிறது. ஒருவனுக்கு ஒரு தடவை மனத்தைக் கொடுத்துவிட்டால் அவனுக்காகத் தனதென்றிருக்கும் அனைத்தையும் அவள் தியாகம் செய்யத் தயங்குவதில்லை. ஆனால் அந்தோ பரிதாபம், ஆண்மகனின் காதல்!


ஆனால் அடுத்த கணமே சடக்ராயின் பிரிவுத் தீயில் சிக்குண்டு திக்குமுக்காடித் திணறினாள் கரீமா. அன்று சடக்ராய் நடந்து கொண்ட விதத்தைக் கண்டு அவளுக்கு அவ்வளவாகத் துயரம் ஏற்படவில்லை. ஆச்சரியம் தான் அதிகமாக ஏற்பட்டது. அவள் மீண்டும் யோசிக்கலானாள்:

இன்று திடீரென்று சடக்ராயிடம் இவ்வளவு பெரிய மாறுதல் ஏற்படுவானேன்? இந்தச் சடக்ராய்தானே ஒரு நாள் என் ஆசைகளை நிறைவேற்ற வானத் தாரகைகளைக்கூடப் பறித்துக் கொண்டு வருவதாக மார்தட்டிக் கொண்டவன்! இன்று அவன் அன்பு முற்றும் இப்படி வெளிப் பூச்சாகவா போக வேண்டும்? ஒரு நாள் அவன் பெருமிதத்துடன், "கரீமா! உலகத்தின் சக்தி எதுவானாலும் உன்னையும் என்னையும் தனியாகப் பிரித்து வைக்க முடியாது. சூரிய சந்திரர்கள் இருக்கும்வரை நீ என்னுடையவள். நான் உன்னுடையவன்!" என்று கூறிக் கனிவுடன் பூரித்தானே! அவனா இப்படி ஆகிவிட்டான்?

அவன் தன் வாக்கை நிறைவேற்றினானா? அப்பப்பா! ஆண் பிள்ளைகளின் நெஞ்சம் இவ்வளவு கல்லா? அன்பற்ற கூடா? ஆனால் சடக்ராய் அப்படிப்பட்டவனாக இன்று வரை இருக்கவில்லையே! அரிய நல்ல குணங்களும், இனிய பண்பாடும், அறிவாற்றலும் உள்ள சடக்ராய் திடீரென்று மாறிவிட்டான் என்றால்.... விளங்காத புதிராக அல்லவா இருக்கிறது! ஆண்டவனே, இதென்ன உன் சோதனையா? சடக்ராயைப் போன்ற கணவனை அடைந்து, அவன் காலடியிலே விழுந்து கிடக்க நான் என்ன பாக்கியம் செய்தேன் என்று மகிழ்ந்து கொண்டிருந்தேனே! இரவு பகல் எந்நேரமும் இன்பக்கடல் ஆடலாம் என்று கனவு கண்டு கொண்டிருந்தேனே! அவையெல்லாம் இப்படியா கலையவேண்டும்? பட்டுக் கூடாகச் சிதற வேண்டும்? ஆசைக் கனவுகள் அனைத்தும் அவமானமான பின் வாழ்ந்தென்ன பயன்? இப்படி வாழ்வதைக் காட்டிலும் சாவது எவ்வளவோ மேல் அல்லவா?

இப்படி எண்ணி எண்ணிக் கரீமா மாய்ந்தாள். மருகினாள். அழுதாள். புலம்பினாள். அவளுக்கு திடீரென சிரமமாகப் பட்டது: பூமியே தட்டாமாலை சுற்றுவது போலத் தோன்றியது. அடுத்த கணம், கரீமா அப்படியே சாய்வு நாற்காலியில் தொப்பென்று விழுந்தாள். அதில்தான் சிறிது நேரத்துக்கு முன்பு சடக்ராய் உட்கார்ந்திருந்தான். அவளது படபடப்பு அதிகமாயிற்று. விக்கலும் விம்மலும் வளர்ந்தன. 'எத்தனை நேரம் இவை நீடிக்குமோ?' என்று எண்ணும் வேளையில், அவள் சட்டென்று விம்மலை நிறுத்திக் துள்ளிக் குதித்து எழுந்தாள். அவளது கயல் விழிகளில், அன்பும் துயரமும் பெருகவிட்டிருந்த கண்ணீர் சட்டென்று வறண்டது. அவளது உள்ளத் துடிப்பு சாதாரண நிலையை அடைந்தது. சிறிது நேரத்துக்குமுன், சடக்ராய் காட்டிய அலட்சியபாவம் அவள் மனத்தை அலட்டி எடுத்து விட்டதல்லவா? அது இப்பொழுது 'ஆனந்தத் திருக்காட்சி'யாக மாறிவிட்டது. ஏனெனில் சடக்ராய் சட்டென்று ஓடியதன் அந்தரங்க ரகசியம் என்ன என்பது அவளுக்கு நொடியில் விளங்கி விட்டது. அந்த ரகசியம் என்ன, தெரியுமா? அவன் உட்கார்ந்திருந்த சாய்வு நாற்காலியில் எண்ணி மாளாத மூட்டைப் பூச்சிகள் இருந்ததுவேயாகும்!

—அனுபம்



ஹ்யூலெட்ஸ் மிக்சர்



அஜீரணத்தை விரைவில் அகற்றுகிறது

கட்டிப்போட்டாற்போல், ஒரே இடத்தில் அமர்ந்தவாறே உங்கள் அலுவல்களைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் உங்கள் வேலை அப்படியானது. இக்காரணத்தினால் உங்களைப் போன்றவர்கள் அடிக்கடி அஜீரணத்தினால் அவஸ்தைப்பட நேரிடுகிறது. ஆனால் நீங்கள் அவ்வாறு கஷ்டப்படத் தேவையில்லை. ஹ்யூலெட்ஸ் மிக்சர் வயிற்று உபாதைகளை விரைவில் போக்கி, நிரந்தரமாக குணமளிக்கிறது; வலியுண்டாக்கும் அமிலங்களை அகற்றி, ஜீரண கோசத்திற்கு அதன் வேலையை சரிவர செய்வதற்கேற்ப பாதுகாப்பளிக்கிறது.

ஹ்யூலெட்ஸ் மிக்சர் குழந்தைகளின் வயிற்றுக் கோளாறுகளுக்கும் கூட உத்தமமானது. வயிற்றுப் போக்குக்கு அபினி சேர்ந்த ஹ்யூலெட்ஸ் மிக்சர் குணமளிக்கும்.


ஹ்யூலெட்ஸ் மிக்சர் ஜீரணத்திற்குச் சிறந்தது

C. J. ஹ்யூலெட் & ஸன் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
86/A, லைனியப்ப நாயக் தெரு, மதராஸ்-3

[WT/CJH/1929]

வேரூள் குஸ்ருணேஸ்வரர்

தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்




இராமாயணத்தில் சுந்தரகாண்டம் மிகவும் சுவையானது. இலங்கையில் அசோகவனத்தில் சிறையிருந்த சீதையைக் கண்டு விட்டுத் திரும்பி வருகிறான் அனுமன், கிஷ்கிந்தைக்கு. அங்கு வந்து ராமனிடம் தான் சீதையைக் கண்டு வந்த செய்தியைத் தெரிவிக்கிறான். ராமனது மனைவி என்னும் உரிமைக்கும், தசரதனது மருமகள் என்ற பெருமைக்கும், ஜனக மகாராஜனின் மகள் என்ற தகைமைக்கும் ஏற்றவளாகச் சீதை சிறையிருக்கிறாள் என்று சொன்ன அனுமன் அவளைத் தன் பெருந் தெய்வம் என்றே குறிப்பிடுகிறான். இப்படி அவளைத் தெய்வம் என்று அனுமன் வாயிலாகப் பாராட்டிய கம்பனுக்கு, அத் தெய்வத்துக்கு ஒரு கோயில் கட்டிப் பார்க்க வேண்டும் என்றே தோன்றியிருக்கிறது. அதனால் மேலும் பாடுகிறான்.

வேலையுள் இலங்கை என்னும்
விரிநகர் ஒருசார் விண்தோய்
காலையும் மாலைதானும் இல்லது
ஓர் கனகக் கற்பச்
சோலை அங்கு அதனுள் உம்பி
புல்லினால் தொடுத்த தூய
சாலையுள் இருந்தாள் ஐய
தவம் செய்த தவம் ஆம்தையல்

என்பது அவனது பாட்டு. இப்பாட்டை ராஜராஜன் கேட்டிருக்கிறான், தஞ்சையில் பெருவுடையாருக்குக் கோயில் எடுப்பிக்க முனைந்த போது. ஆகவே முதலில் ஓர் அகழி, அகழிக்குள் ஒரு மதில், மதிலுக்குள் ஒரு பிராகாரம், அந்தப் பிராகாரத்துக்குள் ஒரு மண்டபம், அந்த மண்டபத்துக்குள் ஒரு கருவறை என்று அமைத்து அக்கருவறையில் பெருவுடையாரைப் பிரதிஷ்டை செய்து விடுகிறான். அதனால் அந்தப் பெரிய கோயில் ஒரு கலைக் கோயிலாகவே நின்று நிலவுகிறது இன்று வரை. இதைப் போல் நீண்டு நிமிர்ந்த பெருங் கோயில் வேறு எங்காவது இருக்கிறதா என்று பல இடங்களில் நான் சுற்றியதுண்டு. இப்படி நான் கலை தேடும் கோயில் யாத்திரை செய்த போது ஓர் இடத்தில் ஒரு கோயிலைக் கண்டு அப்படியே அதிசயித்து நின்றிருக்கிறேன். அக் கோயில், அக்கோயிலின் விமானம் எல்லாம் தஞ்சை பெரிய கோயிலைப் போலவே இருக்கக் கண்டேன். தஞ்சை பெரிய கோயிலில் உள்ள தட்சிணமேருவாம் விமானத்தைப் போல் இருநூற்றுப் பதினாறு அடி உயரம் அவ்விமானம் உயர்ந்திருக்க வில்லை என்றாலும் அமைப்பில் பெரிய கோயிலைப் போலவே அமைந்திருப்பதைக் கண்டு, அப்படியே அதிசயித்து நின்றிருக்கிறேன். அந்தக் கோயில்தான் பிரசித்திபெற்ற எல்லோராவை அடுத்த வேரூள் என்னும் கிராமத்தில் இருக்கும் குஸ்ருணேஸ்வரர் கோயில்.

சரிதான்; சென்ற வாரம் எல்லோராவில் கைலாச நாதர் குடைவரையை மட்டும் காட்டி விட்டு, மற்றக் குடைவரைகளை விட்டு விட்டேன் என்கிறீர்களா? அதற்குள் என்ன அனுமனைப் போல் வேரூள் நகரத்துக்குத் தாவுகிறீர் என்றுதானே கேட்கிறீர்கள்? தப்புத்தான். முதலில் உங்களை எல்லோராவில் உள்ள மற்றக் குடைவரைகளுக்கு அழைத்துச் சென்று விட்டு, அதன் பின்னரே குஸ்ருணேஸ்வரர் கோயிலுக்கு அழைத்துச் செல்லத் திட்டம்.


எல்லோராவில் மொத்தம் முப்பத்து நாலு குடைவரைகள் என்றேனே, ஞாபகம் இருக்கிறதல்லவா? இந்த முப்பத்து நாலு குடைவரைகளும், ஓர் அர்த்த சந்திர வடிவாய் அமைந்த மலையிலே குடைந்து அமைக்கப் பட்டவைதாம். எல்லாக் குடைவரைகளும் மேற்கு நோக்கிய வண்ணமாகவே அமைந்திருக்கின்றன. இவைகளுக்கு நடு நாயகமாய் மத்தியில் அமைந்திருப்பதுதான், கயிலாய நாதர் கோயில். அதனைப் பதினாறாவது குடைவரை என்று கணக்கு எடுத்திருக்கின்றனர். அதனால் அதற்கு இடப்புறமாகப் பதினைந்து குடைவரைகள். இதில் பன்னிரண்டு குடைவரைகள் பௌத்த சமயச் சார்புடையவை. இவைதாம் எல்லோராக் குடைவரைகளில் காலத்தால் முந்தியவை. அவை எல்லாம் கி. பி. நான்காம் நூற்றாண்டிலிருந்து ஏழாம் நூற்றாண்டுக்குள் உருவாகி இருக்க வேண்டும் என்று கருதுகின்றனர், கலைவிமர்சகர்கள். பௌத்த சமயத்தில் ஹீனயான பௌத்தம், மகாயான பௌத்தம் என்று இரண்டு பிரிவு உண்டு. ஹீனயான பௌத்தத்தில் புத்தரை வடிவமாக அமைத்து வழிபாடு செய்வதை அனுமதிக்கவில்லை. மகாயான பௌத்தம் தோன்றிய பின்னரே, புத்தரது வடிவங்களை உருவாக்கி வழிபாடு நடத்தியிருக்கின்றனர். எல்லோராவில் உள்ள குடைவரைகளில் பல மகாயான பௌத்த காலத்தைச் சேர்ந்தவை தாம். இந்தப் பன்னிரண்டு குடைவரைகளும் கிட்டத்தட்ட ஒன்றுபோலவே அமைந்தவை. ஆதலால் உங்களை அத்தனை குடைவரைகளுக்கும் இழுத்தடிக்கப் போவதில்லை. இக்குடைவரைகளில் எல்லாம் சிறப்பானது, பத்தாவது



இந்திரசபா வாயில்


குடைவரையே; அதனையே விசுவ கர்ம சைத்தியம் என்கின்றனர். இச்சைத்தியத்தின் வாயிலிலே பிரமாதமான அழகுடன் சிற்பி செதுக்கியிருக்கிறான். அதனைப் பார்த்தால் ஏதோ மரத்தில் செய்து ஒன்றுபடுத்தி வைத்திருக்கும் வேலைதானோ என்று தோன்றும். கல்லில் அதுவும், ஒரு பெரிய மலையைக் குடைந்து அமைத்திருக்கிறார்கள் என்று எண்ணவே முடியாது. அந்த அழகிய சைத்தியம் 26 அடி அகலமும் 85 அடி நீளமும் 34 அடி உயரமும் உள்ள குடைவரை. அதன் கூரை ஐம்பது அடி உயரத்தில் கறுப்பிரண்ட ஆகிருதி உடையது. இச்சைத்தியத்துக்குள்ளே மத்திய பாகத்தில் 16 அடி உயரத்தில் ஒரு ஸ்தூபம். அந்த ஸ்தூபத்துக்கு முன்னால் பன்னிரண்டு அடி உயரத்தில் ஒரு புத்த விக்கிரகம். உட்கார்ந்திருக்கும் பாணியில் அதனை உருவாக்கியிருக்கிறான் சிற்பி. போதி மரத்தடியில் ஞானோதயம் பெற்ற நிலையில் புத்த பகவான் அங்கேயிருந்து நமக்குக் காட்சி தருகிறார். விதானங்களில் எல்லாம் கந்தருவர்களும், வித்யாதரர்களும் அந்தச் சைத்தியத்தின் நின்று கொண்டு மெதுவாகப் 'புத்தம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி, தருமம் சரணம் கச்சாமி' என்று சொன்னால் அந்த ஒலி எதிரொலித்து நம் காதுகளை மாத்திரம் அல்ல, நமது உள்ளத்தையே பரவசப் படுத்தும். அங்குள்ள புத்த பகவானுக்கு, நம் வணக்கத்தைச் செலுத்திவிட்டு வெளியே வந்து, மேல் நடக்கலாம். 34 குடைவரைகளில் இரண்டைத்தானே பார்த்திருக்கிறோம். இன்னும் எத்தனை குடைவரைகள் காண வேண்டும் என்று உங்கள் உள்ளம் துடிப்பதை அறிவேன். மற்றக் குடைவரைகளைச் சென்று காண வேண்டும் என்பதில்லை. நாம் முன்னர் பார்த்த, 16-வது 10வது குடைவரைகளைப் பார்த்தது போல் 21வது, 29வது 32-வது குடைவரைகளை மட்டும் பார்த்தால் போதும். இவைகளில் 21-ம் 29-ம் இந்து சமயச் சார்புடையவை. 30 முதல் 34வரை ஐந்து குடைவரைகள் சமண மதச் சார்புடையவை. 21வது குடைவரையை ராவணேசுவரன் குடைவரை என்பார்கள். அட, இது என்ன, இந்த ராவணன் நாம் செல்லும் இடங்களுக்கு எல்லாம் தொடர்ந்து வருகிறானே என்று எண்ணுவோம். இங்கும் ராவணன் கயிலையைப் பெயர்த்து எடுக்கும் காட்சி செதுக்கப்பட்டிருக்கிறது. பார்வதி பயந்தால் மருண்டு பரமசிவனைத் தழுவிக் கொள்வதும், அவளது சேடி வெருண்டு ஓடுவதும் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. இக்குடைவரை வாயிலிலேயே வடக்குச் சுவரில் கங்கை உருவாகியிருக்கிறாள். காணும் ஆடவர் உள்ளத்தை யெல்லாம் கொள்ளை கொள்ளும் அளவில் கவர்ச்சியான உடற்கட்டுடன் நிற்கிறாள்.

இதோடு இந்தக் குடைவரை உள்ளே பார்வதி பரமேசுவரன் திருமணக் கோலமும் உருவாகியிருக்கிறது. இங்குள்ள ஆடவரும் பெண்டிரும் அணிந்திருக்கும் அணிகளும் பணிகளும், ஆடைகளும், கிரீடங்களும் அழகாக இருக்கின்றன. 14 காரட் தங்கத்தில் நகை செய்யும் பொற்கொல்லர்களெல்லாம் இங்கு போய்ப் பயிற்சி பெற்று வரலாம். 29வது குடைவரையைத்தான் சீதாநாஹினி என்கின்றனர். அதாவது சீதை குளித்த இடம் என்று நம் தமிழில் சொல்லலாம். சீதை இங்கு ஓடும் ஏலா நதியில் குளித்தாள் என்று கதை. ஏலாநதி ஓடும் எல்லபுரா என்ற கிராமத்தின் பெயர்தானே எல்லோரா என்று திரிந்திருக்கிறது. இக்குடைவரைக்குத் தென்பக்கத்திலேயே அந்த ஏலா நதி ஓடுகிறது. நான் போனபோது அங்கு தண்ணீரே இல்லை. நீரில்லா ஆறு தமிழ் நாட்டின் பாலாறு மாத்திரம் அல்ல, இந்த ஏலாறும் கூடத்தான் என்று அறிவதிலே நமக்கு ஒரு திருப்தி. இங்குள்ள குடை வரையில் சிவ பார்வதி கோலம் மிக்க அழகாக இருக்கிறது. தாமரைத் தடத்துப் இடைபுகாதனம் என்றெல்லாம் காளிதாஸன் வர்ணிக்கிறானே, அத்தகைய பெண்கள் இங்கே வந்து உருப் பெற்று நிற்கிறார்களோ என்று தோன்றும். இவர்களையே நின்று பார்த்துக் கொண்டிருந்தால் போதுமா? 32வது சமணக்குடைவரையையும் காண வேண்டாமா? ஆதலால் வெளியே வந்து 32-வது குடைவரைக்குள் நுழையலாம். இக்குடைவரை இரண்டு அடுக்கு மாடியுடன் கூடியது என்பதால் கட்டப்பட்டது என்று எண்ணி விடாதீர்கள்; மலையைக் குடைந்து இரண்டு அடுக்கு மாடிகளாகவே அமைத்திருக்கிறார்கள். இங்குள்ள மேல்மாடியை இந்திரசபா என்கின்றனர். இதுவும் இருநூறு அடி தூரம் மலையைக் குடைந்து அமைத்த குடைவரைதான். கீழ்த்தளத்தில் மகாவீரர் சமண தீர்த்தங்கரர்கள் எல்லாம் இருக்கின்றனர். எல்லோரும் நிர்வாண வடிவிலேயே இருக்கின்றனர். மகாவீரர் தியான முத்திரையோடு இருக்கும் கோலம் அழகு வாய்ந்தது. மாடி ஏறினால் ஒரு பெரிய மண்டபம் இருக்கிறது. அம்மண்டபத்தைப் பன்னிரண்டு தூண்கள் தாங்கி நிற்கின்றன. அம்மண்டபத்தைச் சுற்றிலே 24 தீர்த்தங்கரர்களின் வடிவங்கள் உருவாகி


tik-20
டிக்-20
மூட்டைப்பூச்சிகளைக்
கொல்லுகிறது
Geigy


முகப்
பருக்களை
லிச்சென்ஸா
போக்கும்
● 108 நாடுகளிலுள்ள
டாக்டர்களால்
குறிப்பிடப்படும் மருந்து
● பிரபலமான எல்லா
கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்


எழுதுவதில்
கவர்ச்சியும்
இன்பமும்
பெறுவதற்கு
Iris
INKS
ஐரிஸ் இங்குகள்
5 மங்காத
நிறங்களில்
PERMANENT ROYAL BLUE
RECHLABS
Iris
INK
ரிஸர்ச் கெமிகல் லாபரட்ரீஸ்
லாட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, சென்னை-20
550, எட்டாவது மெயின் ரோடு,
மல்லேஸ்வரம், பெங்களூர்-12


தனிப்பட்ட
சிறப்புக்கு
கைக்கொடுக்கிறது
மபத்லால்
க்ரூப்
பாப்லின்கள்
ஷர்ட்டிங்குகள்
MAFATLAL GROUP
மபத்லால் க்ரூப்
நியூ ஷோராக் (ஷோராக்) அஹமதாபாத் • நியூ ஷோராக், நடியாத் • ஸ்டேண்டர்ட், பம்பாய் • ஸ்டேண்டர்ட் (நியூ சைனா) பம்பாய் • ஸ்டேண்டர்ட், தேவாஸ் • ஸாஸுன், பம்பாய் • ஸாஸுன் (நியூ யூனியன்) பம்பாய் • ஸுரத், காட்டன் ஸுரத் • மபத்லால் பைன், நவ்ஸாரி.

இருக்கின்றன: மகா வீரரது வடிவமும் இரண்டு இடத்தில் உருவாகி யிருக்கிறது: அம்மண்டபத்தில்தான் இந்திரன் கொலு விருக்கிறான். அவன் காலடியில் ஐராவதம் படுத்துக் கிடக்கிறது. இந்த இந்திர சபாவே, எல்லோராவில் உள்ள குடைவரைகளில் எல்லாம் கலை அழகு நிரம்பியது என்றும் சிலர் கருதுகின்றனர். இந்திர சபாவை ஒட்டியே இன்னொரு சமணக் குடைவரை. அது அளவில் சிறியது. அதனையே ஜகந்நாத சபை என்கின்றனர். அங்கும் மகாவீரர், பார்சுவநாதர் முதலியோர் உருவாகி யிருக்கின்றனர்; எல்லாம் கம்பீரமான வடிவத்தில்.

எல்லோராவில் சிற்பக் கலையின் சொரூபத்திலேயே அல்லவா இவ்வளவு நேரம் நின்றிருக்கிறோம் என்ற மனத் திருப்தியோடு, மேற்கு நோக்கி ஒரு மைல் சென்றால் வேருள் என்னும் கிராமம் வந்து சேரலாம். அங்கு முன்னமேயே நான் குறித்தேனே, அந்தக் குஸ்ருணேஸ்வரர் கோயிலுக்கு வந்து சேரலாம். 'அது என்ன குஸ்ருணேஸ்வரர், வாயில் நுழைய மாட்டேனென்கிறதே என்கிறீர்களா? குஸ்ருணம் என்றால், மகாராஷ்டிர பாஷையில் குங்குமம் என்று பொருளாம். அன்று பார்வதி குங்குமத்தையே பிடித்து வைத்து, அதனை லிங்கமாக்கி, பூசை செய்திருக்கிறாள். அதனால் அங்கு கோயில் கொண்டுள்ள மூர்த்தி குஸ்ருணேஸ்வரர் என்று பெயர் பெற்றிருக்கிறார். பெயருக்கேற்ப அங்கு குங்கும வடிவத்திலேயே இன்றும் இருக்கிறார். அவர் இந்தியாவில் உள்ள பன்னிரண்டு சோதிர் லிங்கங்களில் ஒருவர் என்று கணக்கிடப்படுகிறார். அவர் மட்டுமே இங்கு குங்கும வர்ணத்தில் இல்லை, கோயில், கோயில் கட்டிய கல் எல்லாமே நல்ல சிவப்பு வர்ணத்திலேயே இருக்கின்றன. இக்கோயிலின் முன் மண்டபத்தைச் சிற்ப வேலைகள் அமைந்த தூண்கள் தாங்கி நிற்கின்றன. உருவ அமைப்பிலே தஞ்சை பெரிய கோயிலைப்போல் இருப்பதாகச்சொன்னேன். இங்குள்ள தூண்களில் செய்திருக்கும் சிற்ப வடிவங்களைச் சாதாரணமாகத் தேக்கு மரத்தில்கூடச் செய்ய முடியாது என்றே தோன்றுகிறது. ஆதியில் இக்கோயிலைச் சதாமரது மனைவி பக்த இருஷ்ணுபாய் கட்டியிருக்கிறாள். ஆதலால் இக்கோயிலைக் கிருஷ்ணு சுவர்க்க மந்திர் என்றே அந்த வட்டாரத்தில் அழைக்கின்றனர்: பின்னர் இக்கோயிலை இந்தோர் ராணி அகல்யா பாய் என்பவர் புதுப்பித்திருக்கிறார்கள். குஸ்ருணேஸ்வரரே மூலவர். அவரது கருவறையிலே பின்புறச் சுவரிலே பார்வதியின் வடிவு இருக்கிறது. அவளுக்கு என்று தனிக் கோயில் ஒன்றும் இல்லை. இக்கோயிலுக்கு இரண்டு துவஜஸ்தம்பங்கள் இருக்கின்றன. இந்தச் சோதிர்லிங்க தரிசனம் செய்துவிட்டு மேற்கில் ஒரு பர்லாங்நடந்தால் சிறு கோயில் இருக்கிறது. அங்கு கஜானன மூர்த்தி பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறார்.

வந்ததோ வந்தோம். இன்னும் கொஞ்சம் காலை எட்டிப் போட்டுப் பரளிக்கும் சென்று வந்துவிடலாமே. அங்கும் ஒரு சோதிர்லிங்கம் உண்டு என்று படித்திருக்கிறோமே. ரயிலில் சென்றால் பார்ப்பறனி ஸ்டேஷனில் இறங்கிப் பரளி செல்ல வேண்டும். காரிலேயே சென்றால் தௌலதாபாத் வழியாகச் செல்லலாம். அங்கும் ஓர் அழகான கோயில். கோயில் கட்டடத்தில் மர வேலைகள் அதிகம். அக்கோயிலின் சபா மண்டபத்தில் பனை மரம் அளவு உயர்ந்த தூண்களெல்லாம் மரத்தால் ஆனவை. இரண்டு பேரால் கட்டிப் பிடிக்க முடியாத அளவுக்குப் பெரிய காத்திரம் உடையவை. இங்குள்ள சோதிர்லிங்கத்தைப் பற்றி ஒரு வரலாறு. கைலை மலையை அசைத்த இராவணன் சாம கானம் பாடி விடுதலை பெற்றான் என்று தெரியும். அவனது இசையில் மயங்கிய இறைவன் அவனுக்கு ஓர் ஆத்ம லிங்கத்தைப் பரிசளிக்கிறான். அதைத் தலையின் மேல் தாங்கியே நடக்கிறான் ராவணன். அதன் கனத்தை அவனால் தாங்க முடியவில்லை. இறைவனிடமே அதனை எடுத்துச் செல்ல ஆள் கேட்கிறான். அவரும் அந்த லிங்கத்தை இருகூறாக்கி அவற்றை ஒரு காவடியில் வைத்து எடுத்துச் செல்லச் சொல்கிறார். அப்படி எடுத்துச் சென்றவன் தாகத்துக்குத் தண்ணீர் குடிக்கக் காவடியைத் தன்னை அடுத்து நின்ற ஒரு பிராமணச் சிறுவனிடம் கொடுக்கிறான். அந்தப் பிராமணச் சிறுவனோ, வேறு யாருமில்லை, பிள்ளையார்தான். பிள்ளையார் காவடியை வாங்கி அங்கேயே பூமியில் இறக்கி வைத்து விடுகிறார். பூமியில் தங்கிய இறைவன் அங்கேயே வேரூன்றி நின்று விடுகிறான். அப்படித்தான், இந்தச் சோதிர் லிங்கர் அங்கே நிலை பெற்றிருக்கிறார்.

எழுத்தும் தொழிலும்



பல வருஷங்களுக்கு முன் ஒரு வைஷ்ணவர் வீட்டில் நான் சங்கீதம் கற்பித்துக் கொண்டிருந்தேன்.

ஒரு நாள் பாடம் நடந்து கொண்டிருக்கையில் அந்த மாணவியின் தாத்தா வெகு வேகமாக அங்கு வந்தார். ''கொஞ்சம் நிறுத்தும்'' என்றார்.

திகைப்புடன் பாடத்தை நிறுத்தினேன்.

''ஓய்! நாரணன் நான்முகனைப் படைத்தான்! நான்முகன் சிவனைப் படைத்தான்! தெரியுமா?'' என்றார்.

அவர் குரலிலிருந்த ஆவேசத்தையும் அழுத்தத்தையும் பார்த்தால் அந்தப் படைப்புக்களை அவர் நேரில் பார்த்திருக்க வேண்டும் என்று எண்ணும்படியிருந்தது!

''அப்படியா! அவ்வளவு பெரிய விஷயங்களெல்லாம் எனக்கு எப்படித் தெரியும்?'' என்றேன், அவருடைய சினத்தின் காரணம் புரியாமல்.

''உங்கள் சிவனை விட எங்கள் பெருமாள் எவ்வளவோ உயர்ந்தவர்!'' என்றார் அவர்.

விஷ்ணுவுக்கு 'ஜோல் ரைட்' பெற்றிருப்பவர் போல் பேசினாலும் சிவனையாவது விட்டுக் கொடுக்கிறாரே நமக்கு, என்ற ஆறுதலுடன் ''இருக்கட்டுமே! நான் ஆட்சேபிக்க வில்லையே?'' என்றேன்.

''பின்னே ஏன் ஐயா எங்கள் பெருமாள் உங்கள் சிவனைப் பணிந்ததாகப் பாடுகிறீர்?'' என்றார் அவர்.

அப்போதுதான் எனக்கு விஷயம் கொஞ்சம் புரிந்தது. பாபநாசம் சிவன் அவர்களின் 'சிதம்பரம் என' என்ற கீர்த்தனையை நான் அப்போது அவருடைய பேத்திக்குக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தேன். அதன் சரணத்தில் 'ஸ்ரீகாந்தனும் ஸரஸ்வதி காந்தனும் பணிய' என்ற அடி வருகிறது. அந்த வீர வைஷ்ணவப் பெரியவரின் கோபத்துக்கு அதுதான் காரணம்.

''அதற்கு நான் பொறுப்பில்லை ஸார்! கீர்த்தனையை இயற்றியவன் நான் இல்லை! ஸாஹித்யகர்த்தாவும் விஷயம் தெரியாதவர் இல்லை. விஷ்ணுவைத் தாழ்த்த வேண்டும் என்னும் நோக்கத்துடன் அவர் அவ்வாறு பாடியிருக்க மாட்டார் என்பதும் நிச்சயம்!'' என்று கூறினேன். அவர் சமாதானம் அடையவில்லை.

''ஸார்! இந்த மாதிரிப் பாட்டெல்லாம் இனி சொல்லிக் கொடுக்க வேண்டாம். ப்ளீஸ் டோண்ட் மிஸ்டேக் மீ!'' என்று கூறி விட்டு அப்பால் போய் விட்டார்.

இத்தனைக்கும் அவர் கலாசாலைப் படிப்புப் படித்து இரண்டு பட்டங்கள் வாங்கியவர்!

'நம் மைத்துனருக்கு வக்காலத்து வாங்குவதற்குப் பக்தர்கள் இருப்பதுபோல் நமக்கு ஒருவரு மில்லையே!' என்று சிவபெருமான் வருத்தப்பட்டிருப்பாரோ என்னவோ! அவர் கட்சியை எடுத்துப் பேச முன் வந்தார் அதிதீவிர வீர சைவர் ஒருவர்! முன் சொன்ன சம்பவம் நடந்த சில மாதங்களுக்குள்ளேயே இதுவும் நடந்தால் நான் வேறு எப்படி எண்ண முடியும்?

அந்தச் சிவபக்த சிரோன்மணியின் பெண்ணுக்கு அப்போது 'அநாதுடனுகானு' என்ற தியாகராஜ கீர்த்தனம் பாடம் ஆகிக் கொண்டிருந்தது. அதன் கடைசியில் 'புராரிபூஜித நாகராட்சயன' என்ற சொற்கள் வருகின்றன. அதன் அர்த்தம் என்னவென்று அவர் என்னைக் கேட்டார். ''புரம் எரித்த சிவனால் வணங்கப்பட்ட சேஷசயனனான விஷ்ணுவே!' என்று அர்த்தம்'' என்றேன்.

''பரமேசுவரன் விஷ்ணுவை வணங்குவதாவது! அபசாரம்! அபசாரம்!'' என்று பதறினார் அந்த மனிதர்.

''தியாகய்யரைப் போன்ற மகான் அபசாரமான காரியத்தைச் செய்திருப்பாரா? சிவன், விஷ்ணு என்பவையெல்லாம் ஒரே பரம்பொருளின் பலவகை ரூபங்கள்தான் என்று அவர் கருதியிருக்கிறார். இல்லாவிட்டால் பரம ராம பக்தராகிய அவரே 'தேவாதி தேவ ஸதாசிவ' என்ற கீர்த்தனத்தில் 'ஸ்ரீசனுத' (லட்சுமீ பதியால் வணங்கப்பட்டவனே) என்று சிவனை ஏற்றியிருப்பாரா?'' என்றேன்.

''இது வாஸ்தவம். [illegible] சிவனை வணங்கியதற்கு [illegible] திரத்தில் ஆதாரங்கள் இல்லை'' என்றார் அவர்.

''இப்படி நீங்கள் பேதம் திருஷ்டியுடன் பார்த்தீர்களானால் தியாகய்யரவர்கள் ராமன் மேல் பாடியிருக்கும் அற்புதமான கீர்த்தனங்களை உங்கள் பெண்ணுக்குக் கற்றுக் கொடுக்க முடியா

சிஷ்யையை டானிக் சாப்பிட வைக்க வேண்டும். சிவபெருமானுக்கு வக்காலத்து வாங்க வேண்டும்! பாட்டு வாத்தியார் பாடு திண்டாட்டம் தான்!

எஸ். வைத்தியநாதன்

மல் போய்விடுமே! அந்த மகத்தான நஷ்டத்துக்குத் தயாரா நீங்கள்?'' என்றேன்.

அவர் சற்று யோசித்துவிட்டு, ''அவை அடியோடு வேண்டாம் என்று சொல்லவில்லை நான்! சிவன் விஷ்ணுவை வணங்கியதாக வரும் கீர்த்தனைகள்தாம் வேண்டாம் என்றேன். மற்றபடி விஷ்ணுபரமான கீர்த்தனைகளைக் கற்றுத் தருவதைப் பற்றி எனக்கு ஆட்சேபனை இல்லை!'' என்று கொஞ்சம் இறங்கிச் சமரஸத்துக்கு வந்தார்!

ஒரு சிறுமிக்கு 'ஸரா நாபை' என்ற தோடி ராக வர்ணத்தைப் பயிற்றுவித்துக்கொண்டிருக்கையில் ஒரு நாள் அவள் ''ஸார்! நீங்க சொல்லிக் கொடுக்கிறது தப்பு!'' என்றாள். குருவுக்கு மிஞ்சின அந்த சிஷ்யையைக் கண்டு எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ''என்ன தப்பு? யார் சொன்னார்கள்?'' என்றேன்.

''இந்த வர்ணத்தின் சரணம் 'நானி னாடது வினி இந்த ஸாரஸ மேலரா?' என்று இருக்கணுமாமே! அம்மா சொன்னாள். நீங்க 'ஸாஹஸமேலரா' என்று சொல்லிக் கொடுக்கிறீர்களே!'' என்றாள்.

இதற்குள் அந்தப் பெண்ணின் தாயார் உள்ளேயிருந்து வந்தவள் ''நான்தான் சொன்னேன். 'ஸாரஸ மேலரா' என்று



நான் நான் பாட்டு கற்றுக் கொள்ளும் போது எங்கள் வாத்தியார் சொல்லிக் கொடுத்தார்!'' என்றாள்.

''அது தவறு அம்மா! 'ஸாஹஸமேலரா என்றால் 'ஸாஹஸம் என்டா பண்ணுகிறாய்' என்று அர்த்தம். ஸாரஸம் என்றால் தாமரை. 'ஸாரஸமேலரா' என்றால் 'தாமரை ஏன்டா?' என்றல்லவா ஆகும்? அதில் ஏதாவது பொருத்தம் இருக்கிறதா பாருங்கள்!'' என்றேன்.

''பின்னே எங்க வாத்தியார் தப்பாகவா சொல்லிக் கொடுத்திருப்பார்?'' என்றாள் அந்த அம்மாள்.

''வாத்தியார் சரியாகத்தான் சொல்லிக் கொடுத்திருப்பார். நீங்கள் சங்கீதம் கற்றுக் கொண்டு எவ்வளவோ வருஷங்கள் ஆகிறதல்லவா? உங்களுக்கு மறந்து போயிருக்கலாம்!'' என்று சொல்லிச் சமாளித்தேன்.

நான் சொன்னதை ஏற்றுக் கொண்டாளோ, அல்லது மேலும் அதைப் பற்றித் தர்க்கிக்க இஷ்டப்படவில்லையோ, அந்த அம்மணி மேலும் விவாதம் செய்யாமல் உள்ளே சென்றாள்;

நான் பாட்டு சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த வீடு ஒன்றுக்கு, அவ்வீட்டாரின் உறவினர் ஒருவர் வெளியூரிலிருந்து வந்திருந்தார் குடும்பத்துடன்.

அன்று நான் பாடம் நடத்துகையில் ஆரம்பத்திலிருந்து அருகிலேயே அமர்ந்திருந்தார் அவர். ரொம்பவும் ரஸிகராக்கும் என்று எண்ணிக் கொண்டேன் நான். பிறகுதான் சமாசாரம் வெளியாயிற்று.

பாடம் முடியும் தருவாயில் உள்ளேயிருந்த தம் பெண்ணை என்னவோ பேர் சொல்லி அழைத்தார் அவர். அந்தப் பெண் வந்தது.

''என் பெண் ஸார்!'' என்று அதை அறிமுகப்படுத்தி விட்டு, ''ஐந்து வயசுதான் ஆகிறது! இப்பவே என்ன ஞானம் என்கிறீர்கள்! ரேடியோவில் கேட்டே எத்தனை பாட்டு பாடுகிறாள் தெரியுமோ?'' என்றார்.

''அப்படியா!'' என்றேன்.

''ஆமாம் ஸார்ன்னு! நீங்கள் கேட்டு விட்டுச் சொல்லுங்கள்!'' என்றவர், ''கண்ணு! உட்கார்ந்து ஸாருக்குப் பாடிக் காட்டு!'' என்று பெண்ணிடம் கூறினார்.

அச்சிறுமி உட்கார்ந்து ஆரம்பித்தது.

''ததிப நாவ தோ தநி, தங்கநி, பாயிமா!''

மேற்படி பாட்டு என்ன பாஷை, கிரீக்கா, லாட்டினா என்று ஒன்றுமே புரியவில்லை. மிகச் சிரமப்பட்டு 'ஸரஸிஜநாப ஸோதரி! சங்கரி! பாஹிமாம்!' என்ற கீர்த்தனை என்பதைக் கண்டு பிடித்தேன். வார்த்தைகள் போகட்டும், அதில் சங்கீத அம்சமாவது இருந்ததா என்றால் அதுவும் சிறிதளவும் இல்லை. ஏதோ கீச்ச மூச்ச என்று கத்தும் ஒலியாக மட்டுமே இருந்தது.

அந்தப் பெண் கீர்த்தனையின் பல்லவியை முடித்து விட்டுச் சரணத்தின் நடுவில் ஓர் அடியை இதே ரீதியில் பாடியது. அப்புறம் கடைசி அடி. கீர்த்தனை முடிந்து விட்டது.

அவர் இன்னுமொரு கீர்த்தனைக்கு ஆர்டர் கொடுப்பதற்குள் எழுந்து கொண்டேன். ''என்ன ஸார், புறப்பட்டு விட்டீர்களா?'' என்று கேட்டார்;

"ஆமாம்: வேலை ரொம்ப இருக்கிறது!" என்றேன். தம் பெண்ணின் சங்கீதத்தை இன்னும் நான் சற்று நாழிகை ரஸிக்க வில்லையே என்ற ஏமாற்றம் அவர் முகத்தில் தோற்றமளித்தது. "எப்படிப் பாடுகிறாள் பார்த்தீர்களா! இந்த மாசமே அவளுக்குச் சங்கீதம் கற்றுக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறேன். வீடு முடிந்து ஊர் திரும்பியதும் முதல் வேலையாக அவளுக்குப் பாட்டு வாத்தியார் ஏற்பாடு செய்வதாக உத்தேசம். ஏன், செய்யலாமில்லையா?" என்றார்.

சங்கீதப் பயிற்சியை ஆரம்பித்தால் மறுபடியே இன்னும் யாரோ அந்தக் குழந்தையும் அதன் வாத்தியாரும் படப்போகும் வேதனையை எண்ணி உள்ளூர அனுதாபம் கொண்ட நான், "சங்கீதம் ஆரம்பிக்கலாம். ஆனால் இரண்டு மூன்று வருஷங்கள் போகட்டுமே? பாட்டு என்றால் வேடிக்கை. நிர்வகித்துப் பாட வேண்டாமா? உங்கள் குழந்தை ரொம்ப வீக்காக வேறு இருக்கிறாள். இன்னும் இரண்டு மூன்று வயசு போனால் நல்லது!" என்றேன்.

"வேண்டியதில்லை, ஸார்! அவள் ரொம்பப் புத்திசாலி! எல்லாம் நிர்வகித்துப் பாடுவாள். இப்போதே எப்படிப் பாடுகிறாள், பாருங்களேன்!" என்றார் அவர்.

"சரி, செய்யுங்கள்!" என்று கூறி விட்டுக் கழற்றிக் கொண்டேன். அதற்கு மேலும் அவரைத் தடுக்க எனக்கு என்ன உரிமை?

மற்றுமொரு வீட்டில் ஒரு பெரியவர்: நான் மாலையில் அவ்வீட்டுக்குப் போனதும் வாக்கிங் ஸ்டிக்கை எடுத்துக் கொண்டு வெளியே கிளம்பி விடுவார்! அவருக்கு உடம்பு கிடம்பு சரியாக இல்லாமலோ, அல்லது மழையினாலோ வெளியே போக முடியாமல் போய் விடுகிறதென்று வைத்துக் கொள்ளுங்கள்! பேத்தியை விளித்து, "ஸார், வந்திருக்கிறார். சொல்லிக் கொண்டு சீக்கிரம் அனுப்பு!" என்பார். 'சொல்லிக் கொள்வதை'விட 'அனுப்புவதில்' தான் அவருக்குப் பரம திருப்தி! சங்கீதத்தில் அவ்வளவு ஈடுபாடு மனுஷருக்கு!

"ஏன் ஸார்! தன்யாஸி ராகத்துக்கு என்ன தாளம்!"—மேற்படி அபூர்வமான கேள்வியைக் கேட்டது, நான் பாடம் சொல்லிக் கொண்டிருந்த வீட்டுக்கு வந்திருந்த அவர்கள் உறவுக்காரப் பெண்மணி ஒருத்தி! தனக்குச் சங்கீதத்தில் பிரக்ஞை ரொம்ப உண்டு என்பதைக் காட்டிக் கொள்ளவேணும் என்பதற்காகத்தான் அந்த அம்மாள் இவ்வாறு என்னிடம் கேட்டாள்!

"ராகத்துக்கும் தாளத்துக்கும் என்ன சம்பந்தம்! நீங்கள் கேட்பது மகா அபத்தமான கேள்வி!" என்று எல்லார் எதிரிலும் உண்மையைச் சொன்னால் அந்தப் பெண்மணியின் மனசு புண்படும். எனவே, "தன்யாஸியா? உங்களுக்கு இஷ்டமான தாளத்தில் பாடிக் கொள்ளுங்களேன்! இன்ன தாளத்தில்தான் பாடணும் என்று எனக்குக் கிடையாது!" என்று அவளைத் திருப்திப்படுத்துவதற்காக ஏதோ சொல்லி வைத்தேன்.

"அதுதானே கேட்டேன்! நான் அப்படித் தான் சொன்னேன்! என் சிநேகிதி ஒருத்தி அதே தாளத்தில்தான் பாடணும் என் சண்டை பிடித்தாள்!" என்று தன் தோழியையும் சந்தியில் இழுத்து விட்டாள் அந்த அம்மணி!

அந்தத் தோழி வெறும் கற்பனையாகவே இருக்கலாம்!

"ஸார்! உங்க சிஷ்யை வர வர ரொம்ப மோசமாயிருக்கிறாள்!" என்று தம் பெண்ணைப் பற்றிப் புகார் செய்தார் ஒரு தகப்பனார்.

"ஏன், என்ன பண்ணுகிறாள்?" என்றேன்.

"சொன்ன பேச்சு ஒன்றையாவது கேட்டால்தானே!"

"உக்கும், உனக்கு என்ன வேலை!" என்று சிணுங்கினாள் பெண்.

"சொன்ன பேச்சு எதைக் கேட்கவில்லை?" என்றேன்.

"வயிறு நிறையச் சாப்பிடுவதில்லை. எதுவும் பண்ணினாலும் வேண்டாம் என்கிறது. உடம்போ நாளுக்கு நாள் இளைக்கிறது!" என்றார் அப்பா.

"ஆமாம்! இளைக்கத் துரும்பாகப் போய் விட்டேன்! நீங்களே சொல்லுங்கோ, ஸார். முன்னேக்கு இப்போ பருத்திருக்கிறேனா இல்லையா?" என்று என்னைச் சாட்சியத்துக்கு அழைத்தாள் பெண்.

"நாங்க முடியாமல்தான் பருத்து விட்டாய்!.... அதுதான் போகட்டும் என்று டானிக்கையாவது குடிக்கிறாளோ கேளுங்கோ ஸார்! பத்து ரூபாய் கொடுத்து வாங்கின டானிக் அப்படியே இருக்கிறது! திரும்பிக் கூடப் பார்க்க மாட்டேன் என்கிறாள்!" என்று புகார்ப் படலத்தைத் தொடர்ந்தார் தந்தை.

"எதுக்காக டானிக் சாப்பிடுகிறது? எனக்கென்ன வியாதியா, பலவீனமா! நான்தான் வேண்டாம் என்று சொல்லலேனே! கேட்காமல் உன்னே டானிக் யார் வாங்கச் சொன்னது?" என்றாள் என் சிஷ்யை.

"பாருங்கோ, ஸார்! நீங்களே பார்த்துக்குங்கோ!" என்று தந்தை என்னிடம் முறையிட்டார்.

"நான் என்ன சின்னக் குழந்தையா என்ன? பதினெட்டு வயசு ஆகவில்லை? வயிற்றுக்கு வேண்டியதைச் சாப்பிடவும், உடம்பைப் பார்த்துக் கொள்ளவும் கூடத் தெரியாதா, என்ன எனக்கு! அளவுக்கு மீறித் தின்றால் அநாவசியமாக டானிக் சாப்பிட்டால் உடம்புக்குக் கெடுதல்! தெரிஞ்சுக்கோ" என்றாள் பெண்.

"பார்த்தேளா, ஸார்! சொன்னதைக் கேட்கிறாளா பாருங்கோ! நீங்கள்தான் சொல்லி அப்பா அம்மா பேச்சைக் கேட்டு படி செய்யணும்! இல்லா விட்டால் இவ பெற்றோர் சொல்லைக் கேட்காததினால் ஏற்படும் பாவமெல்லாம் உங்களுக்குத்தான் வந்து சேரும். சிஷ்யன் செய்கிற பாவமெல்லாம் குருவின் தலையில்தான் வந்து விடுமாம் சாஸ்திரமே சொல்கிறது!" என்றார் அந்தத் தந்தை.

எப்படி இருக்கிறது கதை!

பாவம் வந்து சேர்வதற்கு இப்படி ஒரு வழி இருக்கிறதாம்!


உங்கள் சமையலுக்குத் தேவையான
மணத்திற்கும் ருசிக்கும்
வெஜிடபிள்
எண்ணெய்
களாலான
OK
வனஸ்பதி
உபயோகியுங்கள்
அது ஆரோக்யத்திற்கு ஏற்றது: தூய்மையானது. வைட்டமின்கள் A மற்றும் D யுடன் கூடியது
சுத்தமாகப் பாக் செய்யப்பட்டு 3 வசதியான குடும்பத்திற்கேற்ற சைஸ்களில் கிடைக்கின்றது.
தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை
OK
MADE FROM VEGETABLE OILS ONLY
OK
OK பரிசுக் கூப்பன்களை சேகரியுங்கள்
EP-EAC 9

உள்ளத்தில் ஓர்



அம்மா கேட்ட கேள்விக்குச் சற்றும் தயங்காமல் தான் பதில் சொன்ன விதத்தை இப்போது நினைத்தால் ஆச்சரியமாக இருந்தது உமாவுக்கு. கண்கள் கலங்கவில்லை; குரல் கமறவில்லை. ஆழ்கடலின் அமைதியோடு உமா சொல்லி விட்டாள்.

''.....எனக்கு இதில் சம்மதமில்லே, அம்மா! அவரை மணக்க என்னால் முடியாது! அதற்கான தகுதி என்னிடம் இல்லே!....''

அம்மா அதிர்ந்து போய்த் தவித்தாள். ''என்னடி, உமா, சொல்றே! எனக்கு எதுவும் புரியவில்லையே! அவ்வளவு தூரம் அவரோடு பழகி விட்டு இப்போது இப்படிச் சொன்னால்?...''

''.....புரியும்படி எனக்கு எதுவும் சொல்லத் தெரியவில்லே. அவருடன் பழகியதால்தான் சொல்கிறேன். அவரை மணப்பதற்கான தகுதி என்னிடம் இல்லே. இந்தத் திருமணம் நடந்தால் எங்கள் இருவருக்குமே நன்மையில்லே.... மேலே என்னை எதுவும் கேட்டால் எனக்குச் சொல்ல வராது....''

அம்மா உமாவை ஒரு முறை துருவிப் பார்த்தாள். மகளின் கண்களின் வழியே அவள் உள்ளத்தையே திறந்து பார்த்து விடுவதைப் போலப் பார்த்தாள். கெஞ்சவால் சாதிக்க முடியாததைச் சற்றே கோபித்தால் சாதிக்க முடியுமோ என்று முயலுவதைப் போல் கண்கள் வெக்கப் பார்த்தாள். ஆனால் அந்தக் கோபத்துக்கும் கெஞ்சலுக்கும் உமா விட்டுக் கொடுப்பதாக இல்லே. அவள் ரொம்பவும் ஆலோசித்துத்தான் அந்த முடிவுக்கு வந்திருந்தாள்... உமாவின் தீர்மானமான பார்வையின்முன் அம்மாவால் நிற்க முடியவில்லே. மௌனமாக அப்பால் நகர்வதைத் தவிர வேறு வழியில்லே.

அடுத்த கணம் அந்த மௌனமே பயங்கரமான தன் கரங்களை விரித்துக்கொண்டு கழுத்தை நெரிப்பது போல் உமாவுக்குள் ஒரு தோற்றம்: கைக்கோலால் தன் கண்ணைத் தானே குத்திக் கொண்டு பார்வையை இழந்து விட்டாற் போல் நெஞ்சம் துடிதுடித்தது. அறையின் கதவைத் தாளிட்டு விட்டு, தனக்குத் தானே விம்மினாள். சற்று முன் இருந்த தைரியம் போன இடம் எங்கே?

மேஜையின் மேல் திவாகரின் படம் பளபளத்தது. வெள்ளிச் சட்டத்துக்குள் அவன் புன்னகை ஜொலித்தது. எத்தனை அழகான புன்னகை! அவனும் அவனுடைய சொக்க வைக்கும் அந்தப் புன்னகையும் தங்களுக்குச் சொந்தமாகாதா என்று ஏங்கி நிற்கும் எத்தனையோ பெண்களை அவளுக்குத் தெரியும்.

ஆரம்பத்தில், ''அவர்தான் என் அத்தான் திவாகர். எங்கள் வீட்டில்தான் தங்கி

வீ. சுவாமிநாதன்

பிருக்கிறாள்'' என்று சொல்லி அவர்களுடைய பொறுமைத் திரையை மூட்டி விட்டுக் கேலி செய்வது அவனுக்குக் கர்வமாக இருந்திருக்கிறது. அடிக்கடி அம்மா, ''கஸ்தூரி முடிந்ததும் உமாவைத் தியாகுவோடு கட்டிப் போட்டாகணும்....'' என்று அப்பாவிடம் சொல்லக் கேட்டு அவள் அகம் மகிழ்ந்திருக்கிறாள். ஆனால் அதெல்லாம் சில நாட்களுக்குத்தான். விதையூன்றிய அந்த ஆசை முளை விட்டுத் தளிர் விட்டு வளர ஆரம்பித்தபோது அதை மேலும் வளர விடாமல் அவளே தடையிட்டு விட்டாள். 'தியாகுவின் கவி உள்ளத்துக்கு ஏற்றவள் நான் இல்லை' என்ற எண்ணத்தில் அந்தப் பிரேமையைத் தனக்குள் சிறையிட்டு விட்டாள்.

ஜன்னலைத் திறந்ததும் சாளரத்தின் வழியே ஜில்லென்ற காற்று சுகமாய் வந்தது. தோட்டத்தின் முன்புறம் ஸ்கூட்டரைத் தள்ளிக் கொண்டு தியாகு ஆபீசுக்குக் கிளம்பி விட்டது தெரிந்தது. தினமும் காலை அவ்வாறு அவன் கிளம்பும் போது, அவனை வழியனுப்புவது போல், அவள் வாசலில் வந்து நிற்பாள். இன்று சொல்வதை யெல்லாம் சொல்லி விட்டு, அவனை எந்த முகத்தோடு நேருக்கு நேராகப் பார்ப்பது?

ஸ்கூட்டர் கிளம்பிப் போகும் சத்தம் மெல்ல மெல்லத் தேய்ந்து மறைந்தது. இக்கணத்தில் அவளுக்கும் அவனுக்குமிடையே எத்தனை தூரம்! எப்போதுமே தனக்கும் அவனுக்கும் இடையே இணைக்கமுடியாத தொலைவு இருப்பதாகத்தான் அவள் எண்ணிக் கொண்டாள். அவன் கவிஞன். அவளென்ன? ஆற்றின் கரைகளிடையே பாலம் போடலாம். வானத்துக்கும் பூமிக்கும் பாலம் அமைக்கத் திட்டமிடுவது பேதைமைதான் அல்லவோ?

தியாகுவை மணக்கத் தன் மகள் சம்மதிக்க வில்லை என்ற உண்மை தன் தாயின் உள்ளத்தைச் சுட்டுச் சாம்பலாக்கி யிருக்கும் என்று உமா அறியாதது அல்ல. ஆனால் மனத்தில் ஒரு தாழ்வுணர்ச்சியோடு, எண்ணத்தில் ஒரு திறனின்மையோடு, அவனை மணப்பதில் அர்த்தம் என்ன இருக்கிறது? மலரினும் மெல்லிய தியாகுவின் மன இயல்பை உமா அடையாளம் கண்டு கொண்டு விட்டாள். அதைத் தெளிவுற அம்மாவிடம் எடுத்துச் சொல்லத்தான் அவளுக்கு வார்த்தை கிடைக்கவில்லை.

மலர் என்றதும் நினைவு வருகிறது. ஒரு நாள் வைகறை. பனி பிரியாமல், இருள் புலராமல், இரவும் பகலும் இல்லாமல் ஏதோ ஓர் இணைப்பின் மனோகரம். அவள் வாசலில் கோலமிட்டுக் கொண்டிருந்த போது, தியாகுவின் குரல் கேட்டு நிமிர்ந்தாள்.

''இங்கே வாயேன், உமா! இந்தச் செடியிலே ரோஜாப்பூ எத்தனை அழகாகப் பூத்திருக்கு, பாரேன்!''

அவன் குரல் குழைந்தது. அவளைக் கெஞ்சி அழைப்பது போல. அழகின் ரசனையில் நெகிழும் குரல் அது. பட்டு ரோஜா அழகாகத்தான் இருக்கிறது; இரு இதழ்களின் மேல் வைரம் உருள்வது போல் பனித்துளி கட்டி யிருப்பது வேடிக்கையாகத்தான் இருக்கிறது. ஆனால் ஊரைக் கூட்டிப் பிரமாதப்படுத்தும் படி அதில் என்ன இருக்கிறது?

அவள் பூவைப் பறிக்கப் போனாள்: சட்டென அவளது கையை அவன் தடுத்தான்:

''....ஊஹூம், பூவைப் பறிக்கக் கூடாது. பூ செடியிலேயே இருப்பதுதான் அழகு. அப்படியே இதழ் கொட்டிப் போனாலும் பரவாயில்லை. அதுதான் இயற்கையின் நியதி....: உள்ளே வா, போகலாம்....''

கோலத்தை முடித்துக் கொண்டு அவள் திரும்பும் போது அவன் அவளுக்காகக் காத்திருந்தான். ''....அந்த ரோஜாப் பூவை வைத்து ஒரு கவிதை எழுதியிருக்கிறேன்; படிக்கிறேன், கேட்கிறாயா?''

சொற் ஜாலம் செய்து அந்த மலரின் எழிலை அவன் வர்ணிக்க முயன்றிருந்தான்: இதழ் இதழாய் மலர்ந்திருக்கும் அதன் எழில் அழகும் மணமும் சொற்கள் அடுக்கடுக்காய் அமைந்து கவிதையாய் அழகும் அமைப்பில் முழங்கியது. வெகு நேரம் இந்தப் பூ அழகா, பா அழகா என்று புரியாமல் உமா அமர்ந்திருந்தாள்.

இப்படித்தான் ஒவ்வொரு முறையும். வெகுளி போலத் தன் சிந்தனைகளை அவளிடம் அவன் கொட்டி விடுவான். கவிதையாக அவன் பேசத் தொடங்கி விட்டால் என்னென்ன பேசுவது என்ற வரம்பைக்கூட அவன் மறந்து விடுவான். அவனுக்கு ஏன் தான் அவைகளை உமாவுடன் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்று தோன்றுகிறதோ?

அவன் காணுகிற ஒவ்வொரு காட்சியிலும் அவன் உள்ளத்தைத் தொடுகிற மாதிரி ஏதாவது ஓர் அம்சம் ஒளிந்திருக்கும். வெளியே அவனோடு உலாவச் சென்றால் நிமிஷத்துக்கு ஒரு முறை அவன் ரசனையைத் தூண்டி விடுகிற மாதிரி ஏதாவது தென்படும். ஒரு நாள் மாலை அவனோடு கடற்கரைக்குச் சென்று வந்ததை உமா இப்பிறவிக்கு மறக்க மாட்டாள்.

கிழக்குக் கடலில் பௌர்ணமி நிலவு உதித்துக் கொண்டிருந்தது. மேற்குத் திசைக் கட்டடங்களிடையே சூரியன் கோளம் காய்ந்து கொண்டிருந்தது. திரைச் சீலையில் தீட்டிய 'நவீன ஓவியம்' போல விதம் விதமான வண்ணக் கலவைகளும், குழைவுகளும் சிதறல்களும் பற்பல வடிவங்களாய் வானத்தை நிறைத்திருந்தன.

''வானத்தைப் பாரேன், உமா, 'அப்ஸ்ட்ராக்ட் பெயிண்டிங்' போல! இந்தக் 'கலர் காம்போஸிஷன்' யாருக்கு வரும்? இந்தக் கடவுளைத் தவிர. அதற்குள் எல்லா வர்ணமும் மாறிப் போய் விட்டது, பார்த்தாயா உமா! கண் மூடிக் கண் திறப்பதற்குள் என்னென்ன ஜாலங்கள்! எப்படி இத்தனை துரிதமாக மாறுகிறது? ஒரு முறை தீட்டிய ஓவியம் எப்போதும் ஒரே மாதிரிதான் இருக்கும். ஆனால், நான் தீட்டியதைக் கலைத்து, கலைத்ததை இழைத்து, வேடிக்கை காட்டுவதில்தான் தெய்வத்துக்கு ஆசை, அப்படித்தானே?''

''நேரமாகி விட்டதே, போக வேண்டாமா?'' என்றாள் உமா.

''இன்னும் கொஞ்ச நேரம் இருக்கலாம், உமா! ஐ லைக் திஸ் ஈவினிங்! ஐ லவ் திஸ் ஸீனரி! உனக்குத் தாகூரின் பாட்டு ஒன்று நினைவிருக்கிறதா? பெண்களின் மனமும் வானத்தின் வர்ணமும் ஒன்று என்று அதில்

சாட்சி யிருக்கிறதா? அதுதான் எத்தனை பொருத்தம்! ஒரு சமயம் பொன் வெள்ளமாய் ஜொலிப்பது, உடனேயே மறைந்து இருட்டிக் கொண்டு கறுப்பது, திடீரென்று ஒரு பகுதி மேகம் கலைந்து வெய்யில் அளிப்பது, அந்த நீட்டிலும் கண்ணைப் பறிக்கிற வானவில் போட்டுக் கொண்டு சிரிப்பது, இந்நிலை பெண்களுக்கும் வானத்துக்கும் பொதுவானவே?....''

உமா குப்பென நாணத்தால் சிவந்தாள்: பொதுவாக அவன் பேசினாலும் தான் பெண் என்ற நினைவு அவனுக்கு வருவதைத் தான் ஏற்படுத்தியது. அதைக் கவனிக்காமல் அவன் மேற்கொண்டு பேசியது, கேட்க வேதனையாக இருந்தது. பொறுமை நழுவா திருக்கப் பற்களைக் கடித்துக் கொண்டாள்.

பிறகு தனிமையில் அமர்ந்து சிந்திக்கும் போது தன் மீதே கோபம் வந்தது உமாவுக்கு: தன்னிடம் சொல்லி யிருந்த வர்ணனைகளை ஒரு பெண்ணிடம் சொல்லி யிருந்தால் அந்தக் கல்கடா ராணியும் உருகியிருக்குமே?

தியாகுவின் கவிதைகள் பத்திரிகையில் வெளி வந்த போதெல்லாம் உமாவின் சிநேகிதிகள் அவளைக் கேள்விகளால் துளைத்து விடுவார்கள். அந்தக் கருத்து சிறப்பாயிருந்தது, அந்த உவமை அழகா யிருந்தது என்று அவர்கள் சொல்லும் போதெல்லாம் புதிதாக எதையோ கேட்பது போல் உமா சிரிப்பாள். இத்தனைக்கும் அந்தக் கவிதைகளைப் பிரசுரமாவதற்கு முன்பே படித்துக் காட்டி விளக்கி யிருப்பான் தியாகு.... தனக்குப் புலனாகாத மென்மைகள் இவர்களுக்கு மட்டும் எப்படிப் பளிச்சென்று கண்ணில் படுகிறது? 'கவிதை நயம் கற்று வருவதில்லை, கூடவே பிறக்கிறது' என்று இதைத்தான் சொல்கிறார்களோ? அவனுடைய சிந்தனைகளில் பங்கு கொள்ளத் திறமையற்ற தனக்கு அவன் வாழ்வில் மட்டும் பங்கு கொள்ள அருகதை ஏது...?

இப்படி முன்னமேயே குழம்பிக் கொண்டிருந்த அவள் உள்ளத்தை மேலும் குழப்புவது போல் ஒரு சம்பவம் நடந்தது. காளிதாஸனின் சாகுந்தலம் அவளுக்கு வடமொழிப் பாடம். எதை எதையோ விளக்கிக்கொண்டு அந்தத் தியாகு சட்டென உணர்ச்சி வசப்பட்டுப் பேச ஆரம்பித்து விட்டான்.

''நிறைந்த அழகு என்பது பூர்ணமாகப் பூத்த பூவைப் போல உமா! பூர்ணமான அழகை நிஜ வாழ்வில் காணவே முடிவதில்லை. எத்தனை அலைந்து தேடினாலும் இதழ் இதழாக அங்கங்கே சிதறிக் கிடப்பது தென்படுகிறதே தவிர, ஓர் இடத்தில் சேர்ந்து விளங்கக் காண முடிவதில்லை. இறைவனின் படைப்பில் அது இது வரை தீராத ஒரு குறைதான். அந்த ஏக்கத்தைக் காளிதாஸனும் சகிக்க முடியாவில்லை போலிருக்கிறது! 'இறைவன் செய்யாததை நானாவது செய்கிறேன்' என்று ஆவலில்தான் அவன் சகுந்தலையைப் படைத்திருக்கிறான். அதனால்தான் தன் கற்பனையில் பிறந்த அந்தப் பெண்ணிடம் பெண்மையழகின் ஒவ்வொரு லட்சணத்தையும் குழைத்து வைத்து மகிழ்ந்திருக்கிறான் அவன்....''

தியாகு சொன்னதை அப்படியே பரீட்சையில் எழுதி ஆசிரியையின் பாராட்டை உமா பெற்றது உண்மைதான். ஆனால் உள் மனத்தின் ஓரத்தில் மெல்ல ஒரு சஞ்சலம் உறுத்தியது. பெண்மையழகின் சிதறிய இதழ்களை அவன் எங்கெங்கே பார்த்தான்? அப்படியென்றால் தன்னிடம் எதைக் கண்டான்?

பேச்சுவாக்கில் அவன் எதை எதையோ அவளிடம் குறிப்பிட்டதுண்டு. அவனுடைய ஆபீஸ் ஸ்டெனோவின் பால் வண்ண மேனி, அவனுடன் பஸ்ஸில் வரும் பெண்ணின் கற்றைக் கூழல், அடுத்த தெருவிலிருந்து இரவில் கேட்கும் வீணாகானம்—ஒரு வேளை, இந்தச் சிறப்புக்களை ஒன்றாய் இணைத்து ஒரு வடிவத்தை அவன் தன் மன அரங்கில் செதுக்கி வைத்திருக்கிறானோ? அவ் வடிவத்துக்கும் தனக்கும் உள்ள ஒப்புமைதான் என்ன?

நிலைக் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள் உமா. அழகு இலக்கணத்தின் எந்த அம்சம் தன்னிடம் இருக்கிறது? பின்னடைந்த நெற்றிமேடும், பெரிது பெரிதாய் வெள்ளை விழிக் கோலமும், பாங்குற அமையாத இதழ்களும் — தாமரையெங்கே? சகுந்தலையின் லாவண்யம் எங்கே?

உமா கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் கொட்டி விட்டாள். மனம் பொங்கி ஓய்ந்ததின் அமைதியாக விளங்கும் உள்ளத்தில் நிர்மலமாக ஒரு குரல் கேட்டது. 'நீ தியாகுவுக்கு ஏற்றவள் அல்ல... அவனுக்கு ஏற்றவளாக ஒருத்திக்கு இடம் கொடுத்து விட்டு நீ விலகிக் கொள்வதில்தான் உனக்கு உண்மையான இன்பம் இருக்கிறது.'

அப்பொழுதுதான் அம்மா அவளிடம் சொன்னாள், தியாகு அவளை மணக்கச் சம்மதித்து விட்டதை. அந்தச் சம்மதமும் மனப் பூர்வமானதல்ல என்றுதான் அவளுக்குத் தோன்றிற்று: இளமையில் பொங்கும் வேட்கையின் அவசரத்தாலோ, அல்லது பெரியோர்களின் வார்த்தையை மீறத் துணிவின்றியோ அவன் ஆமோதித்து விட்டான் என்று அவள் நினைத்தாள்.

அப்படிக் கடமைக்காக ஏற்கும் வாழ்வில் அன்பும் பாசமும் விளங்க இடம் ஏது? ஒன்றுக்கொன்று பொருந்தாத இரு உருவங்களை ஒன்று சேர்த்தால் அங்கே இன்பம் விளைய வழியேது?

மாஜிஸ்திரேட் (குற்றவாளியைப் பார்த்து): நீ திருடவில்லை என்று சாதிப்பதில் பயன் ஒன்றுமில்லை. நீ திருடிய வீட்டுக்காரர் நீதான் திருடினாய் என்று கூறுவதோடு உன்னுடைய அடையாளங்களையும் சரியாகச் சொல்லுகிறாரே!



குற்றவாளி: அதெப்படி முடியும்? நான் போன அன்றைக்குத்தான் அவர் போர்வையை இழுத்து முகத்தை மூடிக் கொண்டு படுத்திருந்தாரே!

எப்போதும், எதையும் கொடுப்பவனாக இருப்பாயாக; பிரதியாக எதனையும் எதிர்பார்க்காதே! அன்பைக் கொடு, உதவியைக் கொடு, ஊழியத்தைக் கொடு - உன்னால் இயன்றமட்டும் சிறிதேனும் கொடு. விலை பேசுவதை விட்டு விடு. எந்த விதமான நிபந்தனையுமின்றி, ஆண்டவன் நமக்குக் கொடுப்பதுபோல நாமும் நமது தாராள குணம் காரணமாகப் பிறருக்குக் கொடுப்போமாக.

— ஸ்வாமி விவேகானந்தர்

உமா எல்லாவற்றையும் ஆராய்ந்துதான் 'வேணுவை மணக்கச் சம்மதமில்லை' என்று தெரிவித்தாள் முடிவாக. கண்கள் கரைபுரண்டாலும், கடமையைச் செய்த ஒரு திருப்தி இதயத்தை நிறைத்தது. நாளை வேணுவுக்கு ஏற்றாற்போல் ஒரு மனைவி வருவாள் — மலர் போல, மாந்தளிர் போல. அவன் கற்பனையைத் தாண்டி விட்டுக் கோடிக் கோடி கவிதைகள் தருவாள். அதைக் காணும் பேறு உமாவின் தன்னிகரற்ற இன்பமன்றோ? கண்ணீரில்தானே காலத்தோடு அழியாத குணச் சித்திரங்கள் பிறந்திருக்கின்றன!

வேணு ஆபீஸிலிருந்து திரும்பி வந்து விட்டான். தினமும் போல ஒரே தாவலில் நான்கு படிகளாக அவன் மாடிக்கு விரைந்தான்.

உமாவின் உள்ளத்தில் ஒரு சோர்வு. தன் தீர்மானத்தைக் கேட்டபின் அவனிடம் ஏதாவது ஒரு மாறுதல், இனம் தெரியாத ஒரு வருத்தம் இருக்கும் என்று எதிர்பார்த்த அவளுக்குச் சற்றே ஏமாற்றம்தான். அவனுடைய சுபாவமான கொந்தளிப்பும் கோலாகலமும் அப்படியேதான் இருக்கின்றன. ஒரு வேளை, 'தாட்சண்யப்பட்டுக் கொண்டு உமாவை மணக்க வேண்டாம்' என்ற விடுதலையுணர்ச்சியில் தோன்றிய புதுக் குதூகலமோ இது?

சட்டெனக் கால் அரவம் கேட்டுத் திரும்பியவள் அவனைக் கண்டு திகைத்துப் போனாள்.

''....உமா, இங்கே பாரேன்! இன்றைக்கு 'சத்திய ஜித் ரே' டைரக்டர் செய்த ஒரு வங்காளிப் படம் வந்திருக்கு! இரண்டு டிக்கெட் ரிசர்வ் செய்திருக்கிறேன், எனக்கும் உனக்கும்தான். உன் அம்மாவிடம் உத்தரவு வாங்கிவிட்டேன். சீக்கிரம் கிளம்பு.''

''என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நான் படத்துக்கு வரவில்லை....''

''அப்படியானால் நானும் போகவில்லை. டிக்கெட் வீணாகட்டும்.'' —

அவளால் தாங்க முடியவில்லை. வாய்விட்டுக் கொட்டி விட்டாள். ''தயவு செய்து நீங்கள் போய் வாருங்கள். உங்களுடைய உயரத்தை என்றும் எட்ட முடியாது. என்னை விட்டு விடுங்கள். உங்களுக்கு நான் ஏற்றவள் இல்லை....'' அவள் கண்கள் துளித்துத் ததும்பி விட்டன.

சட்டென அவன் எழுந்தான்: ''நான் உன்னை விடப் போவதில்லை, உமா! உன் மறுப்பு மனப்பூர்வமானதல்ல என்று எனக்குத் தெரியும்....'' என்றான் உறுதியாக. அவள் ஆச்சரியத்தோடு அவனை மலரப் பார்த்தாள்.

''உன்னுடைய மனச் சங்கடம் அர்த்தமில்லாதது உமா! தகுந்த நேரம் வரும் வரை சொல்ல வேண்டாம் என்று இத்தனை நாள் சொல்லவில்லை! நான் என்றோ உன்னை மணந்து விட்டேன்! மனத்தளவில் உன்னோடு பல நாட்களாய் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். அதனால்தான் என் எண்ணங்களையெல்லாம் அவ்வளவு ஒளிவு மறைவின்றி உன்னுடன் பகிர்ந்து கொள்ளுகிறேன். அது எனக்கு சந்தோஷமாய் இருக்கிறது. அவ்வளவு தூரம் உன் குணம் எனக்குப் பிடித்திருக்கிறது. நீதான் எனக்கு மண்ணில் ஒரு பிறப்பையும், கற்பனையில் ஒரு துடிப்பையும் தர முடியும். தருவாயா, உமா?''

ஜன்னல் கம்பிகளைப் பிடித்திருந்த அவன் கைகளைச் சட்டென்று அவள் கைபொத்திற்று. திரும்பிய வேகத்தில், ஜன்னல் வழியே இருவரின் பார்வையும் வானத்தில் விழுந்தது. மாலை வானத்தில் பொன் மேகத்திடையே, ஒரு வெட்டுக் காற்றாடி படகு போல் மிதந்தது.

''அந்தப் பட்டத்தைப் பார்த்தாயா, உமா? ஆகாசம் முழுவதும் தனக்குச் சொந்தம் என்பது போல் அது எத்தனை ஆட்டம் போட்டுப் பறக்கிறது பார்த்தாயா? இவ்வளவு உயரத்துக்கு ஏறி, மேகக் கூட்டத்தோடு பறக்க அதனால் எப்படி முடிகிறது, தெரியுமா? அதற்குச் சரியாக சூத்திரம் போட்டுத் தரையிலிருந்து யாரோ ஜாக்கிரதையாக இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆதாரம் அறுந்துவிட்டால் பட்டம் என்னவாகும் தெரியுமா? தறி கெட்டு அலைந்து எங்கேயாவது தந்திக் கம்பியிலோ தெரு மரத்திலோ சிக்கிக் கொண்டு சின்னா பின்னமாகும்... நான் நூலறுந்த பட்டமாக ஆகாமல் காக்கும் ஆதாரமாக நீதான் இருக்க முடியும், உமா! உனக்குத்தான் அந்தத் திறமை உண்டு.. அந்த உரிமையை உனக்குத் தந்தால் ஏற்றுக்கொள்வாயா, உமா?''

''படத்துக்கு நேரமாகவில்லையா?''

சட்டென அவள்தான் பேச்சை மாற்றினாள். இன்ப வெள்ளத்தின் வேதனையில் இதயம் வெடித்துவிடும் போலிருந்தது.

''எனக்குத் தெரியும் உமா, எப்போதும் நீ எனக்குத்தான் சொந்தமென்று...''

மேலே அவர்கள் பேசவில்லை. சொல்லச் சொல்லவில்லை. இதயம் நிஜமாக நிறைந்த பிறகு சொற்களுக்கு இடமில்லை. எல்லை இல்லாத வனப்பில் ஜொலித்த வண்ணம் இருவருமே படத்துக்குக் கிளம்பிவிட்டனர்.

ஜோடியாகத் திரைப்படம் செல்லும் இருவரையும் பார்க்க உமாவின் அம்மாவால் நம்ப முடியவில்லை. காலையில் ஏதேதோ பேசிய உமா இவள்தானா?.... பெண்மை பிறருக்கு மட்டும் புதிரில்லை. பெண் பெற்ற தாய்க்குக் கூடப் புரியாத புதிர்தான். சிருஷ்டியின் நேர்த்தி அந்த ரகசிய மென்மையில்தான் அடங்கி யிருக்கிறது.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

Shakti Silks சக்தி ஸில்க்குகள் - மற்றும் ஸூட்டிங்குகள்



எடுப்பான ஆடைகள் - எங்கும் அணிந்து செல்லத்தக்கவை! நீங்கள் எங்கு சென்றாலும் தன்னம்பிக்கையுடனும், தோற்றப் பொலிவுடனும் விளங்க உங்களுக்கு சக்தி ஸூட்டுகள் இன்றியமையாதவை. இவை நாள்பட உழைப்பவை மற்றும் மடிப்பு கலையாமல் நிற்பவை. சக்தி ஸூட்டுகள், உருக்குலையாமல் காலையில் அணியும்போதிருந்த வனப்புடன், நாள் முழுவதும் விளங்குபவை.

கசங்காமல், சுருக்கம் விழாமல் எப்பொழுதும் புதுமை பளபளப்புடன் விளங்கும் சக்தி ஸில்க்குகளை அணிந்து நாள் முழுவதும் மகிழ்ச்சியுடன் திகழுங்கள்.

REGISTERED No. M 4392
Registered as a Newspaper in Ceylon

